CONN... 6 - FEB 1965 MADR...

தமிழ் வாழ்க.

துணர் சக. மலர் அ, கூ, ம.

# தமிழ்ப் பொழில்

விசுவாவசு — கார்த்திகை, மார்கழி, தை.

1966

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர் :

ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

# தமிழ்ப் பொழில்.


பதிப்பாசிரியர் குழு.

1. திரு. ச. சுயம்பிரகாசம். B. A., B. L., தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம், பொழிற்றொண்டர்.

2. திரு. நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.

3. சித்தாந்த கலாநிதி ஔவை சு. துரைசாமி பிள்ளை,
பேராசிரியர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

4. திரு. வித்துவான். க. வெள்ளைவாரணனர்,
ஆராய்ச்சித்துறை, அண்ணுமலைப் பல்கலைக் கழகம்

5. திரு. கு. சிவமணி எம். ஏ. பி. டி., முதல்வர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

6. திரு. வித்துவான். தி. அடிகளாசிரியர், பேராசிரியர், ,,

7. திரு. வித்துவான். ச. பாலசுந்தரம், பேராசிரியர், ,,

8. திரு. வித்துவான். சி. கோவிந்தராசன், பேராசிரியர், ,,


## உள்ளுறை.


துணர் சக. மலர் அ, சு, ம



| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பொழிற்றொண்டர் பேசுகின்றார் | 225 |
| 2 | பாடல் பெற்ற பரிசு: திரு, கு. சிவமணி | 229 |
| 3. | மலர் : புலவர், ந. செகதீசன் (ஈரோடு) | 247 |
| 4. | திருக்கடல் மல்லை<br>திரு. தி. நா. அறிவுஒளி | 249 |
| 5. | காலக் கணக்கு<br>திரு. தி. வேங்கடராமன், பி. ஏ., பி. டி., | 255 |
| 6. | திருமங்கை ஆழ்வார் காட்டும் இயற்கைக்காட்சிகள்<br>திரு. மு வெள்ளைச்சாமி | 259 |
| 7. | இயற்கை: திரு ப. தமிழ்மணி | 264 |
| 8. | கற்பின் குழவி மனோன்மணி<br>திரு. இரா. குழந்தைவேலு, எம். ஏ , | 269 |
| 9 | வெண்பாவின் ஓசையும் தளையும்<br>திரு. ந. மு. கோவிந்தராய நாட்டார் | 275 |
| 10. | மக்கட்பேறு: திரு. அ. தா. ப. திருஞானசம்பந்தன் | 278 |
| 11. | வரலாறும் செவிவழிச் செய்தியும்<br>வானகோவரையன்<br>திரு. அடிகளாசிரியர் | 284 |
| 12. | மறைமலையடிகள் வரலாறு<br>திரு. அடிகளாசிரியர் | 287 |
| 13 | புரு பறந்தது: பொழிற்றொண்டர் | 289 |

# தமிழ்ப் பொழில்

## தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு


| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௯௰௭ | மலர் |
|---|---|---|
| சக | விசுவாவசு, கார்த்திகை, மார்கழி, தை<br>1965-66 நவம்பர், டிசம்பர், ஜனவரி | அ. கூ. ம: |


## பொழிற்றொண்டர் பேசுகின்றார் !......

செங்கதிரோன் காரிருள் கிழித்துக் கீழ்வானில் சிரித்திடவும், மங்கல மங்கையர் பொங்கலிடவும், தங்கமதலையர் செங்கரும்பைச் சுவைத்துக் கூத்திடவும், சிங்கமனைய செந்தமிழ்மறவர் மகிழ்வால் சிந்துபாடவும், பொங்கும் இளமையால் பூரிக்கும் இளைஞர் புதுப்பொலிவு கொள்ளவும், வங்கம் போல் வளைந்த முதுகுடைய முதியோர் வாழ்த்துரைக்கவும், பொங்கலோ பொங்கல் என்னும் முழக்கம் எங்கணும் பரவவும், பூக்கின்ற தை முதல் நாள், தமிழர்தம் திருநாள்; "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" என்னும் தமிழ்மறையின் பொருளுரையை நன்றியுடன் போற்றுகின்ற நன்னாள். இந்நாளில், பொழிலன்பர்கள் எல்லோருடைய இதயத்தில் அன்பும், எண்ணத்தில் இனிமையும், செயலில் செம்மையும், வாழ்வில் மகிழ்ச்சியும் பொங்குக என்று வாழ்த்துகின்றோம். வையகத்தில்

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க"

என்றும் வேண்டுகின்றோம்.

## குழந்தைகள் விழா :

1. இராதாகிருட்டின இளையோர் அடிப்படைப்பள்ளியினர் 14—11—65 அன்று குழந்தைள் விழாவைத் தமிழ்பெரு மன்றத்தில் கொண்டாடினர். மிகுந்த ஊக்கத்துடனும் எழுச்சியுடனும் பள்ளிப் பிள்ளைகள் அனைவரும், நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டனர். குழந்தைகளுக்காகப் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும், கல்வித்துறைப் போட்டிகளும், கலைப் போட்டிகளும், நிகழ்வுற்றன. கைவண்ணமும் கலைவண்ணமும் இயைந்து கவினுற அமைந்த கண்காட்சி நிகழ்ச்சிக்குப் பொலிவைச் சேர்த்தது. குழந்தைகளே மிகவும் முயன்று அவர்களுடைய கற்பனைக்கும் திறமைக்கும் ஏற்றவாறு பற்பல ஓவியங்களை வரைந்திருந்தனர். களிமண் உருவங்களையும் உருவாக்கியிருந்தனர். பன்னிறப் பொடியினால் தண்ணைக்கவரும் வண்ணக்கோலம் வடித்திருந்தனர். அண்ணல் நேருவை நினைவூட்டும் ஆடல், பாடல், உரையாடல் நிகழ்ச்சிகளும் அமைந்திருந்தன. பள்ளித் தலைமையாசிரியர் திரு. சிவ. பால சுப்பிரமணியன் அவர்கள் பள்ளிப் பிள்ளைகளின் போற்றுதற்குரிய சிறம்பியல்களை எடுத்துக் கூறினார்கள். உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. S. பஞ்சநதம் பிள்ளை எம் ஏ., எல் டி. அவர்கள் குழந்தைகளின் ஆர்வத்தைப் பாராட்டி 'வாழ்த்துரை வழங்கினார்கள். நாளைய நாட்டுக் குடிமக்களாக உருவாகவிருக்கும் இன்றைய குழந்தைகளின் உணர்வை ஊக்கிவிப்பதோடு அதனை நெறிப்படுத்தவேண்டிய இன்றியமையாமையையும் விளக்கிப் போட்டியில் வெற்றிபெற்ற குழந்தைகளுக்குக் கல்லூரி முதல்வர், பேராசிரியர் திரு. கு. சிவமணி எம்.ஏ, பி டி. அவர்கள் பரிசுகளை வழங்கி வாழ்த்தினார்கள். நாட்டுவாழ்த்துடன் விழா இனிது நிறைவுற்றது.

2. உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளியின் சார்பில் 15—11—65 அன்று தமிழ்ப்பெருமன்றத்தில் நிகழ்ந்த குழந்தைகள் நாள் விழாவில் சங்கக் கல்வி நிலையங்கள் அனைத்தும் கலந்து கொண்டன. விழாவின் சிறப்பைப் புலப்படுத்துவது போன்று பெருமன்றம் முழுவதும் கூட்டம் நிரம்பியிருந்தது. விழாவை ஏற்பாடு செய்ததன் நோக்கம் பற்றிப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. எஸ். பஞ்சநதம் பிள்ளை எம். ஏ., எல். டி. அவர்கள் விளக்கியதோடு விருந்தினர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். விழா

விற்கு ஓய்வுபெற்ற மாவட்டத் தண்டல் நாயகம் திரு. ஆர். எஸ். மலையப்பன் ஐ. ஏ. எஸ். அவர்கள் தலைமையேற்றார்கள். தலைவர் தம் முன்னுரையில் காந்தியடிகளின் தொண்டினை விரிவாகக் கூறிக் காந்தியடிகளின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்தார்கள், பின்னர், சங்கத் தலைவரும் பொழிற் றொண்டருமாகிய திரு, ச. சுயம்பிரகாசம் பி. ஏ., பி. எல். அவர்கள் குழந்தைகள் நாளின் நோக்கம் குறித்தும், நோக்கத்தை அடைதற்குரிய ஆக்கநெறிகளில் மாணவர்கள் ஈடுபடவேண்டிய வழிகளைப்பற்றியும் தெளிவாக விளக்கிக்கூறி, அண்ணல் நேருவின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்கள். சங்கப் பேரன்பினராய திரு. ந. மு. கோவிந்தராய நாட்டார் பி ஏ , எல் டி. அவர்கள் காந்தியடிகளின் வாழ்க்கையிலிருந்து சில நிகழ்ச்சிகளைத் தொகுத்தும் இருவருடைய திருவுருவங்கள் எல்லோர்க்கும் உயர்பழக்கம் அளிக்கின்றன என்பதையும் கூறி வாழ்த்துரை வழங்கினார்கள்.

பின்னர், கல்லூரி முதல்வர், பேராசிரியர் திரு. கு. சிவமணி அவர்கள் தமது சிறப்புரையில் அடிகள் காந்தி, அண்ணல் நேரு இருவர் தம்மியையையும், உலக அரங்கில் ஒளிவிளக்கமாக விளங்கும் அவர்களது உயர்ந்த செல்வாக்கையும், அவர்களுடைய அடிச்சுவட்டில் நாடுபெற்ற நலங்களையும், அவர்கள் விட்டுச் சென்ற உயர்நோக்கங்களைப் போற்றி ஒழுகுவதால் வரும் பயனையும், நோக்கத்தை எய்தற்காக எடுக்கவேண்டிய உறுதிமொழிபற்றியும் விளக்கமாக எடுத்து மொழிந்தார்கள். வாடா மலராக விளங்கும் நேருவைப் பற்றி அவர்கள் பாடிய கவிதைகளிற் சில வருமாறு:

"பாரதத்தாய் பெற்றமகன் ! பழநாட்டின் மூத்தமகன் !
பார்அதத்தால் அழியாமல் பாரமைதி போற்றுமகன் !
பார்ரதத்தின் சாரதியாய்ப் பஞ்சசீலம் நந்தமகன் !
பாரதத்தில் பாவலர்கள் பாடுமகன், நேருமகன் !

மண்மேல் வளரும் பயிர்யாவும்
மாண்புறு நேருவின் உடற்சாம்பல்
தன்மேல் நின்று வளர்ந்தோங்கும்,
தலைவன் அவன்பெயர் தனையிசைக்கும்.
தொண்டும் தூய மனப்பாங்கும்
துகளில் செயலும் அறநெறியும்
கொண்டே நாடு வுருவாகும்,
"கொள்கை" மண்வளம் இனிக்கூறும்

பள்ளித் தமிழாசிரியர் புலவர் திரு. மீ. இராமதாசன் அவர்களின் நன்றியுரைக்குப்பின் நாட்டு வாழ்த்துடன் விழா நிறைவேறியது.

### தேசிய மாணவர் படை :

தமிழ்க் கல்லூரிகளின் வரலாற்றிலேயே, முதன் முறையாக நங்காந்தைப் புலவர் கல்லூரியில், இவ்வாண்டு முதல் தேசிய மாணவர் படைத்துறை தொடங்கப் பெற்றுள்ளதென்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். புலவர் கல்லூரி மாணவர்களில் நூறு பேர் படை மறவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளனர். அவர்களுள், ஐம்பது பேர், 24—12—65 முதல் 2—1—66 வரையில் தஞ்சை அரசர் சரபோசி அரசினர் கல்லூரி எல்லையில், தஞ்சைப் பகுதித் தேசிய மாணவர் படைத் தலைவர் Major அ. கிருட்டினமூர்த்தி அவர்கள் ஆணையின்கீழ் அமைந்த பயிற்சிப் பாசறையில் சிறப்புப் பயிற்சிபெற்றனர். பல கல்லூரிகளையும் சார்ந்த ஏறத்தாழ ஆயிரம் படை மறவர் பாசறையில் பயிற்சிபெற்றனர். அவர்களுள், நங்கல்லூரியைச் சார்ந்த திரு. மு. மலைக்கனி என்னும் இரண்டாம் வகுப்பு மாணவர். துப்பாக்கிச் சுடும் பயிற்சியில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்று முதல்வராக விளங்கிய மிகச் சிலருள் ஒருவர் என்பதையறிய மகிழ்கின்றோம். குறுகிய காலத்தில் நிறைவுதரும் முறையில் நம் படை மறவர்களுக்குப் பயிற்சியளித்த கல்லூரிப் படைப் பயிற்சியாளர் திரு. HV. இரஃக்மது பாஃக்சா அவர்களையும் பாராட்டுகின்றோம்.

# பாடல் பெற்ற பரிசு

கு. சிவமணி

## அறிமுகம்.

[சேரமான் கணைக்கால் இரும்பொறை பேராண்மை மிக்கவன். மறவரை வென்றவன் மதம் மிக்க யானை ஒன்றினைத் தனியனாக நின்று அடக்கிய பெருவலி படைத்தவன்.

அவன் காலத்தில் சோழ நாட்டை ஆண்டவன் செங்கணான் என்னும் பேரரசன், சோழனுக்கும் சேரனுக்கும் பகை மூண்டது. முதலில் கழுமலத்தில் போர் நடைபெற்றது. சோழனின் பெரு வீரத்தின்முன் சேரனின் வீரம் நிற்க இயலவில்லை. விளைவு? சோழன் வென்றான்; தோற்ற சேரனைக் குடவாயிற் கோட்டத்துச் சிறையில் காவல் வைத்தான்.

சேரனின் பேரன்பிற்குரியார் பொய்கையார் என்னும் புலவர்; கழுமலப்போரில் சோழன் பெற்றவெற்றியைச் சிறப்பித்துக் "களவழி நாற்பது" பாடினார்; அவர் விரும்பியவாறே, பாடலைக் கேட்டுப் பெருமகிழ்வு கொண்ட செங்கணான்; சேரனைச் சிறையி னின்று விடுத்தான். புலவரும் மகிழ்ந்தார்.

பாடல் அதற்குரிய பரிசைப் பெற்றது.

மானத்தைப் பெரிதென மதித்த சேரன் மீண்டும் படைதிரட்டிச் சோழனோடு போர்க்கெழுந்தான். திருப்போர்ப் புறத்திலே இரு வருக்கும் போர் நடைபெற்றது. முடிவில், சோழன் சேரனைச் சிறை செய்தான். சேரன் மானத்திற்காகச் சிறையினிலே உயிர்நீத்துப் பெரும்புகழ் கொண்டான்.]

## காட்சி — 1.

இடம்: அரசவை.

உறுப்பினர்: சோழன் செங்கணான் அரசவைப் பெருமக்கள்.

நிலைமை: அரசவைப் பெருமக்கள் பலர் அமர்ந்திருக்கின்றனர். கட்டியங்காரன் நுழைகின்றான்.

கட்டியங்காரன்: பொன்னித் திருநாட்டு மன்னர்பெருமான்! தமிழ கத்தை வென்று தன்னடிக் கீழ்ப்படுத்திய சோழப் பேரரசர் செங்கணார் அரசவைக்கு எழுந்தருள்கின்றார்.
(சோழன் செங்கணான் பெருமிதமாக நடந்துவந்து அரியணை யில் இருக்கின்றான். அரசவைப் பெருமக்கள் அனைவரும் எழுந்து வணங்கிப் பின் உட்காருகின்றனர்.)

செங்கணான் : அருந்திறல் கொண்ட அமைச்சரே! ஐம்பெருங் குழுவினரும் எண்பேராயத்தினரும் எமது எண்ணத்தை அறிவரோ? (அமைச்சர் எழுகின்றார்.)

அமைச்சர் : காவிரிக் காவல! வணக்கம். தாங்கள் அவைக்கு வந்த பின்னர் அதனை அறிவிக்கலாம் என எண்ணினேன்.

செங் : நன்று அவ்வாறே செய்யும்.

அமை : பெருமக்களே! சேரமான் கணைக்காலிரும்பொறை ஒரு குறுநில மன்னன் மேல்கொண்ட வெற்றியினால் இறுமாந்து அரச நெறியிலிருந்து மாறுபடுகின்றான். நம்மரசர் தண்ணளி கொண்டு அனுப்பிய திருமுகத்துக்கும் அவன் இன்றுவரை மறுமொழி ஏதும் அனுப்பவில்லை. மேலும் சேரர் எல்லையில் உள்ள நம் சோழ வீரர்களுக்குத் தொலலைபல செய்துள்ளான். நிலைமறந்து செயல்புரியும் அவனை இவ்வாறு விட்டுவிட்டால, பின்னர் நமது வளநாட்டிற்கெதிராகப் போர் தொடுக்க முயலுவான். அவனது நாட்டின் நிகழ்ச்சிகள் இதனைக் குறிப்பாக உணர்த்துகின்றன. முள் மரத்தை இளைதாக கிள்ளவேண்டும். ஆகவே, சேரமான் மீது போர் தொடுப்பதாக நம் மன்னர் எண்ணுகின்றார். அந்த எண்ணத்தை உங்கள் ஆய்வுக்கு விடுகின்றேன். சிந்தித்துச் சிறந்ததொரு முடிவைத் தெரிவிக்க வேண்டுகின்றேன். (அமர்கின்றார்;)

(அவையினர் தங்களுக்குள் குசுகுசுவெனப் பேசிக்கொள்கின்றனர். சிறிது நேரம் கழிகின்றது)

ஒருவர் : (எழுந்து) மன்னர் மன்ன! வாழ்க நும் கொற்றம்!, எண்பேராயத்தினர் உமது முடிவை ஒருமனமாக ஒப்புகின்றனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (அமர்கின்றார்)

செங் : ஐம்பெருங் குழுவினரின் முடிவு யாதோ?

ஐம்பெருங் குழுவகையில் ஒருவர் : பேரரசே! சேரமானோடு போர் தொடுத்தல் எமக்குச் சிறந்ததாகப் படவில்லை ஏனென்றால் ஆற்றல்வாய்ந்த நமது வீரத்தின்முன் அவர் தோற்பது உறுதி.

செங் : சேரர் தோற்பது உறுதியே! இருக்கும் சூழலைச் சிந்தித்தால் போரைத் தவிர வேறு வழியில்லை. அவருக்கு முன்னரே திருந்துவதற்குரிய இரு வாய்ப்புக்களை மறைமுகமாக அளித்தோம். அதை அவர் உரியவாறு பயன்படுத்திக் கொள்ளவில்லை மாறாக நாம் எளியர் என எண்ணிவிட்டான். மதிப்பாரை யாம் மதிப்போம். இகழ்வாரை யாம் எள்ளிநகையாடுவோம். அவரை அவ்வாறே விடுதல் நமது பெருமைக்கு இழுக்கு...ஆகவே சிந்தனை செய்து உமது கருத்தைத் தெரிவிக்க விழைகின்றோம். (ஐம்பெருங் குழுவினர் மீண்டும் குசுகுசுவெனப் பேசுகின்றனர்)

ஒருவர் : வேந்தர் கொண்ட கருத்திற்கு ஐம்பெருங் குழுவினர் ஒரு மனத்தராய் உடன்பாடு தெரிவிக்கின்றனர்.

செங் : சேரன்மீது படை எடுப்பதிலே யாருக்கும் மனவேறுபாடு உண்டோ ?

(சிறிது அமைதி)

சேரமான் கணைக்காலிரும் பொறைமீது படையெடுப்பதென இவ்வவை முடிவு செய்கின்றது படைத் தலைவரே ! அணி வகுப்பு எவ்வாறுள்ளது ?

படைத்தலைவர் . பேரரசே ! நம் வீரரின் ஆற்றலை விளக்கிச் சொல்லவும் வேண்டுமோ ? போர் என்றால் மகிழ்ந்தாடும் மறவர் நிறைந்துள்ளனர் நமது படையில் ! பகைவரின் குருதிக் குளத்தில் குளம்புகள் பதிந்த குதிரைகளைச் செலுத்தும் வீரர்கள் இச்செய்தி கேட்டுக் குதித்துக் கூத்தாடுவர். குன்றை நிகர்க்கும் யானைப் படையினர் போர்ப் பறைகேட்டு வீறு கொண்டு ஆர்த்தெழுவர். வெற்றியன்றி வேறறியாத படை நமது

செங் : நன்று, படைத் தலைவரே ! நமது போர் அணிவகுப்பினை நாளையே யாம காண்போம். அதற்குரிய ஏற்பாட்டினை விரைந்து செய்யும் .....

செங் : ...அமைச்சரே ! எட்டு நாட்களுக்குள் சேரர் உரிய மாற்றம் உரைக்காவிடில், கழுமலத்திலே படையுடன் சந்திக்கும்படி ஓலை அனுப்பும் பொறுத்திருப்போம். 'வேறு வழி இல்லை என்றால் சேரர்மீது போர் தொடுப்போம். எதற்கும் நாம் 'விழிப்புடன் இருப்போம்.

படைத் தலைவர் : சோழர் செங்கணூர் !

அனைவரும் : வாழ்க !

(காட்சி முடிவு)

---

## காட்சி — 2.

இடம் : சேரனது அரசவை.

உறுப்பினர் : சேரமான் கணைக்கால் இரும்பொறை அரசவையினர்.

நிலைமை : அனைவரும் அமர்ந்திருக்கின்றனர். அப்போது காவலன் ஒருவன் நுழைந்து வணங்குகின்றான்.

காவலன் : சேரர்பெருமானே ! வணக்கம். சோழநாட்டுத் தூதுவர் வாயிலில் தங்களது இசைவை எதிர்பார்த்துக் காத்துள்ளார்.

இரும்பொறை : வரச்சொல். [காவலன் நீங்குகின்றான்] ... ... ... தூதுவன் எதற்காக வந்திருப்பான் ?

அமைச்சர் : தூங்கிய புலியை நாம் இடறி எழுப்பிவிட்டோம். ஒரு கால் அது நம்மீது பாயத் துணிந்திருக்கலாம்.

இரும் : [எள்ளலாக] புலிபாய்ந்தால் என்ன? நம்வில்லால் நம்மைக் காத்துக்கொள்வோம்.

அமை : புலி வலியது, கொடியது. அதன் பாய்ச்சல் தப்பாதது. உரிய வலுவைப்பெற்றபின் அப்போது போர் தொடங்கல் நல்லது.
[அப்போது தூதுவன் நுழைந்து வணங்குகின்றான்]

தூதுவன் : மலைநாட்டு மன்னா! பொன்னி வளநாட்டுக் காவலனின் வணக்கம். இந்த ஓலையைத் தங்கள்பால் சேர்ப்பிக்கப் பேரரசர் செங்கணாரின் ஆணையைத் தாங்கி வந்துள்ளேன். இதோ! ......
[ஓலைச்சுருளை நீட்டுகின்றான்]

இரும் : அமைச்சரே ஓலையை வாங்கி உரத்துப்படியும் அவையினர் அனைவரும் செய்தியை அறியட்டும்.

அமை : [அதை வாங்கிப் படிக்கின்றார்]

"சேரமான் கணைக்கால் இரும்பொறைக்குச் சோழப்பேரரசர் செங்கணார் விடுத்த திருமுகம் நிலைமறந்த் செயல்சூழும் உமக்குத் திருந்துவதற்குரிய வாய்ப்புக்களை இருமுறை அளித்தோம். ஏற்கவில்லை. புலிக்கொடியின் ஆற்றலை நீர் அறிவீர். யாம் சீற்றங்கொள்ளக்கூடிய செயல்களை மேலும் மேலும் செய்து வருகின்றீர். நாடாசைகொண்டு பேரரசுக்குக் கேடு சூழுவதால், இன்றிலிருந்து எட்டாம்நாள் கழுமலத்தில் எமது படையுடன் காத்திருப்போம். திறைப்பொருளா ? அல்லது தினவெடுத்த தோள்களுக்குப் பலியா ? என்பதை நீரே தெரிவுசெய்யும்."

சோழமண்டலப் பேரரசர்,
செங்கணான்.

இரும் : போருக்குச் சேரன் என்றும் பின்வாங்கியதில்லை என்பதை இப்பாரே நன்கறியும் கழுமலம் என்ன ! வேண்டுமானால் சோழன் பெருநகருக்கே யாம் படைநடத்தி வரும் துணிவுடையோம். செருக்குற்றசோழன் இவ்வில்லவரை விளையாடும் சிறுபிள்ளையாக எண்ணிவிட்டான் போலும் !

இரும் : தூதுவ! சோழன் விடுத்த திருமுகத்திற்குச் சேரன் தரும் மாற்றம் இது. கழுமலத்தில் சோழன் குறித்த நாளுக்கு முன்னரே வில்லவர் படையுடன் காத்திருப்பார் என்று சொல் நீ போகலாம்.

தூது : நல்லது வேந்தே ! வருகின்றேன். [வணங்கி நீங்கு கின்ருன்]

அமை : அரசே ! எளியேனின் சொல்லையும் ஏற்றருள வேண்டு கின்றேன். உரிய நேரம்வரும்வரை நாம் சற்று ஒதுங்கியிருத் தலே நல்லது.

இரும் : அமைச்சரே ! இனியாம் பொறுப்பதற்கில்லை சோழருக்கு அடங்கிய அரசராக வாழ்வதைவிடப் போரில் ஆவியை இழந் தால் மேல்; இன்றிருந்து எட்டாம் நாள் சோழர் படைகொண்டு வருவார் ......

அமை : அதற்குமுன் நாம் நம் தூதுவனை அனுப்பினல் இப்போர் உறுதியாக நடைபெருது. சுற்றுப்புறச் சிற்றரசர்களோடு பொருதமையால் நமது படையின் வலிமை சற்றுக் குறைந் துள்ளது.

இரும் : (பெருமிதமாக எழுந்து) எது எப்படி இருப்பினும் கழுமலப் போர் நடந்தே தீரும் ..

பெருமக்களே ! வாழ்வா ? சாவா ? என்னும் மாபெருங் கேள்வி நமமை நோக்கிக் காத்துள்ளது. மறவர் குடிப் பிறந்தீர் ! மனத் துணிவுடன் செயலாற்றுவீர். நாட்டுக்காக நடுகல்லா கவும் தயங்காதீர், வீறுகொண்டெழுவீர் ! பொன்னுட்டைக் காக்க விரைவீர் ! இந்நாட்டைச் சேரரைத் தவிர வேருருவர் கனவிலும் கருதவும் முடியாது என்பதை சோழருககு உணர்த்துவீர்.

'சேரர் குடிகாக்கும் செம்மல்களே ! வீரர் குடித் திலகங்களே ! மாற்ருர் நமது மண்ணைக் கவருமுன்னர் அவரைத் தோற் ருேடச் செய்வீர் ! கையில் வாளும் வில்லும் கருத்திலே தெளி வும உறுதியும் கொள்வீர் ! கார்காலத்துப் பேரிடி போன்று வெற்றிப் பெருமுழக்கம் செய்வீர். ஆர்வாரித்து எழுவீர் ! வெற்றி நமதே !

ஒருவர் : சேரமான் கணைக்கால் இரும்பொறை !
அனைவரும் : வாழ்க !

(காட்சி முடிவு)

---

## காட்சி — 3

இடம் : போர்க்களம்

உறுப்பினர் : சோழன் செங்கணுன், சேரன் இரும்பொறை போர் வீரர்கள்.

நிலைமை : போர் நடைபெறுகின்றது. அச்சந்தரும்படியான கூச்ச லும், அழுகையும, ஆரவாரமும், ஊக்க ஒலிகளும் கேட்கின்றன

இரும்பொறை ஒருபுறத்திலிருந்து படைகளை ஊக்குவிக்கின்றான்.

இரும்பொறை: சேர மறவர்களே! வீறுகொள்வீர்! மாற்றாரைத் தோற்றோடச் செய்வீர்! சேர நன்னாடு வீரர்களின் பிறப்பிடம் என்பதை அறிவுறுத்துவீர்.

(பற்பல போர் வீரர்கள் போர் செய்கின்றனர். அப்போது உடலெல்லாம் குருதி ஒழுக மூச்சு வாங்கியவாறு சேரனின் படைத் தலைவர் தள்ளாடி வருகின்றார்.)
(வியப்பும் திகைப்பும மேலிட) யார்? படைத் தலைவரா? என்ன? எம்மால் எமது கண்களையே நமபமுடியவில்லையே! வில்லும் வாளும் உடலைத் துளைத்துள்ளனவே! (படைத் தலைவர் நிற்கமுடியாமல் கீழே விழுகின்றார் அவரது தலையை எடுத்துத் தனது மடிமீது கிடத்திக் கொள்கின்றான்) (கலங்கிய கண்களுடன்) பாய்ந்துவரும வேழம் போன்றீர்! இனி ஒய்ந்து விடும் நமது படைகள் நீர் எம்மை விட்டுப் பிரிந்த பின்னர் வெற்றிப பெண்ணாள் சோழன்பால் சாய்ந்துவிடுவாள். இனி உரிமை மன்னன் என்ற பெருமையோடு யாம் மாய்வோம்.......

படைத் தலைவர்: (திணறலுடன்) வேந்தே மனவருத்தம் ஒழிக... சேர நாட்டுக்கு நான் செய்யவேண்டிய... கடமை... இன்றோடு ... முடிந்துவிடுகின்றதே... என்ற... துயரோடு ... உங்களிடமிருந்து... விடைபெறு... கின்... றேன்.

(படைத் தலைவரின் தலை சாய்கின்றது. உயிர் பிரிகின்றது. மன்னன் கண்ணீர் வடிக்கின்றான். அப்போது விழுப்புண் பட்ட சேர வீரன் ஒருவன் பதைப்புடன் நுழைகின்றான்)

வீரன்: அரசே! அரசே! அரசே!..

இரும்: (பெருமூச்சுடன்) செய்தியைச் சொல்...

வீரன்: நமது அணிகள் துளைக்கப்பட்டுவிட்டன; அணித்தலைவர்களில் ஐவர் ஆவி இழந்தனர். சோழரது வேழப்படைகள் மேலும் குவிகின்றன. சோழ மன்னரே படைத் தலைமை ஏற்று முன்னேறி வருகின்றார். நம் வீரர்களில் பெரும்பாலோர் இறந்துவிட்டனர். (மார்புமீது இவ்வளவு நேரமும் வைத்திருந்த கையை எடுக்கின்றான். குருதி வழிகின்றது. அவனது மொழி தடைப்படுகின்றது.) அரசே!... இதை... அறிவிக்கவே தங்களிடம் ஓடிவந்தேன்... தாங்கள்... தாங்கள் ...(கீழே வீழ்ந்து இறக்கின்றான்.)

இரும்: (கையிரண்டையும் குவித்து வணங்கியபடி) செஞ்சோற்றுக் கடன் கழித்த சேரப் பெருவீரர்களே! உம் மரசரின் நன்றி... நன்றி...

(அப்போது சோழன் செங்கணான் சில வீரர்களுடன் நுழைகின்றான். சோழனைக் கண்டதும் அடங்காச் சினத்தால் சேரன் இடையிலிருந்த வாளை உருவுகின்றான். சோழ வீரர் பலர் அவனைச் சூழ்ந்துகொள்ளுகின்றனர்.)

செங்கணான் : வீரர்களே! விலகிச் செல்வீர்! எமைக் கண்டு வாளை உருவினார் சேரர். யாமும் எமது வீரவாளைக் கூர்மையாக்கிக் கொண்டுள்ளோம். வாளோடு வாள் மோதட்டும்; வலியார் யார் என்பதை அதன் விளைவே விளக்கட்டும்.

(சேரனைத் தனியேவிட்டுச் சோழ வீரர் ஒதுங்குகின்றனர். சோழனும் சேரனும் அச்சம் தரும்படியாகப் போர் செய்கின்றனர். முடிவில் சேரனின் கையிலிருந்த வாள் நழுவுகின்றது. வெறுங்கையனான சேரனின் கை கால்களில் தளையிடுகின்றனர். செங்கணான் வெற்றிச் சிரிப்புடன் நீங்குகின்றான் அனைவரும் செல்கின்றனர். அப்போது இரு சேர வீரர்கள் புண்ணிறைந்த உடம்புடன் நுழைகின்றனர்)

ஒருவன் : அண்ணே! நம்மன்னர் சிறைப்பட்டுவிட்டார்......நாம் வாழுகின்றோம்...

மற்றவன் : தம்பி!...கலங்காதே...நாம் பொய்கையாரைத் தேடிச் சென்று செய்தியை விளக்குவோம்..

ஒரு : அண்ணே!...பாண்டிய நாட்டுக்குச் சென்றாலும் அந்த அரசர் மூலமாக ஏதாவது பயன் விளையும்...அதைவிட்டு விட்டுப் பாடல்புனையும் புலவரிடம் செல்லலாம் எனச் சொல்கின்றாயே! புலவருக்கும் போருக்கும் என்ன தொடர்பு? பொய்கையார் நம்மரசர் இரும்பொறைக்கு வேண்டியவராக இருக்கலாம். அவரால் செங்கணானிடம் என்ன செய்ய இயலும்? நம்மரசரின் நண்பர் என்றாலே பகையரசர் வெறுப்போடு அவரைப் பார்க்கமாட்டாரா?

மற் : தம்பி நீ சொல்வதும் ஒரு வகையில் உண்மைதான்; இப்போது சேரர் சோழருக்கு உரியர். ஆனால் அந்தச் சோழ அரசர் புலவர் பெருமக்களுக்கு உரியார். அவர்பால் நம் புலவர் பெருமான் பொய்கையார் சென்றால் உறுதியாக நம்மரசருக்கும் நமக்கும் வாழ்வுகிட்டும்....

ஒரு : முயன்று பார்ப்போம்.

மற் : சோழ மன்னர் தமிழுக்காக எதையும் தருவார்...நாம் இப்போதே பொய்கையாரைத் தேடிச் செல்வோம்...

ஒரு : நம் புலவர் பெருமான் இச்செய்தியைக் கேட்டால் துடித்துப் போவார்.

மற் : மன்னரால் நமது நாடு வாழ்வு பெறுகின்றது; புலவரால் நம் மன்னர் வாழ்வு பெறுவர்...வா .வா... வா . (இருவரும் நீங்குகின்றனர்)

(காட்சி முடிவு)

---

## காட்சி — 4.

இடம் : சோழனது அரசவை.

உறுப்பினர் : அரசவைப் பெருமககள்.

நிலைமை : அனைவரும் செங்கணானின் வரவை ஆவலுடன் எதிர் பார்க்கின்றனர். கட்டியங்காரன் நுழைகின்றான்

கட்டியங்காரன் : கழுமலத்திலே சேராத சேரரை வென்ற பேரரசர் செங்கணார் அவைக்கு எழுந்தருளுகின்றார்.
(சோழன செங்கணான் பெருமிதத்துடன் புன்னகை தவழ நுழைகின்றான் வாழ்த்தொலி கிளம்புகின்றது.)

கட்டி : சோழர் செங்கணார் !

எல் : வாழ்க !

கட்டி : வில்லவனை வென்ற பொன்னிப்புனல் நாடர் !

எல் : வாழ்க, வாழ்க ! (அரசன் வணங்கி அமர அனைவரும் அமர்கின்றனர். கைகால்களில் தளையுடன் சேரமான் கணைக்கால் இருமபொறையைக் காவலர் இருவர் அழைத்து வருகின்றனர்.)

செங்கணான் : சேரமான் கணைக்கால் இரும்பொறையே ! பேரார வாரத்துடன் வரவேற்கவேண்டிய உமமைக் கைகால்களில் தளையுடன் வரவேற்பதற்கு யாம் வருந்துகின்றோம .. ... ... என் செய்வது ? ... . இமமுடிவை நீரே விரும்பி ஏற்றீர் ?

இரும்பொறை : [கடுமையாக] இருக்கலாம. உயர்வும் தாழ்வும் உலகியலில காணப்பெறும அன்றாட நிகழ்ச்சி ... ... ... ... எமமை அழைத்துவரவேண்டிய காரணம் ?

செங் : [எள்ளல் மிக] ஓகோ ! ... . ... அப்படியானால் சிறைக்கு இழுததுச் செல்லாமல், உம்மை அரசவைக்கு அழைத்து வருவானேன் எனக் கேட்கின்றீரா ? ... . (கடுமையாக) உமமை மறந்தீர் ! உமது எலலைகளை மறந்தீர் ! எமமையே பகைத்தீர்! ஒரு நாட்டின் மன்னனாகிய நீர் அரசியலில் நடைமுறையைக் கூடவா மறந்து போகவேண்டும் ? குற்றவாளிக்குத் தண்டனையை விதித்த பின்னரே அதை நிறைவேற்ற வேண்டும். ஆராய்ந்த பின்னரே அறங்கூறமுடியும் இப்போது தெரிகின்றதா, ஏனிங்கு வந்துள்ளீர் என்பது ?

இரு : செய்த குற்றம் ?

செங் : [சினத்துடன்] சித்தம் கலங்கிவிடவில்லையே உமக்கு ? செய்த குற்றம் என்ன என்று எம்மைக் கேட்பானேன். உமது மனத்தையே கேளும் ; அது மறுமொழிகூறும்.

இரு : உரிமை விழைவு கொண்டதுதான் குற்றமா ?

செங் : அது எப்படி குற்றமாகும் ? உரிமை விழைதல் குற்றமன்று; வரம்புமீறி மற்றவர் உடைமையைக்கொள்ள விழைந்ததுதான் குற்றம். மாபெருங்குற்றம்; தாக்கும் மறப்புலியின் வாலைப் பிடித்துச் சிறுபிள்ளைத்தனமாக முறுக்கியதுதான் குற்றம் ... ... ... ... அமைச்சரே ' நெறிமறந்த சேரருக்கு அவரது செயலை நினைப்பூட்டுக ... ...

அமைச்சர் : அறங்கூறவையத்தின் முறைகூறும் பெரும்புகழ் மன்னு! வாழ்க நுமகொற்றம் ! பெருமக்களே ! சேரவேந்தர் நாட்டாசை கொண்டு சோழப்பெருங்குடிமக்களுக்கு கேடுகள் பலசெய்துள்ளார் என்பதை இங்குள்ள அனைவரும் நன்கு உணர்வீர். நமது மேற்கெல்லையைக் கைக்கொள்ள நினைத்து அங்கு வாழும் நம் மக்களுக்குத் தொல்லைகள் செய்தார் சேரமன்னர் என்னும் குற்றத்தைச் சோழநாட்டு மக்கள் சார்பில் அவர்மீது நான் சுமத்துகின்றேன். எல்லைப்புற ஊர்கள் பல அவரால் கொள்ளையிடப்பட்டுள்ளன. பல நெருப்பின் வாய் விழுந்தன. திசைக்காவல் வீரர் பலர் அவரால் சிறையிடப்பட்டுள்ளனர். நம் மன்னர் பெருமான் விடுத்த அறிவிப்பையும் அவர் எள்ளி நகையாடினர் எனத் தெரிகின்றது. அவரது போர் வெறிச் செயலால், உயிரிழப்பும் பொருளிழப்பும் ஒருங்கே ஏற்பட்டுள்ளன. சிற்றரசன்மேல் பெற்ற வெற்றி ஒன்றினல் செருக்கு மிக்குத்தருக்கித் திரிந்த சேரமான் கணைக்கால் இரும்பொறை இன்று நம்மவையில் கட்டுண்டு கிடக்கின்றார். அவர், நேற்று சேரநாட்டு வேந்தர்; இன்று சோழ மன்னர்முன் கட்டுண்டு கிடக்கும் பெட்டிப் பாம்பு ! தானே நம் அரசர் பெருமானின் திருவுள்ளம் அதைத் தெரிந்தெடுக்கட்டும்...

ஒருவர் : (எழுந்து) அரசே ! அமைச்சரின் கருத்தை இந்த அவை ஒப்புகின்றது.

செங் : இரும்பொறையே ! இதற்கு நீர் கூறும் அமைதி ஏதும் உண்டா ?

(சிறிது அமைதி. சேரன் தலைகுனிந்து நிற்கின்றான்)

ஏன் வாயடைத்துப் போயிற்று ? செய்த குற்றங்களை நீரே ஒப்புக்கொள்கின்றீர் என்பதற்கு உமது அமைதியே சான்று... அமைதியாக இருந்த நாட்டிலே அவலத்தைப் புகுத்திவிட்டீர். விளைவு. வெற்றி எமக்கு ! இருப்பினும் எமக்குற்ற இழப்பும்

உண்டு......உயிர் அழிவை யாரும் மீட்டுத்தரல் இயலாது. ஆனால் பொருள் அழிவை எம்மால் ஈடு செய்யமுடியும். எமக் குற்ற பொருள் அழிவை உமது நாட்டு வருவாய் மூலம் நாம் பெறும் வரை எமது சிறைச்சாலையே உமக்குற்ற பெருமாளிகை ...உம்... அழைத்துச் செல்!

(இரும்பொறையைக் காவலர் அழைத்துச் செல்கின்றனர்.)

நாட்டுக்காக நல்லுயிர் நீத்த வீர மறவர்களுக்கு எமது நன்றி யும் வணக்கமும் (தலைகுனிந்து சிறிதுநேரம் அமைதியாக நிற்கின்றான். அனைவரும் எழுந்து அவ்வாறே செய்கின்றனர்) வெற்றிபெற உதவிய மற்றையோருக்கு வெற்றி விழாவின் போது விருதுகள் வழங்கப்பெறும்.

ஒருவர் : காவிரிக் காவலர் செங்கணார்!

எல்லோரும் : வாழ்க!

(அப்போது புலவர் பொய்கையாரை வாயிற்காவலன் அழைத்து வருகிறான்)

பொய்கையார்: சோழர்குலத் திலகமே! வாழ்க! பொன்னி யாற்று மணலினும் பன்னாள் இந்நிலவுலகில் மன்னுக. அவை யோரின் வாழ்த்தோடு இந்த எளியேனின் வாழ்த்தையும ஏற்றுக்கொள்.

செங் : அவ்வாறே ஆகட்டும்......தங்களுடைய பேச்சில் பாட்டு நலம் புலப்படுகின்றது. ஒரு வேளை புலவரோ?......தாங்கள் யார்?

பொய் : செங்கண்ணா! உய்த்துணரும் உனது ஆற்றல் என்னை வியக்கவைக்கின்றது. நீ கருதியது போன்றே நான் புலவன் தான்!

செங் : (அவர் அருகு சென்றவாறே) புலவர் பெருமானே! வருக! வருக! உமது வரவால் யாம் மகிழ்கின்றோம்...(இரு கையையும் பிடித்து இருக்கை ஒன்றில் அமர்வித்தபடி) இந்த இருக்கையில் அமர்க.

பொய் : நன்றி, மன்னவா! நன்றி.

செங் : (அரியணையில் அமர்ந்தபடி) பெருந்தகையீர்! தங்கள் பெயர்?

பொய் : பொய்கையார் எனப் புகலுவர்,

செங். (வியந்தபடி) பொய்கையாரா? தங்கள் புலமை நலத்தை அறிந்தோம்; இன்று தங்களையே அறியும் வாய்ப்புக் கிடைத் தமைக்கு யாம் அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

அமை : அரசே! நம்மால் சிறைப்படுத்தப்பட்ட சேரமான் இரும்பொறையின் உயிரனையார் இப்புலவர்!

செங் : அதனால் என்ன, அமைச்சரே! புலவர்தம் வருகைக்காக எமது உள்ளக் கோவிலின் கதவுகள் என்றும் திறந்திருக்கும்.

பொய் : வளவர் பெரும! வாழ்க அப்பண்பு! பெருந்தகைமை கொண்ட நினக்கும என்னுயிர் அனையான் சேரமானுக்கும் கழுமலத்திலே நடைபெற்ற போரைப்பற்றிக் கேள்வியுற்று அங்கு விரைந்தேன்; களத்தைக் கண்டேன். எனதுளத்திலே தோன்றியவற்றை நாற்பது பாடல்களாக்கினேன்; அவற்றைச் செவிமடுப்பாயாக : (இடையிலிருந்து ஏட்டுச்சுவடியைப் பிரித்து பாடுகின்றார்.)

"நாள்ஞாயி றுற்ற செருவிற்கு வீழ்ந்தவர்
வாள்மாய் குருதி களிறுழக்கத்—தாள்மாய்ந்து
முன்பக லெலலாங் குழமபாக்கிப் பின்பகல்
துப்புத் துகளில கெழுஉம் புனனுடன்
தப்பியா ரட்ட களத்து"

"ஒஒ உவம னுறழ்வின்றி யொத்ததே
காவிரி நாடன் கழுமலங் கொண்டநாள்
மாவுதைப்ப மாற்றார் குடையெலாங் கீழ்மேலாய்
ஆவுதைகாளாமபி போன்ற புனனுடன்
மேவாரை யட்ட களத்து"

"மைந்துகால் யாத்து மயங்கிய ஞாட்பினுள்
புய்ந்துகால் போகிப் புலான்முகந்த வெண்குடை
பஞ்சிபெய் தாலமே போன்ற புனனுடன்
வஞ்சிக்கோ வட்ட களத்து"

"வேல்நிறத் திங்க வயவரா லேறுண்டு
காலநிலங் கொள்ளாக் கலங்கிச் செவிசாய்த்து
மாநிலங் கூறு மறைகேட்ப போன்றவே
பாடா ரிடிமுரசிற் பாய்புன னீர்நாடன்
கூடாரை யட்ட களத்து"

செங்கண்மாலே! இக்களவழி நாற்பதை நீ உவந்தேற்றுக் கொள்ள வேண்டுகின்றேன். (ஏட்டுச் சுவடியை மன்னனிடம் நீட்டுகின்றார்)

செங் . (அதனைப் பெற்றுக்கொண்டே) யாம் மகிழ எம்மீது களவழி நாற்பதைப் பாடிய பெருந்தகையே! நீவிர் விரும்பும் பரிசை யாம் தர விழைகின்றோம்.

பொய் : நன்று காவல! நான் விரும்பும் பரிசு......பரிசு......

செங் : தயங்காமல் கேட்கலாம்.

பொய் : பாடலுக்குப் பரிசாகச் சேரமான் கணைக்காலிரும் பொறையைச் சிறைவீடு செய்யவேண்டுகின்றேன்

செங் : படைத்தலைவரே! சேரைச் சிறைவிடுசெய்து வேந்தர் என்னும விருதோடு அவைக்கு அழைத்து வருக. (படைத் தலைவர் இரு காவலருடன் அவையைவிட்டு நீங்கல் புலவரை நோக்கி)
சேரரை யாம் போரில்கொண்டோம். தாங்கள் பாவால் கொண்டீர்கள்.

பொய் : செங்கண் இளமாலே! உன் சிந்தை வாழ்க உரை செய லுக்கு நன்றி கொற்றவ நன்றி!

செங் : பெருந்தகையே! எனது கழுமலப்போர் வெற்றியைப்பற்றிக் களவழிக் கவிதை பாடிய தங்களுக்கல்லவா யான் நன்றி கூற வேண்டும்.

(அப்போது படைத் தலைவர் சேரனை அவைக்கு அழைத்து வருகின்றார்.)

சேரமான் கணைக்கால் இரும்பொறையே! புலவர் பொய்கையார் களவழி நாற்பதால் உம் கால் தளையை வெட்டிவிட்டார். நீர் இப்போது எம் விருந்தினர். முன்போன்று இனி நீர் உம் நாடு சென்று உரிமையுடன் வாழலாம்.

சேரன் : (புலவரைத் தழுவிக்கொண்டு) புலவர் பெருந்தகையே! தாங்கள் என்பாற்கொண்ட அன்பிற்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்!

பொய் : இரும்பொறை! கவலாதே! நீ...பாடல் பெற்ற பரிசு! ஆமாம்...பாடல் பெற்ற பரிசு!

காவலன் : சேரரைச் சிறைவிடுச் செய்த சோழர் செங்கணர்!

அனைவரும் : வாழ்க! வாழ்க!

காவலன் : சேரமான் கணைக்காலிரும்பொறை!

அனை : வாழ்க! வாழ்க!

காவ : களவழி பாடிய புலவர் பொய்கையார்!

அனை : வாழ்க! வாழ்க! (அவை கலைகிறது)

(காட்சி முடிவு)

## காட்சி — 5.

இடம் : சேரன் அரசவை,

உறுப்பினர் : சேரன் கணைக்காலிரும்பொறை, அரசவைப் பெரு மக்கள்.

நிலைமை : சேரன் சினத்தோடு அரசிருக்கைமேடையில் நடைபோடு கின்றான். அனைவரும் நின்றவாறே அவனது முகத்தை ஆவலோடு நோக்குகின்றனர்.

அமைச்சர் : வானவர் தோன்றலே ! அமைச்சனின் வணக்கம். வாழ்க நும்மாட்சி! தங்கள் ஆணைப்படியே அரசவைப் பெரு மக்கள் அனைவரும் வந்துள்ளனர். தங்கள் ஏவலுக்காகக் காத்துள்ளனர். வேந்தரென்னும் விழுப்பத்தோடு மீண்டு வந்த தங்கள்பால் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள் கின்றனர்.

சேரன் : (நடைபோடுவதை நிறுத்தி) வேந்தர்... விருது... நினைக் கவே நெஞ்சம் நாணுகின்றது. சோழனின் சிறைக்கோட்டத் திலே கிடந்த எமக்கு விடுதலை !...வேந்தர் என்னும் பெயர் !... சே !...வீரத்தால் விளைந்ததன்று எம் விடுதலை...புலவர் பெரு மான் பாடல் தந்த பரிசு யாம். சோழனின் அருளினால் வேழம் மிகுந்த மலைநாட்டு வேந்தராக யாம் மீண்டுவந்தோம்...எமது நாட்டுரிமையை மாற்றார் தர யாம் கொள்ளவா ?...முடியாது மறவர் குடிக்கு வசையெம்மால் நேர்வதா...கூடாது ஆகவே...

அமை; (இடைமறித்து) வேந்தே ! எதற்கும் சற்றுப் பொறுத் திருந்து பிறகு...

சேரன் : அமைச்சரே ! இனிப் பொறுப்பதில்லை. மானம் நீங்கி வாழ்வதைவிட மானத்திற்காகப் போர்க்களத்தே வீழ்வதே மேல்...படைத் தலைவரே ! மலைநாட்டு மறவர் குலம் திரளட்டும், இம்மாநிலத்தை மாற்றார் தர யாம் கொள்ளவில்லை. எம் முடைய மறத்தோள்களின் வலியினால் புலிக்கொடியானை வென்று மலைநாட்டின் மானத்தைக் காப்பாற்றினோம் என்று உலகம் கூறட்டும்...

அமை : அரசே ! புலிக்கொடியாரின் படைப் பெருக்கமும் வீரமும் பார் அறிந்தவை, வலிவற்ற நாம் போர்க்கோலம் பூணுதல் நமக்கு அழிவையே தரும். ஆகவே...

சேரன் : எம்முள்ளத்தை இனி எவரும் மாற்றமுடியாது. விடுதலை வாழ்வு அல்லது வீரத்துறக்கம். இதுவே எம் குறிக்கோள். படைத்தலைவரே ! சிதறிய படைகள் ஒன்றுசேரட்டும், மாற் றாரின் கொடியாடும் நெடுமதில்களைக் குத்திப்பெயர்த்துப் பொடி யாக்கும் மதயானைகள் போர்க்கோலம் கொள்ளட்டும். போர்க்

களத்தே பாய்ந்து பகைவர்களைத் தாக்கியழிக்கும் போர்ப் பரிகள் ஆரவாரிக்கட்டும். தேர் மறவர் திண்தோள்கள் பேரொலியால் பூரிக்கட்டும். கூற்றையும் வெல்லும் வில்லேருழவர்கள் மாற்றுரைத் தாக்க வெகுண்டெழட்டும். நம் படைகள் முழுமையும் அணிவகுக்கட்டும்' (சிறிது அமைதி) வெல்வோம் என்னும் முடிவோடு இப்போரினை யாம் கொள்ளவில்லை. இருப்பினும், நம்முரிமையை நிலைநிறுத்த இதைத் தவிர வேறு வழியில்லை...ஒரு பகல் எல்லையுள் நம் படைகள் சோழநாடு நோக்கி நடக்கட்டும். திருப்போர்ப்புறத்தில் உள்ள சோழப் படைகளோடு மோதிப் போர்புரியட்டும். திருப்போர்ப்புறப் போர் நமக்குரியது. மண்ணுலகமா விண்ணுலகமா என்பதை முடிவு செய்யட்டும். வாழ்க சேரநாடு...

அனை . வாழ்க வாழ்கவே.

(காட்சி முடிகிறது)

---

## காட்சி — 6.

இடம் : சிறைக்கூடம்.

உறுப்பினர் : காவலர் இருவர், சேரமான் கணைக்காலிரும்பொறை.

நிலைமை : சிறைக்கூடத்தினுள் சேரன் சோர்வாக உலவுகின்றான். காவலர் இருவரும் "வெட்டுக்காய்" ஆட்டம் ஆடுகின்றனர்.

முதல்வன் : தம்பி! இந்தப் புலியாட்டத்தில் என்னை இதுவரைக்கும் வென்றவரே கிடையாது.

இரண்டாமவன் : சரி அண்ணே! உன்னோட புலியை என்னோட ஆட்டாலே மடக்கிடுறேன்.

முதல : புலியோடே வலி தெரியாமே அதை மடக்கப் போய்தான் ஒருத்தர் உள்ளே மடங்கிக் கிடக்கிறாரு .....இதோ இந்த பாய்ச்சலுக்கு எதிரே உன்னோட ஆட்டை நிறுத்து......பார்க்கலாம்...(காயை தகர்த்துகின்றான்)

இரும்பொறை : காவல! ஏய்! காவல!

இரண் : அண்ணே! நம்ம மன்னர் சேரனுக்கு நல்ல தண்டனை கொடுத்தாரு!

முதல் : இது பெரிய தண்டனை இல்லை.

இரண் : என்ன அப்படிச் சொல்லிட்டே!

முதல் : இது நம்ம அரசரோட பெரிய மனசைக் காட்டும். அரசரை எதிர்த்தா அதுக்குத் தண்டனை என்ன தெரியுமா?

இரண் : என்ன ?

இரும் : (இரைந்து) ஏய்! காவல! நான் அழைப்பது காதில் விழவில்லை ?......தண்ணீர் கொண்டுவா.

முத : சும்மா இருங்க, ஒரு சேதி பேசிக்கிட்டு இருக்கிறோம்...முடிச்சுட்டு வருவோம். தம்பி! என்ன பேச்சிட்டு இருந்தோம் ?

இர : அரசரை எதிர்த்தா......

முத : ஆமாமாம். .அரசரை ஒரு முறை எதிர்த்தால் உடனே தலையை வாங்குவாங்க.

இர : பின்னே இருமுறை எதிர்த்த இவரை மட்டும் ஏன் உள்ளே அடைச்சிருக்காங்க ?

முத : நம் அரசருக்குப் பெரிய மனமல்லவா ? கழுமலப்போரில் இவரு தோற்றுரு நம்ம காவலில் இருந்தாரு. புலவர் பொய்கையாரு பாடி இவரைப் பரிசாகப்பெற்றுரு...திருப்போர்ப்புறப் போரிலே தோற்றுரு. வாளால் தற்கொலை செய்துகொள்ளப் பார்த்தாரு. நம்ம ஆளுங்க இவரைத் தடுத்து சிறைப்பிடிச்சுட்டாங்க... எப்படி இவர் வீரம் ..(காலியான தண்ணீர்க் குவளையை சேரன் சிறைக்கம்பி வழியே அவர்கள்மீது விட்டெறிகின்றான். அது அவர்களுக்கு அருகில் விழுந்து உடைகின்றது. இருவரும் பதைத்து எழுகின்றனர்.)

இரும் : (சினத்துடன்) தண்ணீர் தண்ணீர் என்று கதறுகின்றேன். அங்குக் கதையா பேசுகின்றீர் ? மடையர்களே! உங்களுக்கு மனமே இல்லையா ?

முத : குவளையைத் தூக்கி எங்கமேலே எறிந்திங்களே! அது எங்க மேலே பட்டுதா ?...சுதா கீழே விழுந்து உடைஞ்சு போச்சு! அதுபோலேதான் எங்க நாட்டு மேலே நீங்க மோதுனதும்... இப்ப என்னுச்சு ? நீங்களும் எங்க விருந்தாளியாயிட்டீங்க.

இரும் : போதும் நிறுத்தடா !

இர : அண்ணே, பாவமாக இருக்கு.

முத : இவங்களுக்காக மனமிரங்கி ஏதாவது செய்தால், அது பாம்புக்குப் பால் ஊற்றுறது போல. நம்மகிட்டே உயிர்த்தண்ணி வாங்கிக்கிட்டுப்போயி அப்புறமா நமக்கே உலைவச்சிடுவாங்க. ஒழுங்கா நடந்துக்கச் சொல்லி நம்ம அரசர் இவரை விடுதலை செய்தாரு...சும்மா இருக்காமே நம்மமேலே திடீர்னு திருப்போர்ப்புறத்திலே போர் தொடுத்தாரு . பாவம்...

இரும் : (பெருமூச்சுடன்) நா உலர்கின்றது. தண்ணீர் ! (கத்துகின்றார்) தண்ணீர் !! தண்ணீர்! ! (கண்ணீர் பெருகுகிறது)...

ஐயகோ! கண்ணீரே வறண்ட எனது நாவிற்குத் தண்ணீராக அமையவேண்டுமா ?

இர : தவித்த வாய்க்குத் தண்ணீர் தரவேணுமா ? அவர் ஆயிரங் கொடுமையை நமக்குச் செய்திருந்தாலும் என்னாலே இனியும் தண்ணீர் தராமே இருக்கமுடியாது.

முத : எனக்கும் மனசு இருக்கு, வா தம்பி!
(இருவரும் நீங்குகின்றனர். இரும்பொறை இங்குமங்குமாகச் சிந்தனையுடன் உலவுகின்றான். அவனது மனச்சான்று பேசுகின்றது.)

உனது குறிப்பறிந்து குற்றேவல் செய்ய ஆயிரமாயிரம் ஆட்கள் இருந்தும் தண்ணீர் தண்ணீர் என்று கதறும் நிலையும் வந்ததே! கொடிது! மிகவும் கொடிது! மானம் இழந்து உயிர் வாழ்தல் மிகமிகக் கொடிது
(காவலர், தண்ணீர்க் குவளையுடன் நுழைந்து அவனிடம் நீட்டுகின்றனர். அவன் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை, சிறிது நேரம் அதையே பார்க்கின்றான். முகத்தைத் திருப்பி வேறு பக்கம் பார்க்கின்றான்.)

முதல : தண்ணீர் தண்ணீர் என்று உயிரை வாங்கினிங்க...மானத்திலே என்னத்தைப் பார்க்கிறீங்க?......தப்பிச்சுப் போக முடியாது...சிறைக்கூடத்தை வலுவாகக் கெட்டிப்போட்டிருக்காங்க... இதோ தண்ணீர்! (குவளையைக் கீழே வைக்கின்றான்.) வேணும்னா குடியுங்க; இல்லேன்னா ஊற்றுங்க. (இருவரும் ஒருபுறமாக இருக்கின்றனர். தண்ணீர்க் குவளையைக் கையிலெடுத்து அதையே சிறிது நேரம் பார்க்கின்றான் இரும்பொறை;)

இரும் : மன்னர் குடியிலே, குழந்தை இறப்பினும்; தசைப்பிண்டமாகப் பிறப்பினும், ஆள் அன்று என நினையாராய், அவற்றை வாளால் வெட்டிப் புதைக்கத் தப்பமாட்டார். சங்கிலியால் பிணைக்கப்பட்ட நாயைத் துன்புறுத்துவதுபோல என்னைத் துன்புறுத்தினர் பகைவர். அவரது இரக்கத்தால் பெற்ற தண்ணீரை மனவலி இல்லாமல் வயிற்றுத் தீயைத் தணித்துக் கொள்வற்காக இரந்து உண்ணும் என்னைப் போன்றவரை மன்னர்கள் இவ்வுலகில் பெறுவாரோ ?
(தண்ணீரைக் கீழே ஊற்றுகின்றான்... அருகு கிடந்த ஓலை நறுக்கில் எழுத்தாணி கொண்டு எழுதுகின்றான். அவன் கால்கள் தள்ளாடுகின்றன. கீழே சாய்கின்றான். காவலர் இருவரும் பதைக்க ஓடுகின்றனர்.)

இர : தண்ணீர் தண்ணீர் எனக் கதறுனாரு! தண்ணீரைக் கீழே ஊற்றிவிட்டு ஆளே சாய்ந்திட்டாரே! ஐயையோ இப்போ என்ன செய்யுறது ?

முத : அரசரிடம் ஓடிச் செய்தியைத் தெரிவிப்போம்.
(அப்போது புலவர் பொய்கையாரும், சோழன் செங்கணனும் நுழைகின்றனர். காவலர் வணங்குகின்றனர்.)

பொய்கையார் : (ஆர்வமுடன்) இரும்பொறை! இரும்பொறை!... பாடல் பெற்ற பரிசாகிய நீ மீண்டும் வாட்டுகின்ற சிறைக் கோட்டத்தை எனக்குத் தெரியாமல் தேர்ந்தெடுத்தனையே! செங்கணார் உயரிய உள்ளம்படைத்தவர். திருப்போர்ப்புறப் போரில் நீ சிறைப்பட்ட செய்தி கேட்டு உன்னை மீண்டும் மீட்டுப் போகவே ஓடோடி வந்தேன்... எழுந்திரு இரும் பொறை!...ஐயகோ! இஃது என்ன? அடியற்ற நெடுமரம் போல் நிலத்தில் சாய்ந்துகிடக்கின்றனையே! எழுந்திரு. துன்பத்தால் உள்ளம் சோர்ந்துவிடலாமா?

செங் : ஏய் காவல! சேர மன்னருக்கு என்ன நேர்ந்தது?

முத : (குழறியபடி) அரசே!... தண்ணீர் என்றார்...கொண்டுவந்து கொடுத்தோம். அதைக் குடிக்காமல் கீழே ஊற்றிவிட்டுத் தரையிலே விழுந்துவிட்டார்.

செங் : (சினமுடன்) அறிவிலியே! என்ன செய்தாய்? உடன் மருத்துவரை அழைத்து வா...
(கீழே கிடந்த ஓலை நறுக்கை எடுத்துப் படிக்கின்றார் பொய்கையார்)

பொய்கை : "குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள் அன்று என்று வாளின் தப்பார்
தொடர்ப் படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத்தீத் தணியத்
தாம் இரந்தும் உண்ணும் அளவை
ஈன்ம ரோஇவ் வுலகத் தானே!"

(படித்ததும் அவர் கையிலிருந்து ஓலைநறுக்குக் கீழே விழுகின்றது. அவரது கண்களில் நீர் வழிகின்றது. செங்கணான் கண்கலங்குகின்றான். அப்போது மருத்துவர் நுழைகின்றார். கையைப் பிடித்துப் பார்க்கின்றார். போர்வையால் அவனது முகத்தை மூடுகின்றார். புலவர் கதறுகின்றார்)

பொய் : இரும்பொறையே! என்னுயிரனையாய்! சேரர் குலத்தின் திருவிளக்கே! நீ ஒளி குறைந்தனையோ? மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அனையாய்! நீ மானம்பட உயிர்நீத்தனையோ? ஐயகோ!

வருவார்க்கெல்லாம் வாரி வாரி வழங்கும் உனது கொடைக் கைகள் இன்றென்னைத் தழுவாவோ?...செஞ்சொற்பாடலைக் கேட்கும் உனது செவிகள் இன்றெனது அரற்றலைக் கேட்

காவோ ?...எளியேனது வருகையை எதிர்பார்த்து ஏங்கும் உன் திருவிழிகள் இன்றென்னை ஒருமுறை திறந்து பார்க்காவோ ?... முத்துப்பல் தெரியாது முறுவலிக்கும் உனது இரு இதழ்கள் நான் காண இளநகை பூக்காவோ ?...பூத்துக்குலுங்கும் முத்தமிழின் புகழை என்றும் போற்றும் உனது திருவாய் நின்று புலம்பும் புலவனை என்னை வா என அழைக்காதோ ?... முழுநிலவு போல ஒளிதெறிக்கும் மணிபதிந்த பொற்கட்டிலில் புரளவேண்டிய உனது திருமேனி இன்று புழுதியில் உருள்வதோ ?...குற்றேவலுக்காகக் காத்திருக்க உடன் தண்ணீர் கொடுக்காத கற்பாறை மனத்தினரால் மனமிடிந்து நிற்கவும் வலுவின்றி நீள் நிலத்தில் சாய்ந்தனையோ ? இரும் பொறையே !...பாடல் பெற்ற பரிசே ! உன்னைப் பிரிந்து எவ்வாறு உயிர்வாழ்வேன் ?

செங் : புலவர் பெருந்தகையே ! அமைதிபெறுக. உங்களது அரற்றல் எமது உள்ளத்தைச் சுடுகின்றது. தண்ணீர் பெருத் தடுமாற்றத்தால் சேரமான் கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கணானின் சிறைக்கூடத்தில் மானத்திற்காக உயிர்நீத்தார். வையம் உள்ளளவும் அவரது வான்புகழ் நிலை பெற்றுவாழும். இரும்பொறையே ! புகழ்வாழ்வில் வாழ்க !

அப்போது பின்னணியில்

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்" என்னும் பாடல் கேட்கின்றது.

(காட்சி முடிவு)

---

## வாழ்த்துகின்றோம்,

பல்கலைச் செல்வரும், பன்மொழிப் புலவருமாய பேராசிரியர், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பொறுப்பேற்க விருப்பதறிந்து பெரிதும் மகிழ்கின்றோம். தமிழ்ப் பேராசிரியர் ஒருவர், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையில் நிறுவப்பெறும் பல்கலைக் கழகத்திற்குத் துணை வேந்தராவது பல்லாற்றாலும் பொருத்தமுடையதே. பல்கலைக் கழகத்தின் பல்துறைகளிலும், இனிப் பைந்தமிழ்க்குரிய சிறப்புக் கிடைக்குமென நம்புகின்றோம். துணைவேந்தராகும் பேராசிரியர் அவர்கள், வண்டமிழ்க்கு வளஞ்சேர்க்கும் தொண்டுகள் பலவியற்றிப் புகழ்மண்டிப் பொலிந்து வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

—பொழிற்றொண்டர்,

# மலர்.

புலவர். ந. செகதீசன்

1. மலரெனும் என்னைப் பற்றி
மக்களில் அறியா தோர்யார் ?
உலகினில் என்னைப் போற்றி
உவக்காத பேர்கள் உண்டோ ?
நலஞ்செயும் கடவு ளுக்கு
நானன்றோ பூசைக் காவேன் !
குலப்பெண்டிர் கூந்தல் ஏறிக்
குதிக்கின்றேன் ! மகிழு கின்றேன் !

2. என்னுடல் வண்ணங் கண்டே
எத்துணை மகிழ்ச்சி கொள்வர் !
மென்மையின் வடிவ மான
மெல்லிதழ் தடவிப் பார்த்தே
இன்பத்தில் வீழ்ந்தார் பல்லோர் !
இன்னுமென் பெருமை பற்றி
இன்றெலாம் சொன்ன போதும்
முடியாமல் இருக்கும் கண்டீர் !

3. சுரும்பிசை கேட்டு நெஞ்சம்
சொக்கியே ஆடு கின்றேன் !
அரும்பென அழைப்பர் என்னை
அலராத பருவந் தன்னில் !
உருவத்தில் வளர்ந்து மெல்ல
ஒளியிதழ் திறக்கும் போது
பொருத்தமாய்ப் போதென் றென்னைப்
புகலுவர் மக்கள் எல்லாம் !

4. இதழ்எலாம் திறந்து நன்றாய்
எழில்காட்டி நிற்குங் காலை

இதமுடன் மலரென் றென்னை
எல்லோரும் அழைப்பா ரிங்கே!
உதவுவேன் மணமும் தேனும்!
உருக்குலைந் திந்த மண்ணைச்
சதமெனத் தழுவி வீழ்ந்தால்
சாற்றுவர் வீயென் றென்னை!

5. அழகினிற் குறைந்து நெஞ்சை
அள்ளிடும் வண்ணங் குன்றி
வழவழப் பகன்று மென்மை
வாடியே நீங்கிப் போகப்
பழகிடும் மணமும் நீத்துப்
பாட்டிபோல் முதுமை எய்தி
அழல்நிகர் சாவின் வாயில்
அடையும்நாள் செம்மல் ஆவேன்!

6. சிறுசேயின் உள்ளங் கொண்ட
செம்மையே எனது வாழ்க்கை!
நறுமணந் தந்தேன் வண்டு
நல்கிடும் பாட்டைக் கேட்டு!
வெறுங்கையை ஏழை கட்கு
விரிப்பவர் போல வன்றி
வறுமைநான் உற்ற போதும்
வழங்கினேன் இன்பத் தேனை!

7. நிறத்தினால் அழகு பெற்றேன்
நேர்மைகொள் நெஞ்சம் போல
அறத்தினால் சிறப்புப் பெற்ற
ஆன்றோரைப் போலத் தேனின்
உறவினால் உயர்வு பெற்றேன்!
உதவியே மகிழ்ச்சி கொண்ட
திறத்தினால் வாழ்வில் வெற்றி
திகழநான் பெற்றேன் கண்டீர்?

# திருக்கடல்மல்லை.

புலவர். தி. நா. அறிவுஒளி.

'மாமல்லபுரம்' என்ற பெயரோடு திகழும் கலைமாநகரம் பண்டைக் காலத்தில் 'திருக்கடல் மல்லை' என்றும கடல் மல்லை' என்றும வழங்கியது. இலக்கியப்பாககளில் இவ்வூர் 'மல்லை' எனச் சுருங்கிய அளவிலும் ஆளப்பட்டுள்ளது.† கடல்மல்லை பற்றிய குறிப்பு பல கல்வெட்டுக்களிலும் காணப்படுகிறது.

1. வடார்க்காடு மாவட்டம், திருவண்ணுமலையிலுள்ள அண்ணுமலையார் கோவில் முதல் திருச்சுற்று மேற்குப் பக்கச் சுவரில் கூடலாளப் பிறந்தான் கோப்பெருஞ்சிங்கனும, அவன் மகன் ஆட்கொண்ட தேவனும் அக்கோவிலுக்குச் செய்த கொடையைப் பற்றி நூற்றிமுப்பத்தாறு அடிகளில் நேரிசையாசிரியப்பாவால் விளக்குகிறது. இவ்வாசிரியப்பாவில் 'மல்லை' குறிப்பு உளளது.

"..........................................
(35) மலலை காவல னிச் சங்க மல்லன்
பல்லவர் வேந்தன் பரதம் வல்லன்
கூடலவனி யாளப் பிறந்தான்
செய்தன விப்பணி யடங்கவு மிவன் சிறந்
தூழி காலம் வாழி இவன் மகன்
வாடா வீரகைக் காடவ குமாரன்
வான் புகழ் மல்லையு மயிலையுங் காஞ்சியுந்
தண்டக நாடுந் தண்புனற் பாலியும்
பெண்ணையும் கோவலும் மெவுகையு முடையவ
னெண்ணருஞ் சிறப்பில் யாவரு மதித்த
விருதரில் வீரன் விறல்வீ ராசனி
(46) கரிய நாதன் காதற் குமரன்
..............................." (No: 69.S.I I. Vol VIII)

2. வட ஆர்க்காடு மாவட்டம் வந்தவாசி வட்டம் வாயலூரில் ஏரிகக்ரைமேல் உள்ள கல்லில் செதுக்கப்பட்ட ஐந்து செய்யுட்களில் ஒன்றில் 'மல்லை' குறிப்பு காணப்படுகிறது. இவ்வாயலூர் தெள் ளாற்றிலிருந்து பனிரெண்டுக்கல் தொலைவில்

"..................எங்கோன்
மல்லை வேந்தன் மயிலை காவலன்
பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி" (ந க. 5)

"............தொல்லை நூல் வரம்பு
முழுது கண்டான் நந்தி மல்லை அம்கானல்
பழுது கண்டாய். (ந. க. 7) [முதல்வனுக்குப்

---

† நந்திக் கலம்பகத்தில் 'மல்லை' என்ற பெயரே பலவிடத்தும் பயின்றுள்ளது: —

[இப்பாடலடிக்குப் பாடபேதம்: "தொல்லை நூல்வரம்பு முழுது கண்டார் முனைத்தார் தந்தோன்றல் முரி குறும்பிற், பழுது கண்டாய் நந்தி மல்லையங் கானற் பனிக் குருகே"]

"ஏடுலாவு மாலை சேரி ராசன் மல்லை" நந்தி தோள்
கூடினலலர் வராது கொங்கு விம்மு கோதையே" (ந க. 13)

"..............கூடாமன்னர்
எயில் கொண்டான் மல்லையங்கோன் நந்திவேந்தன்"
(ந. க. 29)

"வனத்தகன்று அதிர்ந்தது நந்திமல்லை ஆர்ப்பதே"
(ந க; 38)

"ஆரூ விறலடு போர் வன்மை யாலமர் ஆடியப்பால்
பாரூர் களிற்றுயர் பல்லவர் கோனந்தி மல்லை யன்றிக்
கூருள் இவளிளங் கொங்கை" .... (ந க: 44)

'போர்வட்டச் சிலை உடைவாள் பற்றிய
பொருகடல மல்லைப் புரவலனே" (ந. க: 58)

"வெண் சங் குறங்கும் வியன் மாதர் முற்றத்து
[விடியவே வான்
வண்சங் கொலிப்ப மடவார்கள் விளையாடுமல்லை
வேந்தன் (76)

"கடற்கதிர் மொய்த்த கழிப்பெண்ணை நாண
மடற்கூறு தோறும் மலி மல்லை (77)

"பட்டவேந்தர் தம் பூணெடும் பாவைமார் நாண்நெடும்
[தெள்ளாற்றில்
வட்டவெஞ்சிலை நாணிடக் கழித்தவன் மல்லையின்
[மயிலன்னாள்
விட்டகூந்தலும் விழியும் நன்முறுவலும் நுதல்மிசை
[இடுகோலம்
இட்டபொட்டினே டிளமுலைப் போகமும் எழுதவும்
[ஆகாதே" (79)

"கொண்டல் உறும் பொழில் வண்டினா மாமணி
வண்டல் இடுங் கடல்மல்லை காவலனே! (88)
......................................"

"நந்தி மல்லை யங்கானற் கடற் கம்புளே!" (93)
'கலங்கள் இயங்கும் மல்லைக் கடல் மல்லை"
—'திருமங்கையாழ்வார்'

குறிஞ்சியும் நெய்தலும் மயங்கிக் கலந்த சிறப்புடையதிவ்வூர். இவ்வூரின் கலைச் செல்வங்கள் வியக்கத் தக்க புலமை மாண்பு கெழுமியவை. இவ்வூரின் 'கடற்கரைக் கோவில்' வியப்புள் வியப்பாக விளங்கும் அழகின் திரு! அது இன்றுள்ள இரங்கத்தக்க நிலை

தனிபெரிதும் வருந்துதற்குரியதாம். நாடோறும் கடற் காற்றாலும், உப்புநீர் வறட்சியாலும் கோவிலின் கற்பகுதி சீர்கெட்டு வருகிறது. இந்நிலை நீடித்தால் அரிய செல்வத்தை இழக்க நேரும். அந்தக் கற்பனையே கலையுணர்வு கெழுமிய உள்ளங்களை அதிர்ச்சியுறச் செய்யும். அக்கோவிலை எவ்வாறேனும் காக்கத் தொல் பொருளாய்வுத்துறை இன்னே ஆவன செய்யவேண்டுவது இன்றியமையாக் கடமையாக உள்ளது. கோப்பெருஞ் சிங்கன் என்ற பல்லவன் சோழனோடு தெள்ளாறு என்ற இடத்தில் போரிட்டு, அவனைச் சிறை செய்த வெற்றியைப் புகழ்வது இச்செய்யுள்.

"ஸ்வஸ்திஸ்ரீ. சகலபுவன சக்கரவர்த்தி ஸ்ரீ கோப்பெருஞ்சிங்கன் சோழனைத் தெள்ளாற்றில் வென்று சகல பரிச்சின்னமுங் கொண்டு சோழனைச் சிறையிட்டு வைத்து சோணாடு கொண்ட அழகிய சீயன்", என்ற உரைப்பகுதியோடு கல்வெட்டு துவங்குகிறது.

**5 ஆம் பாடல் :**

"ஒருநாளும் விடியாத நெடியகங்குலூழியென
நீண்டுவர உலகிற் புன்கண்
மருண்மாலை யிதுமுன்னே வந்ததெனாருல் மடந்தை
யிவளாற்றுவளோ மல்லை வேந்தே!
பொருமாலை முடியரசர் கன்னிமாதர் போற்றி செயும
புவனமுழு துடையார் தாமுந்
திருமாதும் புணர்புயத்து மிண்டன் சீய
திரிபுவனத்திராசாக்கள் தம்பிரானே."

இது கோச்சீயன் ஆணை. (Epigraphia Indica Vol; XXIII P.174-182)

இம்முதல் கோப்பெருஞ்சிங்கன் ஏறத்தாழ கி பி 1232இல் பட்டம் சூட்டிக்கொண்டவன் என்பர். இவனால் சிறைப்படுத்தப் பட்டவன் கி, பி. 1216இல் முடிசூடிய மூன்ரும் இராச ராசன் என்பர்.

கடல் மல்லையில் பல்லவர் காலந்தொட்டு விளங்கும கோவில் தலசயனப் பெருமாள் கோவிலாகும் திருமங்கையாழ்வார் பாடிய சிறப்புடையது. இவ்வூரில் பூதத்தாழ்வார் தோன்றினர்.

தொண்டைமண்டலம் இருபத்து நான்கு கோட்டங்களாகப் பண்டு பிரிந்திருந்தது. † ‡ பல சிவன் கோவில்களும், பல வைணவக் கோவில்களும் நிரம்பிய பகுதியாம் வைணவத் திருநிலைகளில் கடல் மல்லை சிறப்பானது. இங்குள்ள தலசயனப் பெருமாள் கோவில் பழமையானது. இங்குள்ள சில கல்வெட்டுக்களைக் குறித்த செய்திகளை அறிவோம்.

(1) 'இரட்டபாடி எனத் துவங்கும் கோப்பர கேசரிவர்மரான இரண்டாம் இராசேந்திர சோழதேவனின் கல்வெட்டு இக்கோவிலில் மிகவும் சீர்குலைந்த நிலையில் உள்ளது. ஸ்ரீ பரமேச்வர மகாவராக

விட்ணு கிருகத்தாழ்வாருக்குத் தேவதான இறையிலி நிலமாக முன்னூறு குழி நிலத்தை அளித்த செய்தியும், திருநந்தா விளக்கு ஒன்றுக்குத் தொண்ணூறு ஆடு அறக்கொடையாக அளித்த செய்தியும் இக்கல்வெட்டால் தெரிகிறது.

(2) தலசயனப் பெருமாள் கோவில் வடவண்டைச் சுற்றுப் பகுதியில் சுவரில் உள்ள பிறிதொரு கல்வெட்டு விசயநகர அரசரான வீரப்ராதாப ஸ்ரீரங்க தேவ மகராயர் I காலத்ததாகும். § அரசரின் உடன்பிறந்தவரான மகாமண்டலேசுவர வெங்கடபதி தேவ மகாராயர் பெயரால் அவருடைய நல்லறப்பணிக் கறிகுறியாக வேங்கடபதியாரின் செயலாளரான (காரியக்காரர்) தளவாய் திருமலைநாய்க்கருக்கு, செயங்கொண்ட சோழமண்டலத்து படைவீட்டு ராசியத்து ஆமூர்க் கோட்டத்து முகந்தூர் நாட்டில் திருக்கழுக்குன்றப் பத்துபேரம்பாக்கத்துச் சீமையில் குண்ணத்தூர் கிராமத்தைத் தலசயனப் பெருமாளுக்கு இறையிலியாகத் திருவிடையாட்டம், வழிபாட்டுக்காக விடப்பட்ட செய்தியை அறிவிக்கிறது கல்வெட்டு. அதுமட்டுமின்றி வழிபாட்டுச் செலவுக்கு முந்நூற்று முப்பத்திரண்டு பொன்னும் வழங்கப்பட்டது. *

---

† "காவிய மாகிய காமீகங் கண்டுங் கங்கா குலத்தோர்
ஓவிய சூத்திர ராக விருபத்து நான்கு யர்ந்த
மேவிய கோட்டத்திலுங் கரிகால வளவன் மிக்க
வாவிய மேன்மை கொடுத்தளித்தான் தொண்டை
மண்டலமே" (தொ: சதகம்: 97)

"நாடான கோட்ட மிருபத்து நான்கினுணற் றண்டகத்
தாடாத செக்கு மரையாத வமமியு மாகி வளர்
பீடாதி பீடத் திருக் காமக் கோட்டம் பிறங்கு கச்சி
மாடாதிபர் எனுங் காலாண்டருந் தொண்டை மண்டலமே"
(தொ: சதகம்: 99)

‡ சிவன் கோவிலிற் சில தொண்டை மண்டல சதகத்தில் குறிக்கப்படுகின்றன:—

"கயிலையுங் கச்சியும் விற்கோலமு நற்க முக்குன்றமும்
பயில்வலி தாயமும் பாசூரும் அச்சிறு பாக்கமும் நல்
லயிலையும் வல்லம் திரு வொற்றி யூரும் அரசிலியும்
மயிலையும் ஈசன் மகிழ்ந்த தன்றே தொண்டை மண்டலமே"
(தொ: ம: சதகம்: 3)

§ "இக்கல்வெட்டில் இவ்வூரை, மகற ஞயத்துத் திருக்கடல் மல்லை தலசயனப் பெருமாளுக்கு—" எனக் குறிக்கிறது.

* அக்கால வழிபாட்டுண் பொருட் குறிப்பு கல்வெட்டில் காணப்படுகிறது: 'பத்துத் திருனாளும் விடாயாத்தி ஆகப் பதிமூன்று ஞளைக்கும் பெருமாள் அமுது செய்தருளும் திருப்பணியாரம படி வகைகள் பழம் எளநீர் பானகம் வெச்சமுது திருப்பொனக தளிகைகள் பிளவு சிலையமுது சாத்தியறுள சந்தணக் காப்பு வகைகள் மத்தும் திருத்தேர் திருனாளுக்குச்

செல்லும் சகல வெச்சங்களும் உள்பட செல்லும் பொன் அடி ”

[கல்வெட்டுக்கள் வாயிலாக வரலாறு மட்டுமின்றி, அக்கால மக்கள் வாழ்வும், பேச்சுமரபும், நாகரிகமும் அறியமுடிகிறது. ஒவ்வொரு கல்வெட்டுச் செய்தியையும், தனித்தனி நோக்கோடு ஆராயச்சி செய்தால் பண்டைத் தமிழ்நாட்டு வாழ்வும், வரலாறும், பண்பாடும், பழக்க வழக்க ஒழுக்கங்களும், பேச்சு இலக்கியம், கலை, உணர்வு பற்றிய உண்மைகளும் தெள்ளத் தெளிவாகப் புலனாகும்.]

அடுத்த கல்வெட்டு கோச்சடையபந்மரான திரிபுவன சக்கர வர்த்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவர் காலத்ததாம். இக் கல் வெட்டால், மகரஞயத்து-துதியை-புதன்கிழமையன்று செயங் கொண்ட சோழ மண்டலத்து ஆமூர்க் கோட்டத்து ஆமூர் நாட்டு பையனூரான பூசகேசரி சதுர்வேதிமங்கலத்து நீர் நிலம் (நஞ்சை) முதலியவற்றை இறையிலியாகக் கோவிலுக்களித்த செய்தியைக் குறிக்கிறது. இக்கல்வெட்டின் பல பகுதிகள் சிதைந்துவிட்டனவாம். இக்கல்வெட்டில் மாமல்ல புரத்தை 'மாமலை புறம்' எனக் குறிக்கப் படுவது கருதத்தக்கது. இப்பெயர் பண்டு வழங்கியதா; அன்றிக் கல்வெட்டு எழுதியோர் பிழையா என்பது ஆய்வுக்குரியது. †

தலசயனப் பெருமாள்கோவில் தென்புறச்சுவரில் கல்வெட்டு உளது. இது அல்லுந்திக்க கண்ட கோபால தேவர் காலத்து (Alluntikka Gaṇḍa Gopala Deva) எனக் கல்வெட்டுத் துறையினர் கருதுகின்றனர் இது ஆய்வுக்குரியது. இக் கல்வெட்டால் 'ஆதி ஞாரயணன்' என்பவன் (உல)குய்ய (வந்த) பெருமாளுக்கு ஒரு சந்தி விளக்கு வைத்ததையும், 12 மாடை வழங்கியதையும் குறிக் கிறது. கல்வெட்டு பிழைகள் மலிந்தும், சிதைந்தும் தெளிவின்றி உள்ளது. ‡

அடுத்த கல்வெட்டு (எவ்விடத்துள்ளதெனக் கல்வெட்டுத் துறையினர் அறிவிக்கவில்லை) திருபுவன சக்கரவர்த்தி மகாமண்ட லேசுவர சம்முகரையர் காலத்தாம். பெருமுலகுய்யும் தலசயனப் பெருமாளுக்கும், நிலமங்கை நாச்சியாருக்கும் நிலங்களும், தென்னை மரங்களும் திருவிடையாட்டத்துக்கும் வழிபாட்டுக்கும் அளிக்கப் பட்டதைக் குறிக்கிறது. $

குடைவரைக் கோயில்களுள் ஒன்றான வராகசாமிக் கோயிலில் உள்ள பிறிதொரு கல்வெட்டு இரண்டாம இராசேந்திர சோழதேவ னுடைய ஒன்பதாம் ஆண்டுக் காலத்தது செயங்கொண்ட சோழ மண்டலத்து ஆமூர்க் கோட்டத்து ஆமூர் நாட்டு நகர மாமல்ல புரமான சனநாதபுரத்து நகரமும், சபையும் சேர்ந்து ஸ்ரீ பரமெச்வர மஹா வராக விட்ணுகிருகத்தாழ்வாருக்கு இறையிலியாக முன்புடைய நிலம் உட்படக் கொடுத்த நிலத்துக்கு எல்லையிறுதியிட்டு; அதி லிருந்து கிட்டும் வருவாய்க்குச் செலவுத்திட்டத்தையும் வரையறுத் துக் கூறுவது இக் கல்வெட்டு. இது மிகச் சிதைந்தும் சீர்கெட்டும் உள்ளது.

* கடல் மல்லையில் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன் இராசசிம்மன், நந்திவர்மன் ஆகியவர் காலத்துக் கலைப் பணிகள் அமைந்துள்ளன. பல்லவர் காலக் கலையில் எளிமை தெளிவு உண்டு. வீணான ஒப்பனை மிகைப்புனைவு முதலிய நுணுக்க வேலைத் திறன் இல்லை. சங்கப் பாடல்களைப் போல் இயற்கையழகு பொருந்தி அமைந்துள்ளமை கருதற்குரியது. கற்கோவில்களும், கல்லோவியங்களும் பல நூற்றுண்டுகளுக்கு முற்பட்ட, பலநூற்றுண்டுகளின் இனிய வரலாற்றை மக்கள் வாழ்வை விளக்கும் பொன் வரலாற்றேடுகளாம் அழகும், பண்பும், நாகரிகமும், உழைப்பாற்றலும், புலமையும, கலையுணர்வும் காலங்காலமாக நமக்கு விருந்தளித்து நம் அறிவையும், உணர்வையும் பண்படுத்திச் சால்பு நிலைக்கு உயர்த்தக் காத்திருக்கிறது கடல் மல்லையில்! கடல் மல்லை கலைக்கோவிலைக் கண்டு களித்து காப்பது நம் கடமையாம்

---

† "மாமல்லை புறத்து ஊரவர் காணியான வூரு கொல்லைக்கி வடக்கும் மெல்ப்பார்க்கெல்லை தங்களூர்க் கரிகரைச் செவ்வைத் தெருக்கு மாமலை புறத்து னத்தத்துககும் பிழக்கடை மானியம காணிக்கும் கழியுரை கழி மெர்ப்பாககத்து யெல்லைக்கும் தெர்க்கும் ஆயிந்த ஞர்ப்பார்க் கெல்லைக்கும், ஆயிந்த ஞர்ப்பார்க் கெல்லைக்கும் னெல வுள்ப்பட்ட னீர் னெலமும் னத்தமும் கொல்லை னிலமும் கால்வாயும் னீரும் அளமுமாய்ப் பொம் ஸகல.........விடப்பட்டு மகாஞட்டுலெ தற்ம்ம தானமாகப் பண்ணிக் குடுத்தோம், இவ்வூர்களுக்கு னீர் பாய க் கயம் வழினடையும் பாச்சக் கடதாகவும். யிந்தப் படி தற்ம்ம தானம் பண்ணிக் குடுத்தொம் மாக சபையொம்" (இப் பகுதியில் பல பிழைகள் உள்ளன.)

‡ "திரு புவன சக்கிற வற்த்திகள்...ஸ்ரீ அனுதினம் .. தனக்கை பால...பெரு வெட்ட...மாமல்லை...குய்யப் பெருமாளுக்கு .. தின பாக்கத்து...ஆதிஞரயணன் வைத்த சந்தி வெளக்கு க, இவ் வெளக்கு ஒண்ணுக்கும் இக் கொவில் தானத்தார் கொண்ட மிடை யஉ. இம்மிடை பன்னிறெண்டும் பத்திக் கொண்டு சந்திருதித்தர் வனுக்கும் னடத்தித் கடவொ மாகவும்.

§ "ஸஸிஸ்ரீ திருபுவன சக்கிறவற்த்தி ஸ்ரீ சம்முகருயன் சுபானு ஸூ முதல்...மாமலை புறத்துலெ யாவரும் வெண்டிய பத்து, ஊரவரும் கண்டு பெருமுலகுய்ய தன சயனப் பெருமாளுக்கும் னெலமங்கை ஞச்சியாருக்கும் திருமண்டபமும் திருவிடையாட்ட மான னெலமும் யிதிலுள்ள தென்ன மரமும் வெண்புறயத்தில் முறையிலுள்ள னிலமாளு வெலையும் யிதிலுள்ள தென்ன மரமும் யின்ஞள் தலத் திருவாருதனைக்கும் திருப்பணிக்கும் பல பணி னிமந்த பெர்க்கும யிப்பத்தில்க் கொள்ளும் உபாதிகளும் உளப்பட ஸஉஸமும் னடக்குர்படி சொல்லிவிட்ட வரவுக்கு திரு வாருதனையும் திருப்பணியும் உ.

* S. I. I. vol: IV No. 377.

# காலக் கணக்கு

திரு. தி. வேங்கடராமன் பி.ஏ., பி.டி. சேலம்.

விஞ்ஞானக் கலைகளுள் மிகப் பழமையானது வான சாத்திரம். அச் சாத்திரம் கோள்களின் நிகழ்ச்சியையும் ஞாயிற்றின் இயக்கத்தையும, மதியின் இயக்கத்தையும் பற்றிக் கூறும் வானசாத்திரக் கலை மக்கள் தோற்றம் தொடங்கிப் படிப்படியாக முன்னேற்றம் கண்ட கலையாகும். மக்கள் வாழ்க்கையோடு வானசாத்திரம் நெருங்கிய தொடர்புடையதாக அமைந்துள்ளதே அதற்குக் காரணம் ஆகும்.

பண்டை மக்களுக்கு, இரவிலும் பகலிலும் காலத்தை அறிய உதவிய இயற்கைப் பெருங்கருவிகள் கதிரவன், மதியம், விண் மீன்கள் முதலியன ஆகும். பகற் பொழுதில் கதிரவனைக் கண்டும் இரவுப் பொழுதில் விண் மீன்களை நோக்கியும காலத்தை அறிந்தனர். ஞாயிறு, மதியம் ஆகிய இவைகளின் இயக்கங்களைக் கொண்டு பண்டைத் தமிழர் ஆண்டு திங்கள், நாள் ஆகியவைகளை ஏற்படுத்தினர் இம் முறையில் தமிழர் அமைத்த காலக் கணக்கு சிறந்தது; ஒழுங்கானது; நிதானமானது; தமிழரின் மேம்பாட்டினை எடுத்துக்காட்டுவது. "கோள்கள், விண்மீன்கள் ஓட்டத்தை நுணுகி ஆராயும் முறை, நம் நாட்டில், சரித்திர காலத்திற்கும் முந்தியதாகும். தமிழரின் கணித முறையே வழக்கிலுள்ள எல்லாக் கணக்கு முறைகளிலும் நிதானமானது" என்று அறிஞர் சிலேட்டர் கூறுவதால் தமிழரின் கணிதமுறையின் சிறப்பினை அறியலாம்.

தமிழர் பண்டைக் காலத்தில் மதிவழியளவினையும் (சந்திர மானம்) பகல் வழியளவினையும் (சூரியமானம்) நன்கு அறிந்து காலத்தை வகுத்தனர். பரதவர்கள் மதிவழி அளக்கும் கணக்கையும் உழவர்கள் பகல்வழியளக்கும் கணக்கையும் உண்டாக்கினர். தென்னாட்டின் கண் உள்ள பரதவர் தமது தொழிலின் பொருட்டு வளர்பிறை, தேய்பிறை இயக்கங்களைத் தெரியவேண்டியமையின் பண்டை நாளிலேயே காலத்தை மதிவழியளக்கும் கணக்கை உண்டாக்கினர். உழவர்களோ பருவக்காலங்களையும் பகலவ னியக்கங்களையும் உற்று நோக்குவாராயினர்" என்பது மக்லீன் அறிஞரின் கருத்து.

பகல் வழியளவு :—

வான் மீன்களைப் பன்னிரண்டு வீடு (இராசி) களாகப் பகுத்து, அவற்றின் ஊடே செல்லும் பகலவன் இயக்கத்தினைக் கொண்டு 360 நாட்கள் அடங்கிய ஒரு ஆண்டினைப் பன்னிரண்டு திங்களாக வகுப்பது பகல் வழியளவு ஆகும். பகலவன் செல்லும் வானவழி யானது பன்னிரண்டு கூறுகளாகப் பகுக்கப்படுகின்றது. காலையிலோ, நண்பகலிலோ, இரவிலோ எந்தநேரத்திலே பகலவன்

ஒரு புதுவீட்டில் செல்கின்றனே. அந்த நேரத்தில் ஒரு புதுத் திங்கள் பிறக்கிறது. நாட்களின் பிறப்பானது கதிரவன் எழும் பொழுது துவங்குகிறது.

சூரியன் ஒவ்வொரு மாதமும் ஒவ்வோர் வீட்டில் தங்குவான். ஒவ்வொரு வீட்டிலும் தங்கும்போது சூரியனுடைய வடிவம் வெவ்வே ருகக் கொள்ளப்பட்டது. சூரியன் தங்கும் வீடுகள் எட்டாகப் பண்டைக் கால மக்கள் கொண்டனர். பழைய இந்தியர் வாழ்ந்த காலத்தில் எட்டு மாதங்களும், ஒரு மாதத்தில் நாற்பத்தைந்து நாட்களும் இருந்தன. அவர்கள் கடவுளுக்கு எட்டு வடிவங்கள் உண்டு எனக் கருதினர். அதாவது சூரியன் தங்கும் வீடுகள் எட்டு எனக் கருதினர், அவற்றின் வடிவங்கள் எட்டு அவைகள் முறையே ஆடு, நண்டு, சிங்கம், கன்னி, துலாம், கடகம், மீன், யாழ் என்பன.

பின்னர் சுமேரியர் காலத்தில் சூரியன் தங்கும் வீடுகள் பத்து எனக் கண்டு கொள்ளப்பட்டது. நாகரிகத்தில் தனி சிறந்து விளங்கிய தமிழர்கள் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே பன்னிரண்டு இராசிகளை அறிந்திருந்தனர். சூரியன் தங்கும் வீடுகள் பன்னிரண்டு எனக் கொண்டனர் ஒவ்வொன்றிற்கும் அவற்றின் வடிவத்திற்கேற்ப பெயரிட்டு வழங்கினர். அவைகள் முறையே ஆடு, விடை, யாழ், நண்டு, அரி, கன்னி, கோல், தேள், வில், மான், குடம், மீன் என்பனவாகும்.

மதிவழியளவு :—

மதிவழியளவு என்பது வான்மீன் நிலைகளை உணர்ந்து அவற்றின் ஊடே செல்லும் மதியின் இயக்கத்தைக் கண்டறிந்து காலத்தை அளப்பது ஆகும். விண்ணில் மதி செல்லும் வழியாகிய வட்டத்தை 27 பிரிவுகளாகப் பிரித்து அப்பிரிவுகளை அறிந்து கொள்ளும் அடையாளமாக 27 விண் மீன்தொகுதிகளைக் குறித் தனர். தமிழர் வளர்பிறை தேய்பிறை இயக்கங்களைத் தெரிந்து கொள்ள மதிவழியளக்கும் கணக்கை உண்டாக்கினர்

"வான்மீன் நிலைகளை உணர்ந்து அவற்றினூடு செல்லும் மதியின் இயக்கத்தைக் கண்டறிந்து நாள்களை வகுத்த பண்டைத் தமிழரின் மதியளவாகிய சந்திரமான ஆராய்ச்சி தமிழர்க்கு மட்டுமே உரித்தாவது என்று மாக்ஸ் முல்லர் என்ற அறிஞர் காட்டுகின்றார்,

"மதியளவாகிய சந்திரமான ஆராய்ச்சியில் பாபிலோனியர் எனப்படும் சாலிடியர் தேர்ந்தவரல்லர். அதனை உணர்ந்தவரும் அல்லர். பகல் வழியளவாகிய சூரியமான ஆராய்ச்சியில் ஆரியர் தேர்ந்தவர் அல்லர். அதனை உணர்ந்தவரும் அல்லர், ஆனால் பண்டைத் தமிழர் சாலிடியர்க்குத் தெரியாத மதிவழியளவினையும்

ஆரியர்க்குத் தெரியாத பகல் வழியளவினையும் தாமாகவே நன்கு அறிந்திருந்தனர்'; என்று அறிஞர் மறைமலை அடிகள் கூறுகின்றார்.

ஆண்டின் தொடக்கம்.

பண்டைத் தமிழர் எம்மாதம் முதலாக ஆண்டுத் தொடக்கம் கொண்டனர்? இது ஆராய்ச்சிக்குரிய கேள்வி! பல அறிஞர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

சிந்துவெளி மக்களது ஆண்டின் தொடக்கம் தை மாதத்தி லிருந்தே தொடக்கமாக இருந்தது எனக் கருதுகின்றனர், சிந்து வெளி நாகரிகத்தை ஆராய்ந்த அறிஞர் பெருமக்கள். பண்டைத் தமிழ் மக்களின் ஆண்டும தை மாதத்திலிருந்தே கணிக்கப்பட்ட தென்று தமிழறிஞர் சிலர் கூறுகின்றனர். ஆனால் அவற்றைத் திட்டவட்டமாகக் கூறவில்லை என்று இராவ்பகதூர் தீட்சதர் போன்றோர் கூறுகின்றனர்.

ஒல்காப்புகழுடைத் தொல்காப்பியர் முதலில் முல்லைத்திணையை யும், அதற்குரிய கார்காலத்தையும் தொல்காப்பியத்தில் குறிப்பிடு கின்றார். கார்காலம் ஆவணியில் தொடங்குகின்றது. ஆகையால் தொல்காப்பியர் காலத்தில் ஆண்டு ஆவணியில் தொடங்கியது என்று சில அறிஞர் கூறுவர். இன்று சித்திரை முதலாக ஆண்டுத் தொடக்கம கொள்கிறோம். மலையாள நாட்டில் ஆண்டுத் தொடக்கம் ஆவணியிலிருந்தே கொள்ளப்படுகிறது.

நில உருண்டையின் அச்சு முனையானது சிங்க இராசிக்கு நேராக இருந்த காலம் ஆவணியில் ஆண்டு தொடங்கிய காலம். அச்சுமுனை சுழல்வதில் சிங்க இராசிக்கு முந்திய இராசிக்குச் செல்ல சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குக் குறையாது என்று வான நூலோர் கூறுவர். அவ்வாறு கருதுமிடத்து அது மேடராசியைச் சுட்டுவதற்கு சில ஆயிரம் ஆண்டுகள் கழிந்திருக்கவேண்டும். இப் பொழுது மேடத்தினின்று பின்னாக மீன இராசியை நிலத்தின் அச்சுமுனை சுட்டுகிறது என வான நூலோர் கருதுகின்றனர். தொல்காப்பியர் காலத்துக்கு முன்னேயே ஆண்டு ஆவணியில் தொடங்கி இருத்தல் கூடும். பன்னாள் கழித்து மக்கள் இவ்வான நூற் செய்தியை உணர்ந்து ஆண்டினைச் சித்திரையில் தொடங்கி யிருக்கலாம். ஆனால் நில உலகின் அச்சுமுனை மேட இராசியி லிருந்து பின்னால் விலகியும் இன்னும் ஆண்டினைச் சித்திரை யிலிருந்தே தொடங்குவதாகக் கணக்கிட்டு வருகிறோம்.

நாள் தொடக்கம்.

உலகில் உற்ற மக்களுக்கு நாள் தொடக்கம் ஒரே மாதிரி இல்லை. அது வேறுபட்டுக் காணப்படுகிறது. ஆரியர்களுக்கு நாள் தொடக்கம் காலை 5 மணி. அராபியர்களுக்கு நாள் தொடக்கம் மாலை 5 மணி. ஐரோப்பியர்களுக்கு நாள் தொடக்கம் நள்ளிரவு

12 மணி. ஆனால் தமிழர்களின் நாள் தொடக்கம் நண்பகல் 12 மணி. இதற்குப் பண்டை இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

"நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்" (புறம். 189)

"யாமநடு நாட்டுயில் கொண்டொளித்த" (கலி. 122)

"நடுநாள் வாரல் வாழியோ" (குறு.)

இப்பாடலடிகளில் குறிப்பிடப்படும் நடுநாள் என்பது நள்ளிருள் இரவு 12 மணியாகும். ஆகையால் பண்டைத் தமிழரின் நாள் தொடக்கம் நண்பகல் 12 மணி எனத் தெளியலாம்.

**காலங் காட்டும் கருவிகள்**

பழங்காலத்தில் மக்களுக்கு காலங்களை நேரங்களை அறிவதற்கு விண்மீன், திங்கள், ஞாயிறு போன்ற இயற்கைப் பெருங் கருவிகளே உதவி செய்தன அன்றியும் பண்டையோர் காலக்கணக்கு நாழிகைவட்டில் என்னும் கருவியால் கணிக்கப்பட்டது. இன்று விண்மீன் ஆகியவைகளை நோக்கி நேரம் அறிவது அருகியே நாட்டுப்புறத்தில் காணப்படுகிறது. இன்று இயற்கைப் பெருங் கருவிகளைவிடச் செயற்கைப் பெருங் கருவிகளே பெரிதும் துணைபுரிகின்றன. 'கடிகாரம்' என்ற ஒரு விஞ்ஞானக் கருவி இன்று காலம் காட்டும் கருவியாக விளங்குகின்றது.

**காலக்கணக்கு.**

பண்டைத் தமிழர் காலக்கணக்கை 'விநாடி' என்ற சிற்றளவிலிருந்து தொடங்கினர். 'நாழிகை' என்ற அளவு அவர்கள் கணகில் இருந்தது. இருபத்து நான்கு நிமிடங்கள் கொண்டது ஒரு நாழிகை. நாழிகை முப்பது கொண்டது ஒரு பகல். பகல் நாழிகை முப்பது. இரவு நாழிகை முப்பது. ஒரு நாளுக்கு அறுபது நாழிகையாகும். 'யாமம்' என்ற கணக்கும் பண்டு இருந்தது. ஏழரை நாழிகை கொண்டது ஒரு யாமம பகலுக்கு நான்கு யாமம். இரவுக்கு நான்கு யாமம். இன்றைய காலக்கணக்கில் 'நாழிகை' என்ற அளவு இல்லை. இன்று காலக்கணக்கை 'விநாடி' என்னும் சிற்றளவிலிருந்து தொடங்குகின்றனர், அறுபது வினடிகள் கொண்டது 1 நிமிடம். அறுபது நிமிடங்கள் கொண்டது ஒரு மணி. பன்னிரண்டு மணி கொண்டது ஒரு பகல். ஒரு நாளுக்கு இருபத்து நான்கு மணியாகும்,

இன்றைய காலக்கணக்கு பண்டைய காலக் கணக்கினும் வேறுபட்டது. இன்றைய காலக்கணக்கு மேனாட்டார் காலக்கணக்கு பண்டைத் தமிழர் காலக்கணக்கு அருகியே நாட்டுப்புறத்தில் வழங்குகின்றது. அதனை அழியாமல் பாதுகாப்பது நம் கடன்.

# திருமங்கை ஆழ்வார் காட்டும் இயற்கைக் காட்சிகள்.

(மு. வெள்ளைச்சாமி)
(புலவர் நிறைவு நிலை, உ. கரந்தைப் புலவர் கல்லூரி)

நிலம், நீர், தீ, வளி, விசும்போடைந்தும் கலந்த மயக்கம் உலகம் என்பது தமிழிலக்கண நெறியின் கருத்துரையாகும். எனவே தான் இறைவனைக் காண விரும்பும் அடியார்கள் ஒவ்வொருவரும் இயற்கையின் வழியே இறைவனைக் காண முயற்சிக்கிறார்கள். உலகத்து நிகழ்ச்சிகள் அனைத்தும் இறைவனால் நடைபெறுகின்றன அவனன்றி ஓரணுவும் அசையாது என்பது உறுதியான கொள்கையாகும். ஓரறிவு உயிர் முதல் பகுத்தறிவு கொண்ட ஆறறிவு உயிர் வரை இறைவனையே இறைஞ்சுகின்றன. ஆதி முதல்வனே என்றழைத்த போது அருள் கொடுத்த அந்த ஆண்டவன்தான் இலங்கை நகர் அழிவதற்கும் காரணம் என்றால் ஆண்டவன் எங்கும் பரவியுள்ளான். இயற்கையும் அவனே! செயற்கையும் அவனே என்பது ஆண்டவன் அருள் பெறத் துடிக்கும் ஆன்றோர்களில் வழிகண்ட கருத்தாகும். அத்தகைய ஆன்றோர்களில் ஒருவராகிய திருமங்கையாழ்வார் இயற்கையைக் காணும் வகையை நோக்குவது அவர்தம் பாடல்களை ஆராயும் ஆராய்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும். எண்ணத்தில் அவர் காணும் இயற்கையை நாமும் காண்போம்.

சோழநாட்டிலே தோன்றிய திருமங்கையாழ்வார் ஆண்டவன் காட்சி கொடுத்த ஆலயங்களையெல்லாம் வணங்கும் நோக்கத்தில் வடநாட்டிலுள்ள ஆலயங்களுககும் சென்றுள்ளார் என்பது அவர்தம் பாடல்களால் நாம் அறியும் செய்தியாகும். வடநாட்டில் உள்ள பிருதி என்னும் ஊர் திருமால் காட்சி கொடுத்த திருத்தலமாகும். இறைவனைக் காணும் அடியார் அத்தலத்தில் உள்ள மயிலையும், வேழத்தையும் வேங்கையையும், அரவினையும் நோக்கி அவற்றின் செயல்களைக் கூறும் கற்பனை தம் உள்ளத்தை உணர்ச்சியின் எல்லைக்குக் கொண்டு செல்கிறது.

இன்பத்தைக் காட்டும் ஆழ்வார் அச்சத்தையும் காட்டும் திறத்தால் நகையையும் ஊட்டுகிறார். பிண்டிமலர் தாது மல்கி மலர்கிறது. செமமை மிகுந்த அம் மலரின் எழில் தோற்றம் தழல் போல் காணுகிறது. தேன் எடுக்க வரும் வண்டுகளின் கண்களுக்கு அச்சந்தருகிறது. அவ் வண்டுகள் வெருவும் காட்சி நமக்கு நகைப்பினைக் காட்டுகிறது. முகிற் படலங்கள் முழங்குகின்றன. களிறின் பிளிறலெனக் கருதி இடம் பெயரும் மாசுணத்தின் அச்சத்தை என்னென்பது. காட்டிலேற்படும் அச்சத்தை நமக்கு ஊட்டும் உயர்ந்த காட்சி இது. பிருதியில் கண்டதாக அவர் பாடும் பத்துப் பாடல்களும் இயற்கையைப் படம் பிடித்துக் காட்டுவனவாகும்.

குறிஞ்சிக்கொரு கபிலர் என்றாற்போலவே அவருடைய சிறப்புக்களைத் திருமங்கையாழ்வார் காணும் இயற்கையிலும் காணலாம். குறிஞ்சி மக்கள் குறவராவார். வேட்டையாடி வந்த அவர்கள் குறமாதரொடு கூடி இன்பம் துய்க்கிறார்கள். அம் மாதர்களோடு வண்டுகள் இசைபாடுகின்றன. குறிஞ்சியே மருளுகிறது என்கிறார் ஆழ்வார். 'குறவர் மாதர்களோடு வண்டு குறிஞ்சி மருளிசை பாடும் வேங்கடம்' 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்' என்ற வள்ளுவர் கண்ட கவரிமாவினை நம்மை வேங்கடத்தில் காணச் செய்கிறார் ஆழ்வார். கூட்டமாகக் கவரி இனம் வாழ்கிறது வேங்கடத்தில் என்பதை 'கவரிமாக் கணம் சேரும் வேங்கடம்' என்பதிலிருந்து தெரிகிறது. கவரி என்பது மான் இனம் இல்லை என்பது இதனால் போதரும். வள்ளுவரும் கவரிமா அன்னார் என்றாரேயன்றி கவரிமான் அன்னார் என்றாரில்லை. அவர் போலவே ஆழ்வாரும் கவரிமான் என்னாது கவரிமாக் கணம் என்றார். மா என்பது விலங்கு என்பது போதரும். வண்டுகள் இசை பாடுகின்றன என்பதை, 'நறுந்தேன் தீந்தேன் உண்ட வண்டு குறிஞ்சி பாடுங் கூடலூரே என்பதால் அறியலாம். இது குறிஞ்சிக்காட்சி.

இனி, பாலையைக் காண்போம். பாலை நிலம் என்பது முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து நல்லியல்பிழந்து நடுங்கு துயருறுத்துப் பாலை என்பதோர் படிவங் கொள்ளும் என்பது இளங்கோவடிகள் வாக்கு. அத்தகைய பாலைநில மக்கள் மறவர் எனப்படுவர். அவர்கள் தொழில் பாலைநிலத்தின் வழியே செல்வோரை மறித்து வழிப்பறி செய்வது. இக்காட்சியை ஆழ்வார், 'மலைத்த செல் சாத்தெறிந்த பூசல்வன் துடிவாய் கடுப்பச் சிலைக்கை வேடர் தெழிப்பருத சிங்கவேள் குன்றமே' என்ற சிங்கவேள் குன்றம் பாலை நிலத்தில் உள்ள திருமால் எழுந்தருளியுள்ள ஊர் என்பதைக் கூறுகிறார்.

அடுத்து பாலை நிலத்தின் இயல்பு :- உணவுக்காக அலைந்து அலைந்து களைப்படைந்த விலங்குகளும், உடைந்துபோன மலைகளும் வெப்பத்தோடு உராய்ந்து உராய்ந்து தேய்ந்துபோன மூங்கிலும் உடையது. அக்காடு நாய்களும், கழுகுகளும் தெய்வமுமன்றிச் செல்ல முடியாத காடு. 'ஒய்ந்த மாவு முடைந்த குன்றுமின்றியும் நின்றழலால், தேய்ந்த வேயுமல்லதில்லாச் சிங்கவேள் குன்றமே' கவ்வு நாயும் கழுகுமுச்சில் போதொடு கால் சுழன்று தெய்வமல்லாற் செல்ல எண்ணாச் சிங்கவேள் குன்றமே' நெரிந்த வேயின் முழையுளின்று நீணெறி வாயுழவை திரிந்த வானைச் சுவடு பார்க்குஞ் சிங்கவேள் குன்றமே' 'கனைந்த தீயுங் கல்லுமல்லா வில்லுடை வேடருமாய்த் தினைத்தனையுஞ் செல்லவொண்ணாச் சிங்கவேள் குன்றமே' காய்த்த வாகை நெற்றொலிப்பக் கல்லதர் வேய்ங்கழை போய்த் தேய்த்த தீயால் விண் சிவக்கும் சிங்கவேள் குன்றமே' 'நெல்லிமல்கிக் கல்லுடைப்பப் புல்லிலையார்த்து அதர்வாய்ச் சில்லி

சில் லென்றெல்லரு சிங்கவேள் குன்றமே! இவ்வாறு பாலைநில வாழ்க்கை, இயல்பு பொருட்கள் முதலியவற்றை நம் எண்ணத்திற்குக் கொண்டு வருகிறார்.

நெய்தல் நிலத்தைக் காண்போம். கடலும் கடல்சார்ந்த பகுதியும் நெய்தல் நிலமாகும். ஆழ்வார் காணும் ஊர் மல்லையாகும். அதைக் கடல் மல்லை என்றே அழைக்கின்றார். நெய்தல் நிலமலர் நெய்தல் என்பதாம. 'நீலமார் வண்டுண்டு வாழும் நெய்தலந் தண்கழனி, ஏலநாறும்மைப் புறவில் எவ்வுள்' பரதவர் மீன்பிடிக்கச் செல்வதுபோலவே கலங்களும் வந்து பலவகைப் பொருட்களை இறக்கித், தேவையான பொருட்களை ஏற்றிச் செல்வது நெய்தல் நிலத்தில் காணும் காட்சியாகும். கடல்மல்லை பெரிய நகரமாதலின் அங்கு இயங்கும் கலங்களைக் காண்கிறார் ஆழ்வார். புலங்கொள் நிதிக் குவையோடு புழைக்கைம்மா களிற்றினமும், நலங்கொள் நவமணிக் குவையும சுமந்து எங்கும் நன்றொசிந்து, கலங்களியங்கும் மல்லைக் கடல் மல்லை.'

திருமங்கையாழ்வார் பாடும் பாடல்களில் இயற்கை வளம் செறிந்து. கற்பனை நயம் மிகுந்து கற்றோர் உள்ளத்தை மகிழ்விக்கும் பகுதி மருதநிலப் பகுதி என்றால் அது மிகையாகாது. சோழ நாடு மருதநிலம் மிகுந்த நாடாகும். கருநீல மலரையும் புன்னை மலரையும் தாமரையையும் பார்க்கிறார் ஆழ்வார். இயற்கையோடு இயைந்த கற்பனை உள்ளத்தே தோன்றுகிறது. 'எழுந்த மலர்க் கருநீலம் இருந்தில் காட்ட இரும்புன்னை முத்தரும்பிச் செம்பொன் காட்ட செழுந்தடநீர்க் கமலம் தீவிகை போல் காட்டும் திருக்கோவலூர் என்று இயற்கை வளத்தைச் சிறப்பிக்கிறார். கமுகு மரம் பாளை விரித்து முத்தரும்புகின்றது. செருந்தி மலர் மொட்ட விழ்ந்து தேனைச் சிந்துகிறது. அத்தகைய வளம் பொருந்தியது திருக்கோவலூர் என்கிறார். அன்னம் பெடையோடு தாமயில் துயில்கிறது. வயலில் செந்நெல் காற்றிற்கு அசைகிறது. இக்காட்சி ஆழ்வாரின் கற்பனையை இயக்குகிறது. பாடுகிறார்:– 'மணிவரை நிழல், அன்னமா மலராவிந்தத் தமளியில் பெடையோடும் இனிதமர, செந்நெலார் கவரிக்குலை வீசு தன் திருவயிந்திரபுரம்' என்று சிறப்பிக்கிறார்

நதி பாய்ந்து வயல் செழிக்கும் திருவூர் திருவயிந்திரபுரம் என்பது. அந்நதியின் சிறப்பினைக் கூறுகிறார் 'தடமார் வரைவளம் திகழும் மதகரி மருப்பொடு மலை வரைய கிலுந்தி திரை கொணர்ந்தனை செழுநதி வயல்புகு திருவயிந்திரபுரம்' என்றும், 'குலவு தண் வரைச்சாரல், கால் கொள்கண் கொடிக்கை யெழக் கமுகிளம் பாளைகள் கமழ் சாரல் சேல்கள் பாய்தரு செழுநதி வயல்புகு திருவயிந்திரபுரம் என்றும் நதியின் சிறப்பினைக் கூறுகிறார்.

திருச்சித்திரகூடம் சென்ற ஆழ்வார் அதனைக் கூறுவதைக் காண்போம். 'கானுடை மஞ்ஞைக் கணமாட மாடே கல்லாடு காணீர்ப்

பழனம் புடைபோய் தேடை மாடக்கொடியோடு தில்லைத் திருச்சித்திர கூடம்' மஞ்ஞைக்கணம் மகிழ்ந்து ஆடுகிறது ஒருபுறம், வேதம் ஓதும் வாயுடை அந்தணர் தீ வளர்க்கும் காட்சி ஒருபுறம இவை தான் திருச்சித்ரகூடத்தில் காணும் காட்சிகள் என்றால் இல்லை என்கிறார். வாயோது வேதம் மலிகின்ற தொல்சீர் மறையார் மட்டு மின்றி அங்குள்ள கிளி முதலிய பறவைகளும் வேதத்தை ஓதிய வண்ணமாக உள்ளன என்கிறார். செவ்வாய் கிளி நான்மறைபாடு தில்லைத் திருச்சித்திரகூடம். கைதை மலர்கிறது. மலர் காணும் கயலின் நெஞ்சில் அச்சம் குடிகொள்கிறது மலர் என்பதையே மறந்து குருகு என்று கருதி நீருள் மூழ்குகிறது என் கிறார் ஆழ்வார். 'அருகு கைதை மலர கெண்டை குருகென்றஞ்சும் கடலூர்' என்கிறார். இக்கருத்தினை சங்கநூலாகிய குறுந்தொகையில் உள்ள 'குருகுக் கொளக் குளித்த கெண்டை அயலது உருகெழு தாமரை வாண்முகை வெரூஉம்' என்பதனுடு ஒப்பிட்டு இன்புறலாம்

வயலில் சே உழுகிறது. சங்குகள் முத்துக்களை ஈனுகின்றன. குருகுகள் வயல்வெளியில் பறக்கின்றன. கடலம் நிறைந்த வயலில் சேல் துள்ளிப்பாய்கிறது. அணில்கள் கமுகமரத்தின்மேல் தாவ, கமுகுக்காய்கள் விழுகின்றன. பலாமரத்தின் மேலும் தாவுகின்றன. பழம் சிதைந்து மதுச்சொரிகின்றன. இது காழிச்சீராம விண்ணகரங் காட்டும் காட்சி. இதை ஆழ்வார் பாடலாகக் காண்போம 'உழு சேயாடச், சூல்முகமார் வளையளைவாய் உகுத்த முகத்தைத் தொல் குருகு இணையென்னச் சூழ்ந்தியங்க எங்கும், தேன்முகமார் கமல வயல் சேல்பாய் காழிச்சீராம விண்ணகர்' அணில்கள் தாவ, நெட்டிலைய கருங்கமுகின் செங்காய்வீழ நீள்பலவின் தாழ்சினையில் நெருங்கு பீனக், தெட்ட பழம் சிதைந்து காழிச்சிராம விண்ணகர் என்பதாம். கடலில் தோன்றும் சங்கு அலைகளால் தள்ளப்படு கிறது. பின் அது கழனியில் போய்ச் சேர்ந்து வயலடைந்து, மழை பெய்ய அந்நீரின் மூலம் தெருவிற்குவந்து வலம்புரி முத்தை ஈனு கிறதாம் காழிச்சிராம விண்ணகரில், இயற்கையைப்பற்றிக் கூற இதனினும் வேறு சிறப்புண்டோ? 'திரைநீர்த்தெள்கி, மருவி வலம்புரி கைதை கழியூடாடி வயல் நண்ணி மழைதருநீர் தவழ்கால் மன்னி, தெருவில் வலம்புரிதரளம் ஈனும் காழிச்சீராம விண்ணகர்' என்பது.

மதுவுண்ணும் வண்டு மலர்நாடிச் செல்வது இயல்புதான். என்றாலும் திருமங்கையாழ்வார் காணும் வண்டு, கழுநீர்மலரில் கூடி, கலந்து துயின்று, கைதைத் தோடாரும் பொதிகோற்றுச் சுண்ணம் நண்ணி, களிபாடுகிறது என்கிறார், இயற்கையின் படைப்புதான் எழில் கொண்ட மாதர்களும் அவர்களைக் குறிப்பிடுகிறார். வெற்புப் போலும், துங்கமுகமாளிகைமேல் ஆயங்கூறும் துடியிடையார் முக கமலச் சோதி தன்னால், திங்கள்முகம் பனிபடைக்கும் அழகார்காழிச் சீராம விண்ணகர்' என்கிறார்.

இறைவனைப்பாடும் ஆழ்வார்கள் இறைத்தன்மையை மட்டு மின்றி உலகியல், வாழ்வியல், பொருளியல், தாவர இயல் முதலியன

வற்றையும் குறித்துச் சிந்தித்துக் கற்பனை நயம் சிறக்கப் பாக்கள் பாடியுள்ளனர். ஆழ்வார்களில் முதலாவதாகவைத்து எண்ணப் படும் பெரியாழ்வார், கண்ணன் குழல்ஊதும்பொழுது உணர்ச்சி யுடைய உயர்திணை, அஃறிணைப் பொருட்கள் அனைத்தும் இசையில் மயங்கி ஒரே நோக்காக இருந்தன என்று பாடுகிறார். மரங்கள் செடிகொடிகள் அனைத்தும் வளைந்தன, நிமிர்ந்தன என்றும்

> "மரங்கள்நின்று மதுதாரைகள் பாயும் மலர்கள் வீழும் வளர்
> [கொம்புகள் தாழும்
> இரங்கும்கூம்பும் திருமால்நின்ற நின்ற பக்கம் நோக்கியவை
> [செய்யும் குணமே"
> (பெரியாழ்வார் பாடல்கள் 3 ப. 7 தி. 10)

என்றாரேயன்றி இறைவடிவான கண்ணனது குழலொலி கேட்டு வளரும் என்று கூறவில்லை. இன்றைய ஆராய்ச்சியாளர்கள் இசை யால் பயிர்வளரும் என்ற உண்மையை செயல்படுத்திக் காட்டுகின் றனர். இக்கருத்தைத் திருமங்கையாழ்வார் உயர்ந்த கற்பனை நயத் துடன் இயற்கையோடு இயைந்து.

> "கோங்கரும்பு சுரபுன்னை குரவார் சோலைக் குழர்வரிவண்டு
> [இசைபாடும் பாடல்கேட்டு
> தீங்கரும்பு கண்வளரும் கழனிசூழ்ந்த திருக்கோவலூரே"
> (பெரியதிருமொழி 2 ப. 10 தி. 4)

என்று தமக்கே உரிய பாநயத்தோடு பெருமிதம் தோன்றப் பாடு கிறார்.

> "விலங்கலிலுரிஞ்சி மேல்நின்ற விசும்பில் வெண்துகிற்
> [கொடியென விரிந்து

வலந்தரு மணிநீர்க் கங்கை" என்றும் "வளைக்கையானை மருப்பும் அகிலும் கொணர்ந்துந்திமுன் திளைக்கும் செல்வப்புனல் காவிரி" என்றும், "காய்த்த நீள்கமுகும் கதலியும் தெங்கும் எங்கும் மாம் பொழில்கள் நடுவே வாய்த்தநீர் பாயும் மண்ணி" என்றும் அவர் கண்ட ஆற்றின் சிறப்பையும் "மாங்கனி நுகர்ந்த மந்திவந்து வண்டிரிய வாழைத் தீங்கனி நுகரும் நாங்கூர்' என்று மந்தியின் இயல்பையும், "மாம்பொழில் தளிர்கோதிய மடகுயில் வாயது துவர்ப்பெய்த, தீம்பலங்கனித் தேனது நுகர் திருவெள்ளறை" என்று குயிலின் இயல்பையும், 'மன்னுகேதகை சூதகம் என்றிவை வனத்திடைச் சுரும்பினங்கள்" என்று வண்டினங்களையும் தாம் கண்டவாறே ஓவியம் வரைந்து காட்டிஞற்போன்று இயற்கைக் காட்சிகளைப் பாக்களாகப் பாடிச் சென்றுள்ளார். அவர்கண்ட இயற்கைக் காட்சிகளை நாமும் அவர் பாடல்களின் மூலமாகக் கற்று இன்புறுவோமாக!

—:0:—

# இயற்கை

(ப. தமிழ்மணி)
(புலவர் நிறைவு நிலை. 2. கரந்தைப் புலவர் கல்லூரி)

## தமிழ்த்தாய் வாழ்த்து :

அனல்கக்கிக் கதிர்வெ டிக்க அண்டங்கள் பிரிந்து செல்லக்
கனல்கொதித் திருந்து பின்பு காலத்தின் பயணம் நீளப்
புனல் வழிந் தனலை விட்டப் புதியதோ ருலகந் தோன்ற
முன்னம்வரும் இனத்தார் பேசும் முத்தமிழ் மொழியே வாழி

## தலைவர்க்கு .

" கவியரங்கத் தலைமையினை அழகு செய்யும்
'கரந்தைக்கோ வை'த்தந்த புலவ ரேறே!
செவியரங்கிற் றேன்பாய்ச்சுந் தமிழின் சாற்றைச்
செந்தமிழர்க் குதவிடவே பாக்கள் செய்து
புவியரங்கிற் றமிழ்ப்புகழை முரசொ லிக்கப்
புலவர்படை சமைத்தளிக்கும் பொறுப்பில் நின்று
தமிழரங்கந் தனிற்றமிழை முழக்கஞ் செய்யும்
தமிழ்க்குரிசில்! தமியனேன் வணக்கம் ஏற்பீர்!

## முதல்வர்க்கு :

தனித்தமிழிற் பேசிடவா? எழுதத் தானா?
தனித்தமிழ்ந்து போமென்றே இழித்து ரைத்த
துணிவுடைய தமிழ்ப்பகைவர் நாவைக் கீண்டு
துகளாக்கி மிதித்தவரை வெற்றி கொண்ட
தனித்தமிழின் பெருந்தலைவன் ஒருத லைவன்
தமிழ்மலையாம் மறைமலையின் கொள்கை போற்றிக்
கனித்தமிழின் வாழ்வேயென் வாழ்வாம் என்னும்
கல்லூரி முதல்வர்க்கென் வணக்கம் ஏற்க!

## பேராசிரியர்கட்கு :

காவார்ந்த பசுமரத்திற் கொடிகள் தம்மில்
கழைக்கோட்டிற் செடிகளிலே முல்லைக் காட்டில்
பூவார்ந்து தேனெடுத்துத் தாது வாரிப்
பொங்கருவி மிசையாடி வந்த தென்றல்
பாவார்ந்த தேன்றமிழ்க்குப் பண்ண மைத்துப்
பாடமென வழங்குதமிழ்க் குரவீர்! நீவிர்
நாவார்ந்த உளமார்ந்த வணக்கம் ஏற்பீர்!
நான்பாடுந் தமிழினிலே பிழைபொ றுப்பீர்!

---

* கல்லூரிக் கவியரங்கக் கவிதை.

நண்பர்கட்கு :

பயிரோடு கலந்துநிற்கும் பசுமை கூடப்
பருவமழை யின்மையினுல் வாடல் கூடும்
உயிரோடே ஒன்றுதமிழ் உளத்தில் பொங்கும்
உணர்வென்னும் மழைதன்ஞல் பொலிவு பெற்றுப்
பயிராக வளங்கொழித்துப் பயனே ஈயும்
பைந்தமிழே போற்றுகின்ற பாண்மை கொண்டிங்
கயராதே அருந்தொண்டை ஆற்றும நண்பீர் !
அன்புடனே என்வணக்கம் அளித்தேன் ஏற்பீர் !

அவையடக்கம் :

தலைப்பினிலே இயற்கையெனப் பெயரைத் தந்து
தலைவராய்ப் பாவலர்தாம் அமர்வா ரென்று
மலைப்பினிலே எனை 'அமைச்சர்' ஆழ்த்தி விட்டு
மாத்தமிழிற் கவிதைத்தேன் சொரிக என்ருர் !
நிலைப்பினிலே இமயமன்ன கவிஞர் முன்னர்
நெறியறியேன் கவியறியேன்: எனினும் அன்ஞர்
அழைப்பினிலே ஆட்பட்டேன்; ஆன மட்டும்
அடியெடுத்து' வைக்கின்றேன்; கைகொ டுப்பீர் !

"இயற்கைக் காட்சி"

ஆழ்கடல் உறக்கம் நீத்தே ஆரிருள் ஓட்டல் வேண்டிச்
சூழ்கதிர் படையாக் கொண்டு துடித்தெழும்
[கதிரோன் தோற்றம்
நீலவான் முகிலின் கூட்டம் நெடுமலை கொடிகள் சோலை
கோலமார் வயல்கள் எங்கும் 'கூகூ'வென்ருர்க்கும் புட்கள்

சிந்திசை பாடும் யாறு சிற்றுளி அருவி ஓசை
மந்திகள் தாவித் தம்முள் மருவிநின் ருர்க்கு மாட்சி
வந்திசை செவியிற் பாய வண்சுழை காற்றிற் பாடல்
தென்றிசைத் தமிழை வாழ்த்தும் தேனீக்க
[ளிசைப்பண் ணேசை

களிறுகள் பிளிறும் ஓசை கரடிகள் தாவும் காட்சி
மிளிர்மற அரிமா ஆட்சி மிடலுடை உழுவைக் கூட்டம்
தளிர்நிறப் புட்கள் ஆர்த்தல் தனியொரு வேங்கைப் பாய்ச்சல்
குளிர்நிழற் கொடைம ரங்கள் கொண்டல்கள் தவழும் குன்றம்

தேனினை நுகரும் வண்டு தெள்ளிசை பாடுந் தும்பி
மானினம் ஓடும் காட்சி மயிலினம் ஆடும் மாட்சி

கானினர் குழலின் ஓசை காற்றினிற் கிளைகள் ஆடல்
பாண்குழாம் தாமே யென்னப் பாட்டிசை ஆயர் கூட்டம்

தேன்தமிழ் பாய்ச்சி நிற்கும் சிற்றிடைச் செவ்வாய் மாதர்
'நான்தமிழ் நல்ல யாழே நரம்பினை இசைக்க' என்றே
மான்விழி மாதர் தந்த மழலைகள் கொஞ்சும் காட்சி
பூந்தமிழ் விளக்கங் கொண்ட புதுமுல்லை மணக்குங் காடு

ஆற்றிடைத் தேடிச் சோர்ந்து அரிவைகண் பழித்த மீனைச்
சேற்றிடைத் தேக்கி பாங்கர் சேர்ப்பினை அலைத்து மாடே
வேற்றுநீர் கொண்டே யார்க்கும் விரிகடற் பரப்பி னூடே
மாற்றமில் மணி,மீன், முத்தை வலைஞர்கள் திரட்டும் மாட்சி

பூக்களின் தேனும் பொய்கைப் புதுமலர் மணமும் ஆயர்
ஆக்களின் மணியின் ஓசை அருவியின் குளிர்ச்சி பூந்தேன்
பாக்களின் நயமுந் தாங்கிப் பழந்தமிழ் முரசு கொட்டித்
தேக்கமழ் தென்றல் என்னும் தீந்தமிழ்க் கூத்தன் ஆடல்

தென்றலை உதவும் குன்றில் தேனடை அகில்கள் தேக்காம்
நின்றுயர் மரங்கள் தம்முள் நெடுமொழி நிகழ்த்தி நிற்க
வென்றுயர் மூங்கிற் கூட்டம் விண்ணினைத் [illegible]க்கும் காட்சி
நன்றுதன் றியற்கை யங்கே நானென்னை யிழந்து விட்டேன்!

• •

நறுமலர் ஏந்தி நிற்கும் நன்னிற அல்லிப் பாவாய்!
உறுமணத் தென்றல் உன்னை உலைப்பது கொடுமை என்றேன்
'பெறுமின்பம் கொள்ளை கோடி பேதை'யென் றல்லி சொல்ல
நறுந்தென்றல் உனக்குச் செய்யும் நன்றென்ன
[நடனம் ஏனே

என்றியான் வினவி நிற்க 'ஏவ'யென் றென்னைப் பார்த்து
நன்றாகச் சிரித்த அல்லி 'நவில்வதைக் கேளாய்' என்ன
நின்றேநான் 'சொல்நீ' என்றேன் நெடுங்குர
[லெடுத்துக் கொண்டு
"மன்றமும் வயலுந் தாண்டி மலர்த் தென்றல்
[வருவ தெல்லாம்

என்றன்மே லன்பு கொள்ள இன்பந்தந் தெழிலைச் செய்ய
நின்றவோர் காலிற் நோன்பு நெடுநாளாய்ச் செய்யு மென்றன்
நன்றறி வானைப் போல நண்ணிடுந் தென்ற லென்கோ"
என்றந்த அல்லி சொல்ல "இயற்கையே வாழ்க!" என்றேன்!

நெடுங்குன்றம் விட்டி றங்கி நெளிந்திழிந் தொல்கி வந்து
கொடும்புலி உறும லோடு குரலெடுத் தொலியெ ழுப்பிப்
படும்பொருள் மணிகள் எல்லாம் பரலொலி யாக்கிக் கொண்டு
விடும்படைக் கூட்டம் போல வெள்ளநீர் அருவி வீழும்

வீழ்ந்திடும் அருவி யோசை விழவிடை முழவு தானோ?
ஆழ்ந்திடு பள்ளம் வீழும் அருவியோ பளிங்குக் கோவை!
வீழ்ந்துயர்ந் தாடும் விண்ணீர் வெண்பொரி முத்தின் வீச்சு!
தாழ்ந்திடு நிலத்தி னூடே 'தடதட்'டென் றோசை கூட்டி

வருகின்ற ஆற்றின் போக்கு வளர்தமிழ்ச் செய்யுள் மானும்
பொருகின்ற நீர்க்க ரைமேற் பொலிந்திடும் அகிலும் சாந்தும்
தருகின்ற மணமும் இன்னும் தங்கத்தூள் பிறவும் வாரி
வருகின்ற மங்கை யாறு கடற்கிடு பரிசில் போலும்!

மருங்கினிற் றழைத்து நிற்கும் மாமெலாங் கவரி வீசக்
கருங்கண்ணில் உவமை கூட்டும் கயலினம் போர்க்கூத் தாட
அருந்தமி ழின்பங் கூட்டி யருகிருந் திசையைச் செய்யும்
கருங்குயில் வாழ்த்துப் பாடக் கருமுகில் தன்னைக் கண்டு

தோயிலினை எழுதுந் தோன்றல் தோள்நலங் கண்ட மங்கை
அயிலினைக் கண்து ளித்தே யகமகிழ்ந் தார்த்தல் போல
மயிலினந் தோகைப்பட்டு மகிழ்ந்திட மகிழ்ச்சிக் கூத்துச்
செயுமந்த எழிலைக் கண்டால் சேருமோ வேறே இன்பம்?

புதுவெள்ளம்! ஆ! ஆ!! அங்கே புதுவெண்ணை!
[நுரையின் ஈட்டம்!!
அதுவெள்ளம்! இல்லை! இல்லை!! அருந்தமிழ்
[உணர்ச்சி வெள்ளம்!
மதுவெள்ளம் தேக்கி நிற்கும் மலர்மங்கை வரிசைக் கூட்டம்!
எதுவெல்லும் தமிழின் முன்னே எனுமின்ப வாழ்த்தி னோடே

போர்க்குரல் ஆர்ப்புக் கொண்டு பொங்கிடும் புரட்சி வெள்ளம்
ஆர்க்கின்ற தாங்கே! முன்னர் அணையெனுந் தடையைக் கண்டு
வேர்க்கின்ற வகையில் தாக்கும் வேல்நீரை!
[வாளின் பாய்ச்சல்!!
பார்க்கின்ற பக்கம் எல்லாம் பாய்சுறு மீன்கள் தாக்கல்

என்றவிந்தக் காட்சிகளில் இயற்கை நங்கை
எழில்நடனம் தனியாட்சி புரியக் கண்டோம்
வென்றதமிழ் மறவரெலாம் ஆர்த்தல் போல
விரிகடல்தன் அலைக்கைகள் கொட்டி யார்க்க
மன்றம்வளர் தமிழ்தந்த பொதிகை விட்டு
வையையினில் நீராடிக் கொடியிற் கோதித்
தென்றலென தோன்றுவரும் குளிர்ச்சி செய்யும்
திருவார்ந்த தமிழ்நிலத்தில் இயற்கை ஆட்சி!

நீராடி வருந்தென்றல் ஊரில் உள்ள
நெடுமரங்கள் கிளைகளிலே ஊஞ்சல் ஆடிச்
சீராடி நிற்குமந்தக் கொடிதலைமேற்
சிறுகூத்தே நடத்திவிட்டுத் தாவிப் பாய்ந்து
வேரோடிப் பழுத்தபலாக் கொம்பின் மேலே
விளையாடித் திரிகின்ற மந்திக் கூட்டம்
போராடி நிற்கின்ற காட்சி கண்டு
புன்முறுவல் செய்துவிட்டு மேலே சென்று

ஆற்றோரம் விளையாடி அன்பு கொட்டி
அகத்தினிலே இன்பத்தைக் கொள்ளை கொண்டு
கீற்றொளியில் வெண்ணிலவில் மகிழ்ந்து பாடும்
கிளருள்ளக் காதலர்தம் இடையே புக்கு
மாற்றாத அவர்நெருக்கம் நெகிழ்த்து மேலும்
மடிதனிலே விளையாடி ஆடை தொட்டு
வேற்றாள்போல் நடவாமல் நெருங்கி யுள்ளம்
வேட்டார்போல் உரிமையுடன் பழகி மீண்டும்

வயல்சாய்ந்த செந்நெல்லின் கதிரி டத்தே
வளைந்தாடித் தாளினையும் அசைத்து விட்டு
மயலார்ந்த நோக்குடைய மங்கை யோடே
வருமுழவன் செவியிற்போய் மறைகள் பேசிக்
கயல்பாய்ந்து விளையாடும் குளத்து நீரிற்
கலகத்தை ஏற்படுத்தித் தேன்பி லிற்றும்
இயலார்த மலர்மொட்டின் இதழ்தி றந்தே
இன்பத்தைச் செய்வதை யான் என்ன சொல்வேன்!

முடிப்பு:

உலகத்தில் இயற்கைதரும் எழிலை எல்லாம்
ஓர்ந்துணர்ந்து பாட்டினிலே வடிக்கும் பான்மை
உலகத்து மொழிப்புலவர் கவிஞர் தம்மின்
உயரியல்பாம்; எனவேதான் அன்று தொட்டிவ்
வுலகத்து மொழிகளிலே இலக்கி யத்தில்
உயர்வரிசை அடுக்கிற்று இயற்கை; நந்தம்
கழகத்தில் தமிழ்'இயற்கை' கண்டேன்; பாட்டில்
கருத்தறியேன் பிழைத்திருப்பின் பொறுப்பீர் ஆன்றீர்!

# கற்பின் குழவி மனோன்மணி

இரா. குழந்தைவேலு, எம். ஏ,

அகத்தினை அரும்பிய தமிழிலக்கியப் பொதுமரபு உணர்வு மிக்கவர் பேராசிரியர் சுந்தரனார் ஆவர். இவர்தம் மனோன்மணியத் தகத்துத் தமிழ்க் கற்பியலுக்கு முரணாகாதவகையில் மனோன்மணியது கற்புத்திண்மை அவளைச்சுற்றிக் கதையாகப் பிணைந்து வளர்ந்து விளங்க வரைந்துகாட்டுவர் இக்கலங்கா நிலையின் கற்பு நலத்தைத் தெளிந்து வெளிப்படுத்தற்குப் பேராசிரியர் சுந்தரனார் தம் நாடகப் பாட்டுவளம துரண்டும.

கொடுமையின் எல்லையினை அடைந்து, விழைந்தது எய்த இயலாதவன் குடிலன், அவனது கள்ளமனம் கற்பாரையும் உள்ளம வெதும்பச்செய்யும், அன்புமாறி ஒழுகிச்சென்று வீழ்ச்சியுற்று வாழ்ந்த வாழ்க்கைப்போக்கில் அவனது அழிமன நிலைகளைக் காண்கின்றோம வாழ்வுச் செந்நெறி கல்லாத அக்கடைமகன் தன்மகன் பலதேவனை மனோன்மணி மணந்து விளங்கத் தன்னுள்ளத்துள் வழியினைக் கண்டுவைத்தான். இஃது ஊரறிந்த உண்மை என்பது,

"குடிலன் படிறன்; கொற்றவன் நாடும்
முடியும கவர்ந்து மொய்குழல் மனோன்மணி
தன்னையும் தன்மகற்கு ஆக்கச் சமைந்தான்"
(III, ii, 133–35)

என முன்னரே உணர்ந்திருந்த உழவர் ஒருவர் சொல்லுதலால் தெளிவுபடும். அவன் சீவகனையும,

"ஒருமொழி மனோன்மணி உடன்கேட்டிஃதோ
வருகுதும அதற்குள் வதுவைக்
கமைக்குதி அவற்றை அமைச்சரேறே"
(IV, v, 356–58)

எனத் தன் நீடித்த காமக் கருத்திற்கு மறுத்துரைக்காது இணங்கி நிற்கச் செய்யலானான்,

இந் நிகழ்வினை அடுத்து,

"என்மனப் படியெது? எனக்கொரு மனதோ?
எந்தையின் மனப்படி என்மனப் படியே"
(V, ii, 95–96)

என்று மனோன்மணி மொழிய

"ஐயோ! இத்தகையப்
பெருந்துயர்க் கெங்ஙனம் இசைத்தனை என்க"
(V, ii, 101–102)

என்று அவளை நோக்கி வாணி மிகவும் இரங்கினள் இதனைக் கற்குங்கால் மனோன்மணி தன் தந்தையாரின் எண்ணத்திற்குக் குறுக்கீடின்றி மனம் பொருந்த உடன்பட்டாள் என்பது தோன்ற வாய்ப்பு உண்டு

இங்கு நெஞ்சில் பிறக்கும் எண்ணத்தோடு,

"கண்ணால் எங்ஙனங் காணுவன் ? கண்ணுளார்"
(III, iii. 23)

"எண்ணவும் படாஅர்! எண்ணுளும் உளாஅர்!"
(III, iii, 25)

"இதுவென வொண்ணு உவமையி லொருவரை
எத்திற மென்றியான் இயம்ப!"
(III. iii. 27-28)

என இவ்வாறு தோழிக்கு அறிவிக்கும் மனோன்மணியும்,

"பேரிலா ஊரிலாப் பெரியோன் அவன்றான்
யாரே ஆயினும் ஆகுக"
(V, ii. 152-153)

என்னும் தொடரால் வாணி குறிக்கும் புருடோத்தமனும் கண்ணொடு கண்களை நோக்காது நட்பாங்கிழமை வழிப்பட்டனர் என்று மனோன்மணியம் ஊட்டும் குறிப்பையும ஒத்துக்காண முயலல்வேண்டும இவ்வுடன் நோக்கில் 'ஒருவன்' (புருடோத்தமன்) தன் நெஞ்சில் புகுதற்கு இடங்கொடுத்து அவனிடத்து உள்ளத்தைப் போக்கிக் காதல் நிறைந்த மனோன்மணி அயலான் பலதேவனை மணந்து கொள்ளுதற்கு இயைந்ததில், தமிழ்க்கற்புப் பிழைபாடு எய்திற்று என்ற கருத்துப்படுதல் எளிது. இஃது ஈண்டு நினையத்தகும் சிக்கலாகும். எனினும், கூர்த்துக்காணின் தமிழ் நெஞ்சிற்கு வெம்மையை விளைக்கும் வழுவன்று என்பது வலியுறும்

பலதேவனுக்கு மனோன்மணியை வரைந்துகொடுக்கக் குடிலன் மொழிக்குச் செவிசாய்த்தலின். சீவகனார் தவறு உடையரோ? என்பது தொடக்கத்து எண்ணுதற்குரியது. மனோன்மணிக்கு அம்மையும அப்பனும் சீவகனாரே ஆவர் அவர் தம் மகள் பிறனிடத்து உள்ளத்தைப் பறிகொடுத்தவள் என்ற உண்மை உணராதவர். அவளது உள்ளக்களவு ந டையை அறியும வாய்ப்பும் அவர்க்கு அரிதாயிற்று. அங்ஙனம் சீவகனார், மனோன்மணியின் உள்ளம பிறன் ஒருவன்மேல் சென்றதனைத் தெளிந்திருப்பின், குடிலனுக்கு ஒப்புதல் அளித்திரார்; தாம மானமுடைய தந்தை என்பதனைக் கருத்திற்கொண்டு குடிலனது சொல்லைத் தட்டிக்கழித்திருப்பது உறுதி

"விருமபிய தென்னென் றுரைக்கில் விசும்பின்
அரும்பிய அம்புலியாயினுங் கொணர்வன்"
(I, iv, 3-4)

எனச் சீவகனார் மொழிந்துள்ளார் என்பதனால் மனோன்மணியிடத்து அவர்க்கு வளர்ந்தோங்கிய நல்லன்பை அறியலாம் எனவே

"தாதா அன்பு போதா தாகுங்
காலங் கன்னியர்க் குளதெனும் பெற்றி
சாலவும் மறந்தனை போலும; தழைத்துப்
படர்கொடி பருவம அணையில், நட்ட
இடமது துறந்துநல் லின்ப மெய்த
அருகுள தருவை யவாவும. அடையின்
முருகவிழ் முகையுஞ் சுவைதரு கனியும்
அகமகழ்ந் தளிதது மிகவளர்ந் தோங்கும்;
இலையெனில் நலமிழந் தொல்கும்"
(I, iv, 178-182)

என்று சுந்தர முனிவர் வெளிப்படுத்திய தந்தையின் கடமையினை ஆழ ஊன்றி நினைந்தமையால், பருவமெய்தி மிகநலம—மிக்க அழகு—வாய்ந்த மனோன்மணி தனிமையாக வாழ்ந்து மூத்துப் போதல் பழிப்புக்கு இடனாகும் என்பதனை உட்கொண்டு அவளது திருமணத்தை நாட்கடத்தாது முடித்துக்காட்ட முன்வந்தாராதல் வேண்டும ஆதலான், சீவகனாரிடத்துத் தவறு இல்லை என்பது புலப்படும்.

மனோன்மணி தன் உயிர்த்தோழி வாணிநல்லாளைப் பெரிதும் மதித்தாள் அங்ஙனமே,

"பேரிலா ஊரிலாப் பெரியோன் அவன்றான்
யாரே ஆயினும ஆகுக, அவனை நீ
அணையுநாள் அடியேன் மணநாள்· அன்றேல்
இணையிலா உன்னடிக் கின்றுபோல் என்னும்
பணிசெயப் பெறுவதே பாக்கியம எனக்குக்
கடமையும பிறவும கற்றறி யேன்விடை
மடமையே ஆயினும மறுக்கலை மணியே!"
(IV. ii, 152-158(

என்று வாணி சொல்லிய மனமாசற்ற உயரிய அன்புத்தகுதியினைக் காதுகொடுத்து உணர்ந்து மனோன்மணி வியந்தாள் என்ற சிறப்பையும இந்நாடகத்துள் காணலாம. இத்துணை நல்லுணர்ச்சியொடு வாழ்ந்த வாணி, மனோன்மணியின் உள்ள ஒளிப்பைச் சீவகனார்க்கு அறத்தொடு நிற்றல் என்னும நெறியில் அறிவுறுத்திக் கற்பு வழியாக்கும் பொறுப்பில் தவறியது குற்றமே என்ற மயக்க எண்ணம் எழலாம். இங்கு,

"என்பா டிருக்க! யாவரு மறிவார்"
உன்பா டதுவே ஒருவரு மறியார்"
(III, iii, 32-33)

என்று, மனோன்மணி ஈருடல் ஒருயிராய் நின்ற தனக்கும் அறவே எதனையும் மறைத்துவிடும் திறத்தை வாணி நயமுறச் சொல்லி அமைதிபெறுதல் நம் நினைவுககுரியது.

மனோன்மணியது இன்ப இல்வாழ்வில் நாட்டங்கொண்ட வாணிக்கு எதனையும் ஒளிவு மறைவின்றி அவள் வெளிப்படுத்தாதது போன்றே தன் தோழி அறத்தொடு நிற்றலை மேற்கொள்ளற்கும் உடன்பாடு நல்கவில்லை. ஆதலான். மனோன்மணியின் இல்லறப் பொறுப்புக்கு வாணி வழியைத் தேடி இணைக்க வாய்ப்பு வாயாதவள் எனக் கொள்ளலாம் எனவே, வாணி தவறு இலளாவாள். தோழியின் நட்புரிமைக்கு,

> " அறத்தொடு நிற்குங் காலத் தன்றி
> யறத்தியன் மரபிலள் தோழி யென்ப"
> (தொல். பொருள். பொருளியல், II

எனத் தலைவியின் ஒப்புதல் மொழியின்றித் தோழி தானே அறத் தொடு நிற்றற்கு மரபு இடந்தருதலில்லை என்னும் வரம்புணர்த்துவர் தொல்காப்பியனார். ஈண்டு அறியத்தகுவது இது

மனோன்மணி, தன் நாட்டிற்கு முளைத்துச் சூழ்ந்த தீங்கு தீர்தல்வேண்டும் என்னும் நாட்டுப்பற்றினால், சீவகனார் அறியத் தன்னுள்ளத்து உண்மையினைக் குறிப்பினால் அறத்தொடு நிற்றல் வழியில் அறிவுறுத்திக் கற்பினைக் காக்கப் பின்வாங்கிப் பலதேவனை மணக்க இசைந்தாள் என்பது பொருந்துமா? இஃது ஊன்றிக் காணத்தகும் ஓர் ஐயம்.

தன் நெஞ்சில் உறையும் அவனது ஊர் பெயர் ஒன்றும அறியாதும், அவனது வடிவழகினைக் கண்ணால் காணாதும அவள், 'அவர்க்கும் எனக்கும் திருமணம காணுவீராக' எனச் சொல்லப் புகுந்தால், 'உருவம் சுட்ட இயலாத ஒருவனைக் காமுற்றவள் பித்தேறியவளே' என ஊரார் வீணே தூற்றிப் பழிக்க முற்படுவர். ஆதலான், மனோன்மணி தன் கற்பைக் காக்கும் விருப்பொடு இருந் தும், வடிவம் குறிக்கும் வல்லமை இன்மையால் அவளிடத்து நெஞ்சை அள்ளும் அன்பு வாய்ந்த சீவகனாரிடத்தும் தன் மனத்தை மறைத்தாளாதல்வேண்டும் எனக் கூறல் பொருந்தும். கற்புச் சிறப்பினை,

> " உயிரினுஞ் சிறந்தன்று நாணே · நாணினுஞ்
> செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்று"
> (தொல் பொருள். கற்பியல், 23)

எனச் சுட்டினார் தொல்காப்பியனார். ஆதலான், கற்பு இறந்து அழிய நாட்டு நலன் காக்கும் நோக்கொடு மனோன்மணி தன் மண விழாச் செல்வனாகப் பலதேவனைப் பெறுதற்கு முன்வந்தாள் என்னும் மேலைக் கிளைத்த ஐயம்முற்றும் ஒவ்வாது.

சுந்தர முனிவரால் நெறிப்பட்ட மனோன்மணி தன் நெஞ்சை ஒருவழி நிறுத்தும் அறிவுமிக்கவள். ஆதலான், 'ஒருவன்' காதற்கு இலக்கான அவளிடத்து 'அவனை' மணப்பது உறுதி என்னும் உறுதிப்பாடு முற்றிப் பொலிந்தது. அத்தகு தளரா நெஞ்சம் பெரிது சிறந்து நிலைக்க உரங்கொடுத்து வந்தவர் சுந்தர முனிவரே ஆவர்.

"ஒருதனி முதல்வன் உணர்வன் உன்னுளம்
உன்னன் புண்மையேல் இன்னமும் காப்பன்"
(V, iii, 181-182)

எனவரும் நாடகத்தின் முற்றுங்களத்துத் தொடர்களுள், முனிவர் தம் 'இன்னமும் காப்பன்' என்ற சொல்லாட்சியில், மனோன் மணிக்கு அவர் தொடர்ந்து தந்த உள்ளப்பக்குவத்தின் அருமை ஓடுதல் உய்த்துணர்ந்து அறியலாம்.

முனிவர்தம் செவிலிமையால் மனோன்மணியிடத்து உருக் கொண்ட உள்ளக்காப்பால், தன் இயல்பு கடந்து எண்ணத்தைப் பிறர்க்குக் கூறுதலின்றி வாளாவிருந்தாள் என்பது,

"தாய்க்கு மொளித்த சூலோ? தையால்!
வாய்க்கு மொளித்த உணவே? மங்காய்!" (I, iv, 7-8)

எனச் சீவகனும்.

"சொல்ல உன்னியுஞ் சொல்லா தடக்கில்
யாபடுந்துயரம் அறிந்துங்,
காம்படு தோளீ! கருதாய் போன்மே." (I, iv, 28-30)

"முனிவர் பாலுநீ யொளிப்பையே லினியிங்கு
யார்வயி னுரைப்பாய்! ஐயோ! இதுவென்"
(I, ii, 142-143)

எனக் கவலைகொண்ட செவிலியும்,

"தந்தை தேறிடத் தன்துயர் மறைத்து
மகிழ்ச்சி காட்டினள்" (V, ii, 31-32)

எனத் தோழியருள் ஒருத்தியும் மொழியும் பகுதிகள் எடுத்துக் குறிப்பன.

கற்பைக் காக்கும் அடிப்படை நெஞ்சுரங்கொண்டு, அவள் அடைவுச்செம்மையால்—அனுபவ விளக்கத்தால்—கண்ட முடிவின் வழியில் நின்று ஒழுகியபோது,

"வந்தஇச் சுரத்திடை மாண்டதென் சித்தம்" (V, ii, 97)

எனத் தன்னுள்ள இயல்பை மறைக்கும் அறிவுக்கூர்மையும் இவ் வண்ணம் வெளியாகிறது.

கண்டார் வியக்கும்வண்ணம் புத்தாடைகளும், பாண்டி நாட்டி லேயே ஈடும் எடுப்புமற்ற அணிகலன்களும் அணியும் வாய்ப்புப் பெற்ற செல்வ மகள் மனோன்மணி. அவள் அவற்றைப் புறக் கணித்து, முன்னை ஒருநாள் கண்ட கனத்திறத்துக் காமநோய்ப் பெருக்கு வருத்தியபோது மார்பிற் கிடந்த முத்துமாலையினையும் அணிந்திருந்த ஆடையினையும் மன்றல் நெருங்குங் காலத்தும்

அணிந்தாள்; ஆடியில்—கண்ணாடியில் அவற்றைத் திருத்தி இனி திருந்தாள் என்னும் சூழலே.

"எழுந்து வாசநீ ராடி முன்சுரத்
தழுந்திய அன்றுதரன் அணிந்தவெண் பட்டினைக்
கொடுவரப் பணித்தங் கதுவே தரித்து
நெடுநுதல் திலகமும் நேர்படத் தீட்டி,
அன்றிரா அணிந்தமுத் தாரமும் அணிந்து,
நின்றுதன் நிலையெலாம் ஆடிமுதல் நோக்கி,
நன்றே நங்காய்! வாணி! நவிலுதி!
அன்றுபோல் அன்றோ இன்றென் நிலைமை
என்றுசிறுமுறு வலித்தனள்" (V. ii, 70-78)

என்று தோழி ஒருத்தியின் வாய்ச் சொற்களில் பேராசிரியர் சுந்தரனார் அமைத்துக் குறிப்பிடுவதால், அவளுடைய நெஞ்சக் காப்பில் பழுத்த நம்பிக்கை ஒளிதாங்கிய நிலை பெறப்படும்.

நட்புரிமையால் நெருங்கிப் பழகி, மனோன்மணியைக் கூர்ந்து நோக்கி ஆராய்ந்து, அவளது நிலைகொண்ட நம்பிக்கை நிரம்பிய நெஞ்சத்தின் உண்மைக் குறிக்கோளுணர்ச்சியினைத் துணிந்து, அந்த முடிவை

"உன்மனப் படியெலாம் உறுங்காற் காண்கும்." (V, ii, 94)

என்று வாணி குறிப்பாக விளங்க உறைத்தாள். இங்கு, வாணி புறப் படுத்திய மனோன்மணியின் உட்கருத்தையும் நாம் நினையவேண்டும்.

இங்ஙனம், பேராசிரியர் சுந்தரனார், கற்பொடு பிறந்து பிறன் நெஞ்சுபுகாத மனோன்மணி தன் கனவுக் காதலன் புருடோத் தமனொடு,

"ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப"
தொல். பொருள், களவியல், 2)

என்னும் நெறியில் மணம் எய்திய நல்வாழ்வை,

"இறும்பூ திருவரும்
ஒருவரை ஒருவர் உணர்ந்தமை!
(மனோன்மணி திடுக்கிட்டு விழிக்க)
வெருவலை! மணியே! பிரியீர் இனியே"
(V, iii, 231-233)

என்ற சீவகனார் தம் இன்பமொழியில் வைத்து, அவளது கற்பை வெளிப்படுத்துவர். இவையெல்லாம் நினையுங்கால், நாடகப் பேராசிரியர், மனோன்மணியின் கற்புத்திண்மைக்கு வழுவு வாராது வகுத்து, அவளது கற்புக்காப்பை நாடகத்தின் உயிர்க்கூறாக வடித்து வழங்கிய தனித்திறத்துள், தமிழ்க்கற்பு என்னும் அன்னையார் ஈன்ற மகள் மனோன்மணியாவாள் என்பது சிக்கல் அறுபட்டுத் தெளிவுபடும்.

# வெண்பாவின் ஓசையும் தளையும்

ந. மு. கோவிந்தராய நாட்டார்

ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி, எனப்பாவகை நான்கெனக் கூறிய ஆசிரியர் தொல்காப்பியனார், அப்பாக்கள் இயலுந்திறம் நோக்கி, வஞ்சி, ஆசிரியத்திலும், கலி, வெண்பாவிலும் அடங்கும் எனக்கூறினார். எனினும் அவற்றிற்குத் தனித்தனி ஓசை கூறினமையின், பாவினுக்கோசை இன்றியமையாத தென்பதனை உய்த்துணரவைத்தார்.

"அகவலென்பதாசிரியம்மே" என்ற நூற்பாவால் ஆசிரியத்தின் ஓசைகூறினார். இதற்குப் பேராசிரியர், "அகவிக்கூறுதலான் அகவல் எனக்கூறப்பட்டது. அஃதாவது கூற்றமும் மாற்றமுமாகி ஒருவன் கேட்ப அவற்கு ஒன்று செப்பிககூருது தாம் கருதியவாறெல்லாம் வரையாது சொல்லுவதோர் ஆறுமஉண்டு. அதனை வழக்கின் உள்ளார் அழைத்தல் என்றும் சொல்லுப. அங்ஙனம் சொலலுவார் சொல்லின்கண் எல்லாம் தொடர்ந்து கிடந்த ஓசை அகவல் எனப்படும்" என விளக்கம் கூறினார்.

"அஃதன் றென்பவெண்பாயாப்பே" என்ற நூற்பாவால் வெண்பாவின் ஓசையை ஆசிரியர் கூருது கூறினார். இன்னணம் வாளா கூறினமையின் உரையாசிரியர், மொழியாததனை முட்டின்றி முடித்தல் என்னும் உத்தியால் "வெண்பாவாக யாக்கப்பட்டது அகவலோசையன்று என்றவாறு" எனவே அகவுதலில்லாத ஓசையாம். இதனைப் பிற நூலாசிரியர் செப்பலோசை யென்ப அகவுதல் என்பது ஒரு தொழில். அத்தொழில் இதன்கண் இல்லாமையின் "அஃதன்று என்றார்" என விளக்கினார்.

கலியின் ஓசையை "துள்ளல் ஓசை கலியென மொழிப" என்ற நூற்பாவால் கூறினார். உரையாசிரியர், "துள்ளுதலாவது ஒழுகு நடைத்தன்றி இடையிடை உயர்ந்து வருதல்; கன்று துள்ளிற்றென்றாற்போற்கொள்க" என இதற்கு விளக்கம் கூறினார். வஞ்சியின் ஓசையை ஆசிரியர், "தூங்கல் ஓசை வஞ்சியாகும்" என்ற நூற்பாவால் கூறினார். உரையாசிரியர் "தூங்கலாவது அறுதியற்ற ஓசைத்தாகிவரும் வஞ்சி என்றவாறு" என இதனை விளக்கினார்.

இனி இவ்வோசை விகற்பங்களுக்கு எமது விளக்கம் இன்றியமையாததர்கின்றது. அகவலோசையாவது ஒருவன் உரை நடையிற்பேசாது பாவின்நடையால் ஓசை நயம்பெறப் பேசுவதேயாகும். தூங்கல் என்னும் வஞ்சியின் ஓசை இதன் நீட்டமேயாகும். தூங்கல் என்னும் சொல் இப்பொருட்டாதல் "தூங்குக, தூங்கிச் செயற்பால" என்னும் குறளுரையால் உணர்க. கலியின் ஓசை துள்ளலாயினும் கலித்தளையுடன் இயற்சீர் வெண்டளை, வெண்சீர்

வெண்டளை முதலியன விரவி வருதலால் யாண்டும் ஒரே படித்தாய் துள்ளலோசை வருமெனக்கோடல் பொருந்தாது. வெண்பாவின் ஓசையை "அஃதன்றென்ப" என்றமையால் மக்களின் பேச்சு வழக்காற்றில், அகவல் ஒழிந்த பிறவாக்கியங்களாக வரும் வினு விடை, விளி, வியங்கோள் ஆகியவற்றின் ஓசையென உயத்துணர வைத்தார் ஆசிரியர். ஆதலின் செப்பலோசையாவது வினுவும் விடையும்போலவும், விளியும் வேண்டுகோளும் போலவும் வெண்பாவில் இயன்று வரும் ஓசையெனக் கொள்ளவேண்டும். வெண்பா ஒன்றனைப்படிக்குங்கால், முதலடியினை எடுத்தும், இரண்டாம் அடியினைச்சிறிது படுத்தும், தனிச்சீரைத்தனியாக நிறுத்தியும், மூன்ரும் அடியினை மறுபடியும் எடுத்தும், ஈற்றடியினைப்படுத்தும் ஓசை சென்று தேய்ந்திறுவதுபோல முடித்தல்வேண்டும் என்பர் கற்றறிந்தமேலோர். குறள்வெண்பாவின் ஓசை ஈற்றடி இரண்டையும் ஒத்ததே. முழுதும் இயற்சீர் வெண்டளையான் வரும் வெண்பாவின் ஓசையைத்தூங்கிசைச் செப்பல் என்றும், வெண்சீர் வெண்டளையான்வரும் வெண்பாவின் ஓசையை ஏந்திசைச் செப்பல் என்றும், இருதளையும் விரவி வரும் வெண்பாவின் ஓசையை ஒழுகிசைச்செப்பல் என்றும் காரிகை முதலிய நூல்கள் கூறும். வெண்பாவிலக்கணம் முழுதும் பொருந்த யாகசப்பெற்ற ஒரு வெண்பாவில் யாதானும் ஓரிடத்தில் செப்பலோசைகுன்றின் அவ்வெண்பா குற்றமுடையதேயாம். இக்குற்றத்தினை அகற்ற ஓசைகுன்ரு வண்ணம் பொருந்தும் வழியால வகையுளிப் படுத்தல் வேண்டும்.

அசையுஞ் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தல் வல்லோர் ஆறே.

இந்நூற்பா, பாவின் ஓசை கெடாது வகையுளிப்படுத்தும் முறையினை விளக்குகின்றது. இதற்கு உரையாசிரியர் நேரிய உரை கூறினுரேனும் தளைகெடாது வகையுளிப்படுத்தும் முறையையே மேற்கோள் காட்டி விளக்கியுள்ளார். அம்மேற்கோளும் முழுதும் பொருத்தமுடையதன்று தளையுடன் ஓசையுங்கெடாது வகையுளிப்படுத்த வேண்டுமென்பதே பொருந்திய உரையாகும். ஏனெனில் தளையுஞ் சீரும் கெடாதவழியும் ஓசை கெடும் இடனுண்டு. உரையாசிரியர் உரை வருமாறு :

"அசையையும் சீரையும் ஓசையொடு சேர்த்திப்பாகு பாடுணர்த்தல் வல்லோர்கள் நெறி யென்றவாறு. அஃதாவது பொருளொடு சொல்லை யறுத்தவழித் தளையும் சீரும் சிதையின் அவ்வழி ஓசையை நோக்கி அதன் வழிச் சேர்த்துக என்றவாறு. அது வருமாறு .

மலர்மிசை ஏகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்

என்றவழி வாழ்வாரெனப் பொருணேக்கிச் சீராமாயின் ஓசை கெடும். அதன்கண் 'வாழ்' என்பதனை முதனின்ற சீரோடொட்டக் கெடாதாம். பிறவுமன்ன."

இவ்வுரையின்கணுள்ள குறை வருமாறு :

நீடு வாழ்வார் எனப் பிரித்தெழுதின் தளையும் ஓசையும் கெடல் மாத்திரமன்றி ஈற்றுச்சீர், நாள், காசு, மலர், பிறப்பு ஆகியவற்றுள் ஒன்றன் வாய்ப்பாட்டல் முடியாதும் போகும். இனி, தளையும் சீரும் கெடாத வழியும் ஓசை கெடும் இடனுண்டு என்பதனை விளக்குவாம்:

கூவிளங்காய் அல்லது கருவிளங்காய் வாய்பாட்டு வெண்சீரின் இடைநின்ற அசையில் குறுகுந்தன்மையுடைய ஐகாரந்தவிர்த்த ஏனை நெடில் குறிற்பின் வரின் செப்பலோசை சிதையும், இதன் உண்மையினை, திருக்குறளையும் பண்டைப் புலவோர் யாத்துள்ள வெண்பாக்களையும் சோதித்தறிக'

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார் நின்று

என ஒரு குறள் யாக்கப்பட்டிருப்பின் அதன்கண் நீடுவாழ்வார் நின்று என்னும் இரு சீரையும் சேர்க்கின்ற தளை கெடாதிருப்பது வெளிப்படை. ஆயினும் இடையசையில் குறிற்பின் நெடில் வந்தமையால் செப்பலோசை சிதைந்ததென உணரவேண்டும். இன்னவாறான வேறுபாடுகளையெல்லாம் 'உபதேச முறைமையான் உணர்க,' என யாப்பருங்கலக்காரிகை வலியுறுத்தும்.

திருக்குறளின் உரையாசிரியர்கள் காலத்திற்கு முன்பிருந்தே

ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்

என்னும் குறள் இன்னணம் தவறாக எழுதப்பட்டு வந்துள்ளது. ஆசிரியர் திருவள்ளுவனார் இதனை இவ்வாறெழுதியிரார் என்பது திண்ணம்.

ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரிவளங் குன்றியக் கால்

என்றே எழுதியிருப்பார். இதனை அறியாத பரிமேலழகர் "குன்றியக் கால்' என்பது குறைந்து நின்றது" என இலக்கணம் கூறினர். இச்செய்யுள் விகாரம் 'மருடீர்' விகாரமாமோ? ஆகாதென்றே உறுதியாய்க்கூறலாம். வெண்பாவைப்படிக்கும் முறையில் இதனைப் படித்தால் வளங்குன்றிக்—கால் என இருசீரும் சேருமிடத்து ஓசை சென்று தேய்ந்திறுது செப்பலோசை சிதைவதனை யறியலாம். அன்றியும் வளங்குன்றிக்கால் என்பது வழுவாகும். கால் என்னும் விகுதியோடு கூடிய பிற வினையெச்சங்களை ஒப்புநோக்குக. ஆடியக்கால், பாடியக்கால், செப்பியக்கால் என்றசொற்களை ஆடிக் கால், பாடிக்கால், செப்பிக்கால் என்று செய்யுளிலுங் குன்றல் விகாரமெனக்கொண்டு எழுதலாகுமோ? திருக்குறள் முழுதும் சோதித்துப்பார்த்து இதன் உண்மையறிக. செப்பலோசை கெடா வண்ணம்' வகையுளிப் படுத்தலறியாதவர் திருவள்ளுவர் என்று யாரே கூறவல்லார்!

# மக்கட் பேறு.

சித்தாந்தச் செல்வர் அ. தா. ப. திருஞானசம்பந்தன்

கலைகள் பலபயில்வான் பெறும்பேறு புலமை; பன்னெடுங் காலம் தவமியற்றுவோன் பெறும் பேறு முடிவிலாற்றல் பெற்ற ஞானம்; பெரும் பொருளை முதலீடு செய்து வாணிகம் செய்வான் பெறும் பேறு இலாபம். அங்ஙனே, வாழ்க்கைத்துணை கொண்டு, பழியற்ற வில்லறம் நடாத்தலின் உரிமைப் பேறு மக்கள். எவ்வளவு செல்வம் படைத்தவனாயினும், ஒருவன் வாழ்க்கையில் மக்கட் பேறில்லை யென்றால், கவலையில் மீதூர்கின்றான். நல்ல வீட்டிற்கணி விளக்கா யமைகின்றவர்கள் மக்கட் செல்வங்களே! மக்களற்று வாழ்வோர் வாழ்க்கையினருமை பெருமையை யுணராராகின்றனர். மக்களே யொரு நாட்டி னெதிர்கால சொத்தாவர். சொத்தைப் பேணுவது பெற்றோர் கடன். சிறப்பாகத் தமிழகமென்றும் நன் மக்களைப் பெற்று, வீரமுள்ளவர்களாக வாழ்க்கையிற் கண்டு வுய்தி பெற்றிருக்கின்றது.

புறநானூற்றுச் செய்யுளொன்றை நோக்குங்கள். தான் பெற்ற மகன், படையழிந்து மாறிச் சென்றனனென்று பிறர் கூறக் கேட்ட வீரத்தாய், தன் மகன் பாலுண்ட முலையை யறுத் தெறிவதற்காகப் போர்க்களம் நோக்கிச் செல்கின்றாள்; சென்று வாங்கு வீழ்ந்து கிடக்கும் பிணங்களை யெல்லாம் தன் மென்கைகளால புறட்டிப் பார்த்து, தன் மகன் வீரத் துறக்க மெய்தினன் என்பதை யறிந் தவனைப் பெற்ற நாளினும், அவள் மனம் பெரிதும் மகிழ்ந்தது.

"நரம் பெழுந்துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்று கூற
மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
முலையறுத்திடுவேன் யானெனச் சினைஇக்
கொண்டவாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்து டலருகிய
ஈன்ற ஞான்றினும் பெரி துவந்தனளே."

— புறம் — 278

உலகத்தையே கட்டியாளும் பெருஞ்சத்தி படைத்த வய்யோத்தி மன்னனை தயரத னணிமுடி சூட்டி யறுபதி னாயிர மாண்டுகள் சிறக்க வாண்டா னென்று கம்பராமாயணம கூறுகின்றது. இத் தகைய மன்னனுக்கு வெல்லா பேறுகளும் கிடைத்திருந்தும் மக்கட் பேறின்றி மனம வருந்தினான். ஒன்று மற்றவன் முதற்கொண்டு, வுப்பரிகையி லொய்யாரமாகத் தங்கள் காதல் வெள்ளத்துடன் கூடல் செய்பவர்கள் வரையில் பிள்ளைப் பேற்றிற்குப் பெருந்தவம் இயற்று கின்றார்களென்னின், அரச செல்வ சிறப்பு பெற்ற மன்னனுக்கு

வப்பேறில்லை யென்பதற்கு வருத்தம் தோன்றுமற்போமோ? மன்னன் வருத்தத்தை வசிட்ட முனிவரிடம் கூறினன். அச்செய்யுளை யீண்டு கண்டுணர்வாம்.

" அருந்தவ மன்னரு மந்தணாளரும்
வருந்துத லின்றியே வாழ்வின் வைகினர்
இருந்துய ருழக்குநர் என்பினெனன்பதோர்
அருந்துயர் வருத்துமெ னகத்தை யென்றனன் "

— கம்பர் — திருவவ — 4:

வசிட்ட முனிவர் துயரத்தை யுணர்ந் தாற்றினர்; தேற்றினர். அதற்கொரு வழியையும் வகுத்தளித்தார்: பிள்ளைப்பேறு பெறுதற்கு வேள்வி செய்ய வேண்டு மென்றும், அவ்வேள்வியை நிகழ்த்தக் கலைக்கோட்டு முனிவரை யழைக்க வேண்டுமென்று வசிட்டமுனி கூற வருமாறு செய்தி சொல்லி யரச மாளிகைக்கு வரவழைத்தான் தயாதன். உரோமபதனென்ற தேர்ப்பாகன் கலைக்கோட்டு முனிவரை யழைத்து வந்தான், வேள்விக்கு வேண்டுவன சேர்ந்தமைக்க, முனிவரும் வேள்வி தொடங்கினர், அவ் வேள்வியின் பயனால் பிண்டமொன்று வுருவாயிற்று அப் பிண்டத்தைத் தயரதன் மனைவியர் மூவரு முண்டனர். அதன் பலனாக கோசலையின் மணி வயிற்றில் திருமால் தோன்றினர். பெரு மகிழ்ச்சியிற்றிளைத்தான் மன்னன்.

மைந்தரில்வாக் குறையைத் தயரதன் நவிலல்.
" உலப்பில் பல்லாண்டெலாம் உறுக ணின்றியே
தவப் பொறை யாற்றினேன்; தனையர் வந்திலர்
அலப்பு நீருடுத்த பாரளிக்கும் மைந்தரை
நலப்புகழ் பெற, வினி நல்க வேண்டுமால். "

— கம்பர் — திருவவ — 79.

கோசலை வயிற்றில் கரிவண்ணன் தோன்றல்.
" ஒரு பகலுல கெலா முதரத்துள் பொதிந்து
அரு மறைக் குணர் வரு மவனை யஞ்சனக்
கரு முகிழ் கொழுந் தெழில் காட்டும் சோதியை
திருவுறப் பயந்தனன் திறங் கொள் கோசலை. "

— கம்பர் — திருவவ — 101

இனி, நள மன்னன் பிள்ளைகள்பால் கொண்டிருந்த காத லெத்தகையதென்பதை யறிவோம். காரிருளில், கானகத்தில் கைவிடுகின்றான் காதல் வெள்ளமான தமயந்தியை நள மன்னன்; கலியின் விளைவாற் சூதாடி நாடு, நகரம், அனைவற்றையும் தோற்று விட்ட மன்னன் தன் தேவியுடனும், மக்களுடனும், கானகமேகு கின்றான். அக்கானகத்தின் கொடிய தன்மையை மன்னனைத் தவிர, தேவியறிந்ததில்லை. அத்தோடு மக்களையும். தன்னுடன் கானகத் தில் வைத்துக்கொள்ள விரும்பாதவனாய், தமயந்தியின் தந்தை வீமன் திருநகர்க்குச் செல்லுமாறு வழியனுப்புகின்றான் மன்னன்.

நளன், தன் மக்கள் வாடுவரே வெங்காட்டிலென்ற சிந்தை நொந்து காட்டிடை விட்டு நாட்டிற்குச் செல்லுமாறு வனுப்புகின்ருன். எனின், மக்கள்மேல் மன்னன் பூண்ட காதல் அளவிடற்பாலதாமோ!

இனி வெண்பாவைக் காண்க!

''பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடி
சில், புக்களையுந் தாமரைக் கைப் பூநாறுஞ்
செய்யவாய், மக்களையிங் கில்லாதவர்.''

—நளவெண்பா-கலி-237.

தமயந்தி நளனைவிட்டு நீங்கித், தன் தந்தையின் திருநகர்க்குச் சென்ற பின், காட்டினுள் காகுத்தன், நளனைத் தீண்டுகின்றது. மன்னன் வேற்றுரு கொண்டு, சிலகாலம் காட்டிற் கழித்துப் பின்னர், வீமன் திருநகர்க்குச் சென்று, அவ்வரசனிடம் படைத் தொழிலும், தேரோட்டுந் தொழிலும் பூண்டு, தன்னை யாரெனக் கூருமல், வாழ்ந்து வரலானன் இன்னணம். வாழுநாளில், தமயந்தி மடைத்தொழில்புரியும் வேற்றுருக் கொண்ட வப்பாகனருகே விளையாடவிட்டு, அவன் செய்கைகளை யறியும்படிச் சொல்லினள். அங்ஙனம், ஆடுவதைக் கண்ட நள மன்னன், மனநடுங்கி வெந்துயரெய்தி 'மக்களே! என் மக்கள் போல்கின்றீர்; யார் மக்கள் நீங்கள்' என வினவுகின்ருன். அதைக் கேட்ட மக்கள் நிடத நாட்டு மன்னனின் மக்கள் தாங்களென்றும், அம்மன்னன் தன் அன்னையைக் கானில் விட்டேகினனெனவும், இந்நாட்டில் நாங்களுள்ளோம்; எங்கள் நாட்டை வேற்று மன்னனுள்கின்ருன் எனவும், கூறக் கேட்டான நளன். இவ்வுரைகளைக் கேட்ட மன்னன், ஒன்றுந் தோன்ருமல் சோர்வை யடைந்து, கண்ணீரை யுதிரச் செய்து வுடம்பைவிட்டு நீங்கமாட்டாத வுயிருடன் நின்ருன்.

''மக்களைமுன் காணு மனநெடுங்கா வெந்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காணீர்
என்மக்கள் போல்கின்றீர் யார்மக்க ளென்று
ரைத்தான் வன்மக் களியானை மன்.''

—நளவெண்பா—376.

'மன்னனிடதத்தார் வாழ் வேந்தன் மக்கள்யாம்
அன்னை தனைக் கான்விட்டவனேக—இந்
நகர்க்கே, வாழ்கிரு மெங்கள் வளநாடுமற்
ருெருவன், ஆள்கின்ரு னென்ரு ரழுது.''

—நளவெண்பா—377.

"ஆங்கவர் சொன்ன வுரைகேட்டழி வெய்தி
நீங்கா வுயிரோடு நின்றிட்டான்—பூங்காவில்
வள்ளம் போற் கோங்கு மலருந் திருநாடன்
உள்ளம் போற கண்ணீருகுத்து,''

—நளவெண்பா—378.

நன் மக்கட் டோன்றல், நற்றவத்தினுல் தானென்பதை நன்கு நூல்கள் விளக்கிக் காட்டுகின்றன. நம்பனடிகளைத் தொழும் நன்னெஞ்சும், அவனை வாயார வந்தித்து வழுத்தும் நன்னுவும் பெற்றூர்க்கு, நற்பேறு கிடைத்த வுறுதியென்பதைச் சமயநூல் வல்லார் புலப்படுத்தியுள்ளனர் பெரிய புராணத்தில் தெய்வச் சேக்கிழார், சிறுத்தொண்ட நாயனுர் புராணத்தில், பரஞ்சோதியாருக்கும், வெண்காட்டு நங்கைககும் தோன்றிய சீராளரைப் பற்றிக் கூறுங்கால் எவ்வளவு பெருமை புலப்படுமாறு கூறுகின்ரு ரென்பதை யுன்னுங்கள்.

சடைமுடியா னருள்பெற்றும், நிறை தவத்தினுலும், பேராளருக்குச் சீராளர் தோன்றினுரென்று தெய்வச் சேக்கிழார் கூறலுறுகின்ருர். தவத்தான் பெற்று சிறப்பது முடிந்த பேரின்பம் அங்ஙனே, பேராளருக்குத் தவத்தின் முடிவாயில்லறத்திற்ருேன்றிய பேரின்பமே சீராளர். இதைச் செய்யுள் முகத்தானுணர்தல் நன்றே!

"நீராருஞ் சடைமுடியா ரருளினு னிறை தவத்துப்
பேராள ரவர்தமக்குப் பெருகுதிரு மனை யறத்தின்
வேராகி விளங்குதிரு வெணகாட்டு நங்கைபாற்
சீராள தேவரெனும் திருமைந்த ரவதரித்தார்"

—பெரியபுரா-சிறுத்-19.

மகப்பேற்றை மக்கள் பெரியதாக மதிக்கின்றனர். மாநில மானு மரசனும் மகப்பேறின்றேல் மனங் கலங்குகின்ருன். கடம்பவனம் நிறைந்த மதுரையம்பதியை, வடசொற் கடலையும், தென்சொற் கடலையும் கடந்து, மனுவழி நின்று. செங்கோலோச்சிய புனிதன் மலையத்துவச பாண்டியன், சூரசேனன் மகள் காஞ்சனையை மணம் புரிந்து வாழலானுன். எண்ணில் பல்நாட்கள் மகப்பேறின்றி, அப்பேறில்லாத வறுமை யெய்தியவனுய்த், தானறங்கள் பல புரிந்து. புண்ணியம் நிரமபிய பரிவேள்வி யியற்றினுன். அவ்வேள்வி நிகழ்த்தியதின் விளைவால் தோன்றியவரே தடாதகைப் பிராட்டியாவர். இதனுல் நாமுணர்வதென்னெனின், எம்மானை நோக்கிப் பத்திபூண்டு தவமியற்றுதலினுல் நற்பேறு பெறுவோமென்பதாம். பரஞ்சோதியார் மன்னனைக் கூற வருங்கால் "கண்ணுதலை முப்பொழுதும், வந்து பணி கற்ருேன்" என்று நயம்படப் பெரும் பொருளமைத்துக் கூறுகின்ருர். 'பணி செய்தல் அன்றி புரிதல்" என்பது உடலுறுப்புக்களின் துணையால் செய்வதாகும். மாருக 'பணி கற்ருேன்" என்றீண்டு கூறப்படுவதின் காரணம், கண்ணுதற் பெருமானைக் கண்டு வெளிப்பட பணிவதோடமையாமல், சிந்தை திருந்திய வவனை யுணரும் சீர்சாற் கல்வியும் பயின்றிருந்தோன் மன்னனென்பதைக் கூறுவான் வேண்டியே முனிவர் "பணி கற்ருேன்" என்றியம்புகின்ருர், மலையத்துவசன் இறையருட் கல்வியிற் ருேய்ந்தவனதனுல் மக்கட்பேற்றையும் பெற்ருனென்பது நன்கு புலனுகின்றது.

"கண்ணுதலை முப்பொழுதும் வந்துபணி கற்றோன்,
எண்ணில்பல நாண்மக விலாவறுமை யெய்திப்,
பண்ணரிய தான தரு மம்பலவு மாற்றிப்
புண்ணிய நிரம்புபரி வேள்விபுரி குற்றான்."
—திருவிளை-தடாதகை-4.

நன்மக்களைப் பெற்றெடுக்க நற்றவ வேள்வியும், தவமும் புரிந்துள்ளனர் மக்களும், மன்னர்களும். நற்றவத் தோன்றல்கள் தோன்றியவுடன் நல்லற விழாக்கள் பலவெடுத்துள்ளன ரென்பவற்றை நூல்கள் வாயிலாகக் காண்கின்றோம். சிவப்பிரகாச சுவாமிகளியற்றியுள்ள பிரபுலிங்க லீலையில் மகவு தோன்றியதற்கு விழாவெடுத்ததைக் காண்மினோ!

மோகினி மகவீன்ற காலத்தில் பல இயங்களும் கடல்போன்றொலித்தன. சங்கமும், மத்தளமும், அயன்றுளமும், கொம்பு வாத்தியமும், ஆசையைப் பெருக்கு முடுக்கையும், வாதிரினல் செம்மையாகக் கட்டப்பெற்ற முரசங்களும், பெருமையும், நன்மையும், தண்மையும் பொருந்திய மோகினியானவள் பிள்ளை பெற்ற நாளிலே, மன்மதனது வெம்மை பொருந்திய முரசாகிய கடல் போலொலித்தன.

'சங்கொடு தண்ணுமை சச்சரி தாளம்
வங்கியம் வெந்துடி வார்முர சங்கள்
மங்கல மங்கை மகப்பேறு நாளில்
அங்கசன் வெம்முர சென்ன வதிர்ந்த." —பிரபுலிங்க லீலை.

ஒரு நல் மகவு தோன்றுங்காலை நன் முழுத்தத்தில் நல் முழக்கங்கள் தோன்றும். அதன் பயனாக விழாக்களும் உரிய முறையில் பெருகுப. பிள்ளைக் கனியமுதென்னின், ஞானிகளுமவர்களின் மழலைச் சொற்களுக்கு மயங்கியுள்ளனர். குழந்தையின் குழறலில் மனதைப் பறிகொடுத்தவர்கள்தான் மக்களினத்தில் பல்லோரும். தேசிய கவிஞர் பாரதியாரும் குழந்தையுள்ளத்திலீடுபட்டு, உண்மையு மன்பும், பண்பும், கசிவும் காட்டியின்புறுகின்றார்.

பாரதி பாட்டின் கருத்தாவது:

'கண்ணம்மா! நீ செல்வக் களஞ்சியம்; என்னை யாசை தீரவும், உலகிலேற்றம் புரியவும், வந்தாய்; நீ பொற சித்திரம்; உன்னை யள்ளியணைக்குங்கால், என்முன் ஆடி வருந்தேன்; நீயோடி வரும் பொழுது என்னுள்ளம் தண்மைபெறுகின்றது. நீ யாடித்திரிகின்ற போழ்து உன்னைப் போய் என்னுவி தழுவுகிறது; உன்னுடைய உச்சியை முகர்ந்திட்டா லென் உள்ளமதில் கருவமோங்கி வளர்கின்றது. உன்னை யூரார் மெச்சிப் புகழ்ந்தால், என் மேனி சிலிர்க்கின்றது; நீ யென் கன்னத்தில் முத்துமிட்டாலென்னுள்ளம் பெருமகிழ் வெய்துகின்றது. உன்னை யாசையாற் றழுவுகின்றபோழ்து, நான் ஊமையாகிவிடுகின்றேன்." எவ்வளவன்பு கொண்டுள்ளார் பாரதியாரென்று தெரிகின்றதல்லவா?

சின்னஞ்சிறு கிளியே—கண்ணம்மா!
செல்வக் களஞ்சியமே!

என்னைக் கலி தீர்த்தே—வுலகில்
ஏற்றம் புரிய வந்தாய்!
பிள்ளைக் கனியமுதே—கண்ணம்மா!
பேசும் பொற் சித்திரமே:
அள்ளி யணைத்திடவே—என் முன்னே
ஆடி வருந் தேனே!
ஆடி வருகையிலே—கண்ணம்மா!
உள்ளங் குளிரு தடி.
ஆடித் திரிதல் கண்டால்—உன்னைப் போய்
ஆவி தழுவுதடி!
உச்சிதனை முகந்தால்—கருவம்
ஓங்கி வளருதடி!
மெச்சி யுனை யூரார்—புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடி!
கன்னத்தில் முத்தமிட்டால்—உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடி!
உன்னைத் தழுவிடிலோ—கண்ணம்மா!
உன்மத்த மாகுதடி. —பாரதி-கண்ணம்மா-குழந்தை,

மேற்கண்டவற்றால், பிள்ளைப்பேற்றின் உயர்வுடைய நிலையை யீதென வுணரமுடிகின்றது. இனித் தெய்வத் திருவள்ளுவர் கூறும் மக்கட்பேற்றின் நிலையாதென வுணர்வோம்.

திருக்குறள் தொகுப்புரை.

ஒருவன் பெறும் பேறுகளில், அறிவு சான்ற மக்களைப் பெறுவ தல்லது, பிற பேறுகளை மதிப்பதில்லை. ஏழ் பிறப்பின்கண்ணும் பிறரால், பழிக்கப்படாத நன்மக்களைப் பெறுவராயின், ஒருவனைத் துன்பங்கள் சென்றடைய மாட்டா. தன் மக்களைத் தன் பொருளென நினைப்பர் பெற்றோர்; அம்மக்களின் பொருளவர் செய்யும், நல்வினை, தீவினை வயத்தான் தோன்றும். தம் மக்களின் சிறு கையால் அளாவப்பட்ட கூழ், அமிழ்தினும் மிக வினிமையுடையதாகும். தாங்கள் பெற்ற பிள்ளைகளினுடலைத் தீண்டுதல், தங்களுடலுக்கு இன்பம்; அவர்களின் சொற் கேட்டால் செவிக்கின்பம் பயப்பதாகும். தாங்கள் பெற்ற மக்களின் மழலைச் சொற்களைக் கேளாதவர்கள், குழலின் பமும். யாழின்பமும் சிறந்தவை யென்பர். தந்தை மகனுக்குச் செய்யு நன்றி, கற்று ரவையின்கண் முந்தியிருக்கச் செய்தலாகும். தந்தையைவிட, தனயன் அறிவுபெற்று விளங்குவது, மாநிலத்து மக்களுக்கெல்லாம் இனிதாம். ஈன்ற ஞான்றினும், தன்மகன் சான்றோனெனப் பிறர் கூறக் கேட்கும் தாய், பெரிதும் மகிழ்கின்றாள். கல்வியுடையனாக்கிய தந்தைக்கு மகன் செய்யுங் கைம்மாறு, இவன் தந்தை என்ன தவமியற்றினனோ இத்தகைய தனயன் தோன்ற வென்றெண்ணும் வகையிலமைதல் வேண்டும்.

"பெறு மவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற" —குறள்-அறம்-61.

# வரலாறும் செவிவழிச் செய்தியும் வாண கோவரையன்.

பேராசிரியர், திரு. அடிகளாசிரியர்.

சில நாட்களுக்கு முன் எங்களூரில் உள்ள வெள்ளாற்றில் காலைப் பொழுதில் குளித்துககொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு முதியவரும அங்கு வந்து குளிக்கத் தொடங்கினர். அவர் புதிய வராக யிருந்ததால் அவரை நோககி 'நீங்கள் எந்த ஊர்' என்றேன். அவர் தென்பொன்பரப்பி என்றார் (இவ்வூர் தென்னார்க்காடு மாவட்டத்தில் சின்ன சேலத்திற்கு மேற்கே மூன்று கல் தொலைவில உள்ளது) உடனே நான் 'உங்கள ஊரில் ஒரு சிவன் கோவில் இருக்கின்றதே அதனை யார் கட்டினார்கள்? என்றேன். அவர் 'வருணத்தினால் இலட்சம குதிரை திறை வாங்கிய வாண கோவரையன கட்டிய' தென்றார். நான் "வருணம" என்றால் என்ன? என்றேன், அவர் 'வருணம என்றால் நிறம்; வெள்ளை, கருப்பு, சிவப்பு, முதலான ஒவ்வொரு நிறங்களிலும் ஒவ்வொரு லட்சம் குதிரை அரசாகளை வென்று வாணகோவரையன் திறை வாங்கினான், என்றார். இதனைக் கேட்டவுடனே திருவண்ணாமலை அருணாசலேசுரர் கோயிற் கல்வெட்டுள் வாணகோவரையனைப் பற்றிய,

"முன்பொரு படைக்கடலை விட்டரச ராஜர்
மூலதன மும்பரியும் முறைமுறை அளிப்பார்
தென்பகை அடக்கியபின் வாணகுல தீபன்
செய்ததனி ஆண்மைவட திக்கிலறி கிற்பாம
பொன்பொரு பொருப்பரண் விடாமலைய மானைப்
போரெயினி லேபொருத போதொரு பெரும்போர்
வன்பகை தவிர்த்ததொரு குதிரைவலி யாலே
வடபகை தவிர்த்ததொரு கோவின்வலி யாலே"

என்னும் பாட்டுள் 'அரச ராஜர் மூலதனமும் பரியும் முறைமுறை அளிப்பார்' என்னுஞ் செய்தி செவி வழியாகவும் வழங்கப்படுதலைக் கேட்டு மகிழ்ந்தேன்.

அதன்பின் 'இன்னும் ஏதாவது வாணகோவரையனைப் பற்றிய செய்திகள் தெரியுமா? என்றேன். அவர் சொன்னது:—வாண கோவரையன் ஏழைக் குடுமபத்தில் பிறந்தவன். அவன் இளமை யில் மாடுமேய்த்துக்கொண்டிருந்தான். பொன்பரப்பி என்னும் ஊர்க்கு அண்மையில் 'பொன்னிட்டான் குட்டை' என்ற பெயரால் ஒரு குளமிருந்தது. அதனை அடுத்து இருந்த புதரில் பொன்னிறம்

பெற்ற உடும்பொன்று வாழ்ந்து வந்தது அதனைப் பிடித்துத் தலைக கறியை மட்டும் சமைத்துச் சாப்பிட்டால் அக்குட்டையின்கீழ் புதைக்கப்பட்டுள்ள பொற் குவியலும கிடைக்கும் அப்பொன்னைக் காத்துவரும பூதமும் அவன் வசமாகும இந்த இரகசியமான செய்தியை அறிந்த ஒருவன் அக்குட்டையை அடுத்த புதரண்டை வந்து உபாயத்தால் பொன்னுடும்பைப் பிடித்துக் கொண்டுபோய் மாடு மேய்த்துக்கொண்டிருந்த பையனின் தாயார் கையில் தந்து தலையை மட்டும வேருக எடுத்துத் தனக்குச் சமைத்துத் தருமபடியும் ஏனைய பகுதியைச் சமைத்து நீயே எடுத்துக்கொள் என்று சொல்லித் திட்டம் செய்துவிட்டு அவள் சமைககும் வரை வீட்டுத் திண்ணையில் தங்கியிருந்தான். அவள் சமைத்து வைத்துவிட்டுத் தண்ணீர் கொண்டுவரச் சென்ருள். அப்பொழுது அவள் மகன் புழைக் கடைவழியாய் வீட்டுககுள் நுழைந்து பார்த்தபொழுது அங்கே கறி சமைத்து வைத்திருத்தலைக் கண்டு தலைக்கறியை எடுத்துத் தின்று விட்டான். தண்ணீர் கொணடுவந்த தாய் தலைக்கறியை உடும்பு கொண்டுவந்தவற்கு இடுவதற்காகத் தேட பையன் தான் உண்டு விட்டதாகச் சொன்ஞன். இதனைக கேட்ட உடும்பு கொண்டு வந்தவன் மிகவும வருந்தி அப்பொருளை அடைய நமககு உககமில்லை என்று கூறிக்கொண்டு சென்றுவிட்டான் இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் பையனுடைய கனவில் பூதம் தோன்றித் தான் பொன் னிட்டான் குட்டையிலுள்ள புதையலைக் காத்துவருவதாகவும் நீ அதனை எடுத்துப் பயன்படுத்திக்கொள் தானும் நீ ஏவிய செயலை உனக்குச் செய்து 'தருவேன்' என்றது. அப்பையனும அவ்வாறே பொற் புதையலை எடுத்துக்கொண்டு பூதத்தைப் பணிகொண்டான். அப்பூதத்தின் உதவியால் பல அரசரை வென்று வாழ்ந்ததோடல் லாமல் திருவண்ணமலை அருணசலேசுரரிடத்தில் அளவிறந்த பத்தி கொண்டிருந்து அருணசலேசுரர் கோயிலில் பொன்னைப்பரப்பிக கோயிற் கலசம முதலான திருப்பணிகள் செய்து பொன்பரப்பினன் என்னும் பெயரைப் பெற்றுக்கொண்டான் என்றெல்லாம அவர் கூறினர்.

மேலே கூறிய இச்செய்திகளையெல்லாம் கேட்டவுடன் தமிழ் நாவலர் சரிதை, அதிவிநோதாசங்ரகம் முதலானவற்றில் வாணனைப்பற்றி எழுதப்பட்டுள்ள செய்திகள் நினைவிற்கு வந்தன.

அச்செய்திகளாவன :—''வாணகோவரையன் தன் பூதத்தை விட்டுச் சேர சோழ பாண்டியரைப் பிடித்துவரச் சொன்ஞன். அப் பூதம சேரனையும் சோழனையும பிடித்துவந்து கொடுத்துவிட்டுப் பாண்டியன் பேய்ப்பகையாகிய வேப்பமாலையை அணிந்திருக்கின்ற படியால் அவனைத் தன்னல் பிடித்துவரமுடியாது என்றது. உடனே வாணன் சிந்தித்து நாலு தாதியரைப் பாண்டியனிடத்துச் சென்று உபாயததால் அவனுடைய வேப்பமாலையை வாங்குமாறு கூறி ஏவினுன் அவரும சென்று பாண்டியனை ஆடல் பாடல் களால் மகிழ்வுறுத்தினர். மகிழ்ந்த பாண்டியன் அவர்களை நோக்கி

'உங்கட்கு என்னவேண்டும்' என்று கேட்டான். அவர்கள் பாண்டியனை நோக்கி நீ யணிந்த வேப்பமாலையே எங்கட்கு வேண்டும் என்று கூறி மூன்று பாட்டினைப் பாடினர், அப்பாண்டியன் அவர்கள் வேண்டுகோளைக் கேட்டும் பாட்டினைக் கேட்டும தன் வேப்பமாலையைக் கொடுக்க இசையவில்லை. அப்பொழுது அத்தாதியில் ஒருத்தி

'இலகுபுக ழாறை யேகம்ப வாணன்
அலகை வரும்வருமென் றஞ்சி—யுலகறிய
வானவர் கோன் சென்னியின்மேல் வண்ண வளையெறிந்த
மீனவர் கோன் கைவிடான் வேம்பு,

என்று பாடினளாம். இதனைக் கேட்டதும் பாண்டியன் நாணித் தன் மாலையைக் கொடுத்தான். அச்சமயம் பார்த்து பூதமானது பாண்டியனைத் தூக்கிகொண்டு வந்து வாணம் வசம ஒப்புவித்தது, என்பனவாகும்

இவ்வாறு வாணனுக்குப் பூதந் துணைபுரிந்துவந்த செய்தி கொங்கு மண்டல சதகம் ஐம்பத்துநான்காஞ் செய்யுளின் உரையில் எடுத்துக்காட்டாய் வந்துள்ள 'பூதந் துணைகொண்ட போர் வாணன்' என்னும் பாடற் பகுதியாலும் உணர்ந்துகொள்ளலாம்.

இங்ஙனம வரலாற்றுச் செய்தியை ஆங்காங்குள்ள மக்கள் திரித்தோ, திரியாமலோ, கற்பித்தோ பலவாறு வழங்குகின்றனர். அவற்றைக் கேட்டு எழுதினல் அவற்றிலிருந்தும் சில உண்மைகள் நமக்குப் புலனுகும்.

---

## கையறவு,

திருவையாறு அறுபத்துமூவர் மடத்தின் தலைவரும், பண்டித சாமிகள் என்று அழைக்கப்பெற்றவரும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தோடு தொடர்புடையவரும், தமிழறிஞரும் ஆகிய பண்டித நாராயணசாமி சுவாமி அவர்களின் மறைவு கேட்டுப் பெரிதும் வருந்துகின்ருேம். அவர் பிரிவால் துயருறும் அன்பர்களின் துன்பத்திலும் பங்குகொள்கின்ருேம்

—பொழிற்ருெண்டர்.

மதிப்புரை.

# மறைமலை யடிகள் வரலாறு.

'மறைமலை யடிகள் வரலாறு' என்னும் உரைநடை நூல் மறைமலை யடிகள் மகனார், வித்வான் மறை-திருநாவுக்கரசு அவர்களால் எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது இது நல்ல தாளில், 877 பக்கங்களை உடையதாக அச்சிடப்பட்டுள்ளது. இதன் விலை ரூ. 15-00.

தவத்திரு-மறைமலை யடிகளைக் கருதும்பொழுது அவர்களுடைய தமிழ்த் தொண்டும், சைவ சமயத் தொண்டும் ஆகிய இரண்டுமே நம் மனக்கண்முன் முதலில் நிற்கின்றன.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் பதினைந்து பதினாறும் ஆண்டு விழா 1937 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 23, 24 ஆம் நாட்களில் சிறப்புற நடந்தது. அதற்கு மறைமலை அடிகளார் தலைமை தாங்கி நன்கு நடத்திக் கொடுத்தனர். அப்பொழுது கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார். பாடிக்கொடுத்த வாழ்த்துப்பாவில் ........................................................செம்மையெலாம் தங்குங் கரந்தைத் தமிழ்ச்சங்கத் தெந்நாளும் பொங்குந் தனியன்பு பூண்டோனே," என்று, அடிகளார் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் வைத்திருந்த பேரன்பு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது,

தமிழ்ச் சொற்களோடு பலபல வேற்று மொழிச் சொற்களை மிகவும் கலந்து பேசியும் எழுதியும் பழகிவிட்ட குற்றத்தால், தமிழ் தனித்தியங்கா தென்றும், தனித்தியங்குவதற்கு வேண்டிய சொற்கள் அதனிடம் இல்லையென்றும் கூறிவந்த தமிழறிஞரெல்லாம் வியப் படையுமாறு, தூய செம்மையான உயர்ந்த தனித்தமிழ் நடையை எழுதிக் காட்டித், தமிழ் தனித்தியங்கும் உயர் தனிச் செம்மொழி என்பதை உலகுக்குப் புலப்படுத்திய பெருமை அடிகளுக்கே முதன் முதல் உரியது.

சைவ சமயத்தில் அங்கங்கே தன்னலமுடையவரால் திணிக்கப் பெற்ற ஒவ்வாத மாசுகளைப் போக்கி, அறிஞரெல்லாம் உடன்படும் மெய்ம்மையான கருத்துக்களைத் திரட்டித் தந்த பெருமையும் அடிகளுக்கே உரியது.

இவ்விரண்டு செயல்களால் அடிகளை நாம் தமிழ்க்குரவரென் றும் சைவ சமய குரவரென்றும் கருதி அவர்கட்கு வழிபாடு செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இங்ஙனம் சிறந்த அடிகளாரின் வரலாற்றை அறிந்துகொள் வதற்கு வரலாற்று நூல் இல்லாதிருந்தது பெருங் குறையே யாகும். இக்குறையை இந்நூல் போக்குகிறது. இந்நூல் பல தலைப்பில் பல செய்திகளைத் தருகின்றது. இந்நூல் பக்கம் 838 இல் 'தளர்ச்சி' என்னுந் தலைப்பில் "பதிப்பகத்தையும் விற்றுவிட்டார்கள் பொருள் நெருக்கடிதான், எப்படியோ காலத்தைக் கடத்திக்கொண்டிருந்தார் கள்." என்ற செய்தி அடிகளாரின் இறுதிக்கால வறுமையை நமக்கு எடுத்தியம்புகிறது. இது மிகவும் வருந்தத்தக்க தொன்றாகும்.

சிறந்த அறிஞரொருவர் உயிருடன் வாழும்பொழுது அவர்களை நாம் நன்கு போற்றி அவர்கள் தம் பேரறிவுப் பயனை நன்கு பெற எண்ணுவதில்லை என்பதையே இந்நிகழ்ச்சி தெரிவிக்கின்றது.

இவ்வரலாற்று நூலில் அங்கங்கே பல சுவையான செய்திகள் காணப்படுகின்றன. அவையெல்லாம் படிப்பவர்க்குப் பெரு விருந்தாயுள்ளன.

இந்நூலில் சில இடங்களில் தவறான செய்திகளும் தரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாகப் பக்கம் 469 இல் டாக்டர் சுரேந்திர நாத் ஆரியா என்பவரைப்பற்றி எழுதப்பட்ட வரலாற்றில் 'அவர் ஆந்திரர்' என்று குறிக்கப்பட்டுள்ளார் 'ஆந்திரர்' என்பது தெலுங்கு பேசுபவர் என்ற பொருளில் இருந்தால் அது தக்கது தான். ஆந்திர நாட்டில் வாழ்ந்தவர் என்ற பொருளிலிருந்தால் அது ஏற்புடையதன்று. ஏன் எனில் ஆரியாவின் தந்தையாகிய பாபிநீடு என்பவர் முன்னர் மைசூரிலிருந்து பின்னர் பெங்களூரில் வந்து வாழ்ந்திருந்தவராவார் ஆரியாவின் தாயார் திரிச்சிராப் பள்ளியிற் பிறந்த தாயார் என்னும் பெயருடைய அம்மையாராகும். ஆரியாவின் இளமைப் படிப்பு பெங்களூரிலேயே நடந்தது. மேலும் 'அவர் இந்து சமயத்தினின்றும் கிறித்துவம் புக்கவர்' என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இது உண்மையன்று அவர் பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தவரேயொழிய கிறித்துவர் அல்லர். ஆனால் அவர் மனைவி சுவிட்சர்லாந்திற் பிறந்த மாத்தா ஒகலி என்பவர் மட்டும் கிறித்துவராயிருந்தார். இவரை ஒரு நாளிதழ் கிறித்துவர் என்று குறிப்பிட்டு எழுதியிருந்தது. இதை உணர்ந்த ஆரியா 'நான் கிறித்துவன் அல்லன்' என்று அந்நாளிதழ்க்கு எழுதினர். அந் நாளிதழ் பின் திருத்தம் வெளியிட்டுகொண்டது. ஆரியா தனக்குப் பிள்ளைகளில்லை' என்று கூறியதாக எழுதப்பட்டுள்ளது. ஆனல், ஆரியாவிற்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றினர். என்று குறிக்கப்பட்டுள்ளது. அவர் அங்கு பணியாற்றியதாகத் தெரியவில்லை, ஆனல். லாகூர் டயால் சிங் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார், பின்னர் 'ஆரியா சிவநெறியின் கோட்பாடுகளை விளக்கினர். ஓர் நூலும் ஆங்கிலத்திலெழுதினர் அதில் அம்பலக் கூத்தன் அருள்வடிவ உண்மைகளை விளக்கினர்' என்று எழுதப்பட்டுள்ளது. ஆரியா அம்பலக் கூத்தன் அருள்வடிவ உண்மைகளை 'நடராசா தரிசனம்' என்ற பெயரால் தமிழில் எழுதி வெளியிட்டுள்ளனர். அதற்குத் தமிழவேள்—உமாமகேசுரம் பிள்ளையவர்கள் முன்னுரை தந்துள்ளார்கள். அந்நூலைப் பாராட்டியும் அதிலுள்ள இரண்டு குறைகளைக் குறிப்பிட்டும் மறைமலையடிகள் கடிதம் எழுதியுள்ளார்கள் ஆனல், ஆரியா சைவத்தைப்பற்றி ஆங்கிலத்தில் எழுதிய வெவ்வேறு நூல்கள் இருபதுக்கு மேல் இருக்கும். இத்தகைய குறைபாடுகளை ஆராய்ந்து நீக்கிக்கொள்ளுதல் நன்று.

— அடிகளாசிரியர்

# புறா பறந்தது

பாரதத்தின் தலைமையமைச்சர்

**திரு. இலால்பகதூர் சாத்திரியார்** மறைவு, நெருக்கடி மிகுந்த இந்நேரத்தில் நமக்கேற்பட்ட பேரிடியாகும். திரு. இலால்பகதூர் அவர்கள் அண்ணல் நேருவிற்குப்பிறகு யார் என்னும் வினாவிற்கு விடையாக அமைந்தவர்; நல்லவராகவும் வல்லவராகவும் வாழ்ந்து காட்டிய பெருமையுடையவர்; அடிகள் காந்தியின் எளிமையும் பழமையும் அண்ணல் நேருவின் புதுமையும் புரட்சியும் கொண்டு பாரதத்தை வழி நடத்தியவர்; உரிமைபெற்ற இவ்வளவு ஆண்டுகளில் சிக்கலும் இடையூறும் இவர் காலத்தில் மிக்கெழுந்தபோது அவற்றைத் திறமையுடன் எதிர்கொண்டு செயலாற்றியவர்; நேருவுக்குப் பிறகு இவரா என்ற வினாக்குறியோடு இவரை நோக்கியவர், பதினெட்டுத் திங்களில் இவரது செயலை மதிப்பிட்டு இவரே என்று பாராட்டும் படியான ஆற்றல் பெற்றவர்.

பாக்கித்தான் நம்மீது படையெடுத்தபோது நமது படைவலியைப் பாருக்குணர்த்திய பெருமை இவருக்குண்டு. ஆற்றலைக் கொட்டிய நெஞ்சத்தில் அன்பும் குடிகொண்டிருந்தது என்பதைத் **"தாசுகண்டு ஒப்பந்தம்"** தெளிவாக்கியது. எல்லைச் சிக்கலுக்குத் தீர்வுகாண, உருசியாவின் தலைமையமைச்சர் திரு. கோசிசன் முயற்சியால் கூட்டப்பெற்ற தாசுகண்டு மாநாட்டிற்குத் திரு. இலால்பகதூர் செல்லப்போகின்றார் என்னும்

செய்தி நமக்கெட்டியதும் நாம் உவகை கொண்டோம். உலகே அம்மாநாட்டை ஆவலுடன் எதிர் நோக்கிற்று.

அமைதியின் தூதுவராகத் திரு. இலால்பகதூர் தாசுகண்டிற்குச் சென்ருர் என்றவுடனேயே நாம் மகிழ்ந்தோம். அமைதியை நிலைநிறுத்தி அவர் வென்ருர் என்று கேட்டவுடனே நாம் பெருமகிழ்ச்சி கொண்டோம். ஆனல் அவர் நம்மைவிட்டுப் பிரிந்தார் என்னும் துயர்ச்செய்தி அறிவிக்கப்பட்டபோது அதனை முதலில் நம்ப மறுத்தோம். உண்மை அதுவே என்று உறுதிப் பட்டபோது நாம் செயலற்ருேம்.

எவ்வளவு பெரிய பேரிடி விழுந்தாலும் அதனைத் தாங்கிக்கொள்ளும் பக்குவத்தைப் பாரதம் பெற்று விட்டது. திரு. இலால்பகதூரின் மறைவால் விழியில் நீர் பெருகினும், இதயத்தில் துன்பம் தேங்கினும், உறுதியான நெஞ்சுடனும் ஓங்கிய நோக்குடனும் நாடு தனது இலட்சியப் பயணத்தைத் தொடர்கின்றது.

''வாழ்க வீரர்! வாழ்க உழவர்!'' என்னும் மறை மொழிக்குரியதாகப் பாரதம் இயங்குவதே அவருக்கு அது காட்டும் நன்றியாகும்.

புரு பறந்தது!... அதன் புகழ் நிலைத்தது!

**" நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்**
**பெருமை யுடைத்திவ் வுலகு "** —**தமிழ்மறை.**

—பொழிற்றெண்டர்,